# கல்கி

KALKI 27.11.94 ரூ. 3.00

விடை தருகிறோம் கபில்!




# சூப்பர்ஸ்டார் சச்சின்!



சேல்ஸ் & எக்ஸ்போர்ட் அலுவலகம் : குப்தா சாரீஸ் & டிரஸ் மெட்டிரியல்ஸ்
413 G.I.D.C. பண்டேஸாரா, சூரத்-394 221 (இந்தியா) போன் : 0091-261-690885 ஃபாக்ஸ் : 0091-261-691100

# சில சமயம் சட்டத்துக்குப் புறம்பான காரியங்களிலும் ஈடுபட வேண்டியிருக்கிறது!

– அடிபட்ட ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. பேட்டி



**ரா**யப்பேட்டை ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் உப்பிலியாபுரம் எம். எல். ஏ. ரவிச்சந்திரனைச் சந்தித்தோம். இரண்டு கை, கால்களில் கத்திக் குத்து, எலும்பு முறிவு. ஈ.சி.ஜி. மானிட்டர் ஓடிக் கொண்டிருக்க, ஒருபக்கம் ரத்தம் ஏறிக் கொண்டிருந்தது. அந்த நிலையிலும், மனிதர் நம்மிடம் மிகத் தாழ்வான குரலில் பேசினார் :

"நான் மலையில் பிறந்து வளர்ந்தவன். எங்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் இருக்கு. அதில் குச்சிக் கிழங்கு (மரவள்ளி) போட்டிருக்கோம். புரட்சித் தலைவி பக்கம்தான் துவக்கத்திலிருந்து இருக்கேன். மலையில் ஓடியாடி கட்சி வளர்த்தேன். 'நான் ஏன் தாக்கப்பட்டேன்' என்பது குறித்துப் பல்வேறு செய்திகள் பத்திரிகைகளில் வந்துக்கிட்டு இருக்கு. சென்ற வருடம் போலீஸ் ஸ்டேஷனில் இருந்த என் ஆதரவாளரை விடுவித்துக் கொண்டு போனதாய்க் குற்றச்சாட்டு. அதன் பிறகு புரட்சித் தலைவி என்னைக் கூப்பிட்டு "புத்திமதி" சொன்னார்.

"ஒரு எம்.எல்.ஏ. கிட்டே மக்கள் என்னவெல்லாமோ எதிர்பார்க்கிறாங்க! தினசரி காலையிலிருந்து மாலை வரை, கல்யாணம், கருமாதி, ஆஸ்பத்திரிச் செலவு என்று என்னிடம் பணம் எதிர்பார்த்து வருகிறவர்கள் ஏராளம். அவர்களை நான் ஏமாற்ற முடியாது. இதற்கெல்லாம் அன்றாடம் பத்தாயிரம் ரூபாய் தேவையாக இருக்கும். அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது? ஆகையால் சில சமயங்களில் சட்டத்துக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட வேண்டியிருக்கிறது. ஓர் ஊரில் பத்து முக்கியஸ்தர்கள் இருந்தால், எம்.எல்.ஏ., அவர்களுக்கே எல்லா உதவியும் செய்ய வேண்டியதாக இருக்கு. வோட்டுப் போட்ட இரண்டரை லட்சம் மக்களைக் கவனிப்பது எப்போது?

## அடுத்த இதழில்....

# கலக்குது பார் நம்ம ஸ்டைலே... !

- கவர் ஸ்டோரி

எதைப் பற்றி...?

**Keep guessing!**

இதனால் உண்டாகும் சச்சரவுகள் வேறு.

"சந்தனக் கடத்தல் விவகாரங்களுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை! லோக்கல் காண்ட்ராக்ட் விவகாரங்களில் நான் தலையிடுவது இல்லை. ஒன்றிய ஆட்களே பார்த்துக் கொள்வார்கள். ஆக, நான் எதற்காகத் தாக்கப்பட்டேனென்று எனக்கே தெரியவில்லை. ஒரு சாதாரண மலைஜாதி ஆனை கௌரவமான நிலைக்கு உயர்த்தியவர் புரட்சித் தலைவி. என் கடைசி மூச்சுவரை அவர் புகழ் பாடிக் கொண்டிருப்பேன்."

மந்திரிகள் வந்து பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். வழக்கப்படி போலீஸ் "புலன் விசாரணை" நடந்து கொண்டிருக்கிறது. ஒன்று மட்டும் புரிகிறது. தாக்கியவர்களின் நோக்கம், ரவிச்சந்திரனைக் கொலை செய்வதல்ல; கை, காலை உடைத்துப் 'பாடம்' கற்பிப்பது என்பது தான் அது.

ஓர் எம்.எல்.ஏ. தாக்கப்படுவது என்பது இது முதல் முறையல்ல. ஆளும் கட்சியிலேயே பல எம்.எல்.ஏக்கள் இவ்வாறு தாக்கப்பட்டிருக்கிறார்கள்; தாக்குதல் தொடர்பான மர்ம முடிச்சுகள் இன்னும் அவிழ்க்கப்படவே இல்லை. உதாரணங்கள் :

●● 'உள்ளூரில் உள்ள அரசு அதிகாரிகள், தாம் சொன்னதைக் கேட்காமல் எதிர்கோஷ்டியின் பேச்சைக் கேட்கிறார்கள்' என்று பிரச்னை பண்ணிக் கொண்டிருந்த தூத்துக்குடி அதி.மு.க. எம்எல்ஏ. ரமேஷ், சென்னையில் - பழைய மாம்பலத்தில் தாக்கப்பட்டார். அவர் வந்த கார் காயலாங் கடைக்குப் போகும் அளவுக்குத் தாக்கப்பட, மனிதர் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று தப்பித்து ஓடினார்.

●● மதுராந்தகம் தொகுதி அதி.மு.க. எம்.எல்.ஏ. சொக்கலிங்கம், தாசில்தாரைப் போய் மிரட்டினார். லோக்கல் கட்சிக்காரர்களுடன் தகராறு. விளைவு : எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் புகுந்து ஆளைக் கடத்திக் கொண்டு போய், கையை ஒடித்து அனுப்பினார்கள்!

●● தொட்டியம் தொகுதி ஆளும் கட்சி எம்.எல்.ஏ. சிவபதி, தொகுதியில் கால்வாய்ப் பாசனம் பற்றி பிரச்னை செய்து கொண்டிருந்ததால், அவரைத் தாக்க வந்த கும்பல் அவர் வீட்டுக்குத் தீ வைத்தது. எம்.எல்.ஏ. துப்பாக்கியைப் பயன்படுத்தித் தப்பித்தார்.

●● ஆத்தூர் (அண்ணா மாவட்டம்) தொகுதி அதி.மு.க. எம்.எல்.ஏ. துரை, திருச்சி மாலா, ஆகியோரும் தங்கள் கட்சி ஆட்களாலேயே தாக்கப்படும் சூழ்நிலையிலிருந்து மயிரிழையில் தப்பித்திருக்கின்றனர்.

இத்தகைய அவல நிலைகளுக்குக் காரணம் என்ன? தேர்தலில் நிற்க டிக்கெட் கொடுப்பதற்குமுன் அவர்களின் குடும்பப் பின்னணி, சமுதாய அந்தஸ்து, நல்லொழுக்கம் முதலியவற்றில் போதிய கவனம் செலுத்தாமைதான். 'தேர்தலுக்கு எவ்வளவு பணம் செலவழிப்பாய்; கட்சிக்கு எவ்வளவு பணம் தருவாய்?' என்பன மட்டுமே நேரடி பேட்டியிலும் முக்கிய கேள்விகளாகும்போது, அத்தகைய கட்சித் தலைவருக்குத் தலைகுனிவை ஏற்படுத்தும் எம்.எல்.ஏக்கள் தான் வந்து சேர்வார்கள்.

பேட்டி, கட்டுரை : **ப்ரியன்**

படம் : **ராஜு**

# பத்மினி வழக்கு— காவலருக்கு இடிக்கு!

**''ஒரு பெண் எத்தனை கீழ்மட்டத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும், அவளை வெகு எளிதாக மானபங்கப்படுத்தி விட்டு அதிலிருந்து தப்பித்துவிடலாம் என்ற நினைப்பைக் காவலர் மனத்தில் உருவாக்கக் கூடாது.''**



* நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார்

பத்மினி விவகாரம் பெரும் கண்டனத்தையும் அரசுக்கும் போலீஸ் துறைக்கும் தலைகுனிவையும் ஏற்படுத்தவே, அரசு விசாரணை கமிஷன் அமைத்தது. நீதிபதி பழநியப்பன் விசாரணை முடித்து, அறிக்கையை ஜனவரி மாதமே அரசுக்கு அளித்த போதிலும், இம்மாதம் 10ஆம் தேதிதான் அதை வெளியிட்டிருக்கிறது!

கமிஷனின் முடிவுகள் குறித்து நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களிடம் கருத்துக் கேட்டோம்:

''காவல் நிலையத்தில் வைத்து, பத்மினியின் சேலையை உருவி, அவளை நிர்வாணமாக்கிக் கொடூரமாகத் தாக்கியதை, கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது. கற்பழிப்பு நடந்ததாகப் பத்மினி சொல்லுவதை கமிஷன் ஏற்கவில்லை. காரணம், அதற்கான வலுவான ருசு ஏதும் இல்லாததுதான். கற்பழிப்புக்குப் பத்து வருட சிறைத் தண்டனை உண்டு. இப்படிக் கடுமையான தண்டனை வழங்கும்போது, அதற்குண்டான ருசுவும் அசைக்க முடியாததாக இருக்க வேண்டும்.

"உடனடியாக பத்மினியை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பியிருக்க வேண்டும் என்று கமிஷன் கூறுகிறது. இதை ஏன் முதலில் விசாரித்த ஆர்.டி.ஓ. செய்யத் தவறினார் என்றும் குறிப்பிடுகிறது. கற்பழிப்பு வழக்குகளில், கற்பழிக்கப்பட்டார் என்று ருசுப்படுத்துவது மிகக் கடினம். ஆனால் அப்படி ருசுவானால் தண்டனையும் மிகக் கடுமையாகவே இருக்கும்.

"அடுத்தவன் மனைவியைக் கையைப் பிடித்துத் தொடுவதே 'அவுட்ரேஜிங் த மாடஸ்டி அஃப் த உமன்' என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணை மானபங்கப்படுத்துவது என்பது மிகக் கொடிய செயல். அதிலும் மக்களின் பாதுகாப்பைக் காக்கவே நிறுவப்பட்டுள்ள காவல் நிலையங்களிலேயே இதுபோன்ற கொடூரம் நிகழ்வது நினைத்துப்பார்க்கக்கூட முடியாத ஒன்று. எனவே குற்றம் இழைத்த காவலர்களுக்குத் தண்டனை விதித்திருப்பதோடு, இலாகா மூலமான விசாரணையும் தொடர வேண்டும் என்று கமிஷன் கூறியிருப்பது குறிப்பிடத் தகுந்தது.

"ஒரு பெண் எத்தனை கீழ்மட்டத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும், அவளை வெகு எளிதாக மானபங்கப்படுத்தி விட்டு அதிலிருந்து தப்பித்துவிடலாம் என்ற நினைப்பைக் காவலர் மனத்தில் உருவாக்கக் கூடாது. காவல் துறையினரே இப்படி அநியாயங்களுக்கும் கொடூரங்களுக்கும் துணை போகாமல் இருக்க, இது போன்ற குற்றங்களை மிகக் கடுமையாகப் பார்க்க நீதிமன்றங்கள் முன்வர வேண்டும்.

"காவல் துறையின் ஒரு சிறு அங்கமே இதைச் செய்தது என்று இந்த விஷயத்தைச் சின்னதாக நினைக்கக்கூடாது. சமுதாயத்தில் பெண்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பதால், இதைச் சின்ன அவமானமாக மட்டுமே கருதி ஒதுக்கிவிடக் கூடாது. இனி இவை போன்ற குற்றங்கள் காவல் நிலையங்களில் அறவே நடக்க முடியாதவாறு அரசும், நீதிமன்றங்களும் இவற்றைக் கடுமையான குற்றங்களாகப் பார்க்க வேண்டும்.

" 'கற்பழித்தல்', 'மானபங்கப்படுத்துதல்' என்று வேறுபடுத்தி தண்டனை நிர்ணயிப்பதே கேள்விக்குரியது. இது தொடர்பான சட்டங்கள் 150 ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் ஆட்சியில் மகாலேயால் இயற்றப்பட்டவை; நமது கலாசாரத்துக்கு முரணானவை. பெண்களும் அவர்களுக்கான அமைப்புக்களும், இந்தச் சட்டங்களைச் சரிவர மாற்றக் கோரி போராட வேண்டும்."

- எஸ்.வி.என்.



# சூப்பர் ஸ்டார் சச்சின்!

கபில்தேவ் ஒரு சர்வதேசத் தரம் வாய்ந்த ஆல்-ரவுண்டராக விளங்கினார். அவர் ஓய்வு பெற்று விட்ட நிலையில், அவரது ஆல்-ரவுண்டர் இடத்தைப் பெறும் தகுதி யாருக்கு இருக்கிறது? 'பூஸ்ட்' விளம்பரத்தில் கபிலோடு இணைக்கப்பட்ட சச்சின் டெண்டுல்கருக்கா? அல்லது மனோஜ் பிரபாகருக்கா?

"பிரச்னைகளில் சிக்கிக் கொள்ளாமலிருந்தால் இந்தியாவின் நம்பர் ஒன் ஆல்-ரவுண்டராக கபிலின் இடத்தை நிரப்பக் கூடியவர் மனோஜ் பிரபாகர்" என்று 'ஹிந்து' பத்திரிகையின் கிரிக்கெட் விமர்சகர் ஆர். மோகன் எழுதியுள்ளார்.

"நிச்சயம் சச்சின் டெண்டுல்கரால் கபிலின் இடத்தை நிரப்ப முடியும். பேட்டிங்கில் - அவரது வயதோடு ஒப்பிடவே முடியாத அளவுக்கு - ஞானம் இருக்கிறது அவருக்கு. பொதுவாக பதினைந்து வருடங்களாவது விளையாடினால்தான் இப்படி ஒரு பக்குவப்பட்ட ஆட்டம் வரும். அதுவும் தன்னை நோக்கி வரும் பந்தை, பந்து வீச்சாளரின் பக்கமோ, மிட்-ஆஃபிலோ அவர் சுழற்றித் திருப்பி விடும் லாகவம் சிறப்பான ஒன்று. அதிலும் அந்த டைமிங் குறிப்பிடத்தக்கது. என் இவ்வளவு ஆண்டு அனுபவத்தில் கேரி சோபர்ஸின் பேட்டிங்கை மட்டுமே டெண்டுல்கரின் பேட்டிங்கிற்கு இணையாகக் கூற முடிகிறது. அற்புதமான ஃபீல்டரான டெண்டுல்கர், பந்து வீச்சிலும் தன் திறமையைக் காட்டுகிறார்" என்கிறார் முன்னாள் ரஞ்சி கோப்பை விளையாட்டு வீரரான பவநாராயணன்.

ஆயினும், இன்றைய ரஞ்சி கோப்பை விளையாட்டு வீரரான வெங்கட்ரமணாவின் கருத்து சற்றே மாறுபடுகிறது. "இப்போதைக்கு கபிலின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. ஆலன் பார்டர் ஓய்வு பெற்றார். அவரது இடத்தை இன்னமும் யாராலும் நிரப்ப முடியவில்லையே! டெண்டுல்கர் சிறந்த பாட்ஸ்மென்; தேர்ந்த ஃபீல்டர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சிறந்த பந்து வீச்சாளர் என்று அவரைச் சொல்ல முடியாது. ஒருநாள் பந்தயங்களில் பௌலிங்கில் பேரெடுத்தால் போதாது. டெஸ்ட் பந்தயம் என்கிற அக்னி பரீட்சையில் தேறினால்தான் ஒருவரை சிறந்த பௌலர் எனலாம்" என்கிறார் அவர்.

இதே கருத்தைத்தான் ஸ்ரீகாந்தும் கூறுகிறார் : "கபிலின் இடத்தை மற்றொருவர் நிரப்புவதா? நெவர். கபில் ஆல்-ரௌண்டர் மட்டுமல்ல, மேட்ச்-வின்னரும் கூட. ஆல்-ரௌண்டராக விளங்க பயிற்சி மட்டும் போதாது. இயல்பாகவே அந்தத் திறமை ஒருவரிடம் பொதிந்திருக்க வேண்டும். சச்சின் டெண்டுல்கர் ஒரு திறமையான பேட்ஸ்மேன். அவ்வளவே. அதற்காக கபிலுடன் டெண்டுல்கரை ஒப்பிட முடியாது. இப்போ இருப்பவர்களில் சிறந்த ஆல்-ரௌண்டர் என்று மனோஜ் பிரபாகரைக் குறிப்பிடலாம்."

பதினாலு வயதிலேயே கிரிக்கெட் பார்ட்னர் ஷிப்பில் உலக சாதனையைப் புரிந்தது; பதினாறு வயது ஆவதற்கு முன்பே தன் முதல் ரஞ்சி போட்டியில் சதம் அடித்தது; டெஸ்ட் கிரிக்கெட்டில் ஐந்து சதங்களும், ஆயிரம் ரன்களும் எடுத்தது...

ஒரு டிரைவிங் லைசென்ஸ் பெறக்கூடிய வயதை அடைவதற்கு முன்பே இத்தனை சாதனைகள் படைத்தார் சச்சின்!

யார்க்ஷையர் அணியில் இடம் பெற்ற முதல் இந்தியரும் இவர்தான். சொல்லப்போனால் ஆங்கிலேயர் அல்லாத ஒருவரை அப்படி அழைத்ததும் அனுமதித்ததும் அதுதான் முதல் தடவை.

இதன் காரணமாகவோ என்னவோ, பள்ளித் தோழரான வினோத் காம்ப்ளி இவரைப் பற்றிக் குறிப்பிடும் போது, "டெண்டுல்கர் எஸ்கலேட்டர் வழியாகச் சர்ரென்று மேலேறி விட்டார். நான் மாடிப் படிகளில் ஏறிக் கொண்டிருக்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உண்மைதான். கிரிக்கெட் பரமபதத்தில் சரசரவென்று பல ஏணிகளை அனாயாசமாகக் கடந்திருக்கிறார் சச்சின் டெண்டுல்கர். இறங்கியது என்னவோ அபூர்வமாக சில குட்டிப் பாம்புகளில் மட்டுமே.

"டெண்டுல்கரின் இளம் தோள்கள் அநாயாசமாக பாரத்தைச் சுமக்கின்றன" என்றார் ஆலன் பார்டர். "தன் குழுவை வெற்றி இலக்கை நோக்கி இழுத்துச் செல்லும் டெண்டுல்கரின் திறமை பற்றி அவர் குறிப்பிட்டிருந்தாலும், பலரது புகழ் மாலைகளைத் தாங்க வேண்டிய நிலையில் டெண்டுல்கர் இருப்பதையும் அவர் குறிப்பிட்டதாகவும் கொள்ளலாம். போரிஸ் பெக்கர், முகமது அலி, பீலே போன்றவர்கள் டென்னிஸ், குத்துச் சண்டை, கால்பந்து ஆகியவற்றில் எந்த அளவுக்கு அசாதாரணமானவர்களோ, அந்த அளவுக்கு கிரிக்கெட்டில் டெண்டுல்கரும் அசாதாரணமானவர்!" என்கிறார் பிரபல வர்ணனையாளர் டோனி கோஸியர். "ஜடேஜாவையும், அஸாருதீனையும் நான் குறைந்து மதிப்பிடவில்லை என்றாலும் இந்திய அணியை வெற்றிமுகம் நோக்கி அழைத்துச் செல்வதில் முக்கியப் பங்கை வகித்துக் கொண்டிருப்பவர் டெண்டுல்கர்தான்!" என்றிருக்கிறார் சமீபத்தில் வில்ஸ் கோப்பை ஆட்டத்திற்காக வந்திருந்த மேற்கிந்திய அணியின் கேப்டன் வால்ஷ்.

இத்தனைக்கும் கிரிக்கெட் ஒன்றும் டெண்டுல்கரின் 'ஜீனி'ல் ஊறிய விஷயமல்ல. இவரது அப்பா ரமேஷ் டெண்டுல்கர் ஒரு கல்லூரிப் பேராசிரியர். அம்மா ரஜினி ஒரு குடும்பத் தலைவி. இவர்களின் நான்கு குழந்தைகளில் கடைக்குட்டி சச்சின் டெண்டுல்கர்.

மிகச் சிறு வயதிலிருந்தே கிரிக்கெட் வெறிபிடித்து அலைந்த சச்சினைப் புரிந்து கொண்டதுடன், அவரது ஆட்டம் மெருகேறவும் உதவியவர்கள் அவரது அண்ணா அஜித் டெண்டுல்கர், பயிற்சியாளர் ரமாகாந்த் ஆகியோர்.

தொடக்க காலத்தில் சிவாஜி பார்க் பகுதியிலுள்ள தமது உறவினர் வீட்டில் அடிக்கடி தங்குவாராம் சச்சின் டெண்டுல்கர். காரணம் அங்கிருந்து சாலையைக் கடந்தால் போதும், மைதானம் வந்து விடும். அதிக நேரம் நெட் ப்ராக்டிஸ் செய்யலாமே என்ற எண்ணம் தான்!



தோற்றத்தை வைத்துப் பார்த்தால் சச்சினின் சாதனைகள் நம்மை மேலும் ஆச்சரியப்பட வைக்கும். காரணம், உயரக் குறைவானவர். இனிப்புகளை அதிகம் விரும்பிச் சாப்பிடுவதாலோ, என்னவோ கொஞ்சம்

# விடை தருகிறோம் கபில்!

"இனி நான் சுதந்திரமாகப் பேசலாம்" என்று வர்ணனையாளர் குழுவில் இடம்பெற்ற போது நகைச்சுவையாகக் குறிப்பிட்டார் கபில்தேவ். என்றாலும் வர்ணனையாளராக மட்டுமே அவர் தன் வருங்காலத்தைக் கழித்து விட மாட்டார். வேறென்ன செய்வார் என்பதைப் பற்றிப் பல யூகங்கள். சில மாதங்களுக்கு முன் "ஸ்போர்ட்ஸ்டார்" இதழில் சிலர் வெளியிட்ட கருத்துக்கள் :

**வெங்சர்க்கார் :** "கபில் ஒரு திறமைசாலியான வியாபாரியாக பிரகாசிப்பார்."

**மதன்லால் :** "பந்து வீச்சாளர்களுக்குப் பயிற்சி மையம் ஒன்றைத் தொடங்கலாம். இந்த விஷயத்தில் அவருக்கு உதவி செய்ய நான் தயார்."

**பிஷன் சிங் பேடி :** "தேர்வாளராக இருக்கத் தமக்கு விருப்பம் கிடையாது என்றிருக்கிறார் கபில். நல்ல பயிற்சியாளராக அவர் விளங்க முடியுமா என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை."

**சேட்டன் சர்மா :** "ப்ரொபஷனல் கோச்சாக அவர் மின்ன வாய்ப்பு அதிகம். சீனியர் என்ற காரணத் தாலும், சாதனையாளர் என்ற காரணத்தாலும் விளையாட்டு வீரர்களுக்கு அவரிடம் அசாத்திய மரியாதை உண்டு. இந்தியக் குழுவின் மானேஜராகவும் அவர் இருக்கலாம்."



வேகப் பந்து வீச்சாளர்களை உருவாக்கும் வகையில் ஒரு பயிற்சி மையத்தை கபில்தேவ் உருவாக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் அதிகம். பேடி, பிரசன்னா, சந்திரசேகர், வெங்கட்ராகவன் என்று ஸ்பின் பந்து வீச்சாளர்களையே அளித்து வந்த இந்தியா, வேகப் பந்து வீச்சிலும் முத்திரை பதிக்க முடிந்ததென்றால் (அதுவும் விக்கெட் எண்ணிக்கையில் உலக சாதனை படைக்குமளவிற்கு) அதற்கு கபில்தேவ்தான் முக்கியக் காரணம். எனவே பல இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு இவர் இந்தக் கோணத்தில் பயிற்சி அளிப்பது கபிலுக்கும் ஏற்றது; இந்தியக் கிரிக்கெட்டுக்கும் நல்லது. இதற்கான மையத்தை உருவாக்க அரசு இலவசமாக நிலத்தைத் தந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இனி கபிலும் களத்தில் இறங்க வேண்டும்.

---

பருமனான உடல்வாகு வேறு. இத்தனைக்கும் நடுவில்தான் சாதனை!

ஆயினும் கொழும்பில் அவர் (ஒரு நாள் போட்டியில்) எடுத்த முதல் சதம் அவருக்குப் பெருமை சேர்த்ததாகச் சொல்ல முடியாது. பிற்பகுதியில் தமது சதத்தை மட்டுமே குறி வைத்து வழக்கத்துக்கு மாறாக மிக மெது வாக ஆடியதற்காக அஸாருதீன் அவரைக் கடிந்து கொண்டார். என்றாலும் அதன் பிறகு அவர் தமது தவறைத் திருத்திக் கொண்டு விட்டார் என்றுதான் தோன்று கிறது. இல்லையென்றால் அண்மையில் நடந்த வில்ஸ் கோப்பைக்கான தொடர் ஆட்டப் போட்டிகளில் சிறந்த ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பாரா?

இந்த இளம் வயதிலேயே பல சர்வதேசச் சாதனைகளைச் செய்து கொண்டிருக்கும் சச்சின், இன்னமும் கரையைக் கடக்காத ஓர் இளம் புயல் என்றே சொல்லலாம். இந்தப் புயல் மேலும் பலம் பெற்ற பிறகு கரையைக் கடக்கும் போது எத்தனை ரிகார்டுகளை முறியடிக்கப் போகிறதோ!

**- அருண் சரண்யா**

அட்டை வண்ணப்படம், படங்கள் : **சாரி**



# துப்புரவுத் தொழிலாளரின் துயர் என்று நீங்கும்?

இருபத்தோராம் நூற்றாண்டை நெருங்கும் இந்த நேரத்திலும் மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலை, நம் நாட்டில் பல இடங்களில் நீடிக்கிறது. இந்த நிலை அடியோடு மாற வேண்டும் என்ற உறுதியில் பிரதமர் ஏற்படுத்தியதுதான் துப்புரவுத் தொழிலாளர்களுக்கான தேசியக் கமிஷன். இதன் துணைத் தலைவரான ஐ.பி.டி. சாலப்பா சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தார். சந்தித்தோம்.

"இந்தக் கொடுமையான - மனிதாபிமான மற்ற தொழிலில் கிட்டத்தட்ட பதினைந்து லட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் நகர சபைகள், டவுன் பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றில் வேலை செய்கிறார்கள். இவர்களை இந்தத் தொழிலிலிருந்து விடுவித்து, வேறு துப்புரவுப் பணிகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவும், அவர்களது வாரிசுகளுக்கு வேறு தொழில்கள் செய்ய பயிற்சி கொடுக்கவும்தான் இந்த கமிஷன் உருவாக்கப்பட்டது.

"ஆயினும் உலர்ந்த கழிவறைகள் முற்றிலும் அகற்றப்பட்டால்தான் இக் கொடுமையான தொழிலுக்கு முடிவு காலம் ஏற்படும். இதற்காகத்தான் ஹட்கோ மூலம் மாநில அரசுகளுக்கு நிதியுதவி அளித்து, உலர் கழிவறைகளை ஃப்ளஷ் அவுட் கழிவறைகளாக மாற்றச் சொல்லி வருகிறோம்.

"கமிஷன் செயல்படத் துவங்கி இரண்டு மாத காலம்தான் ஆகிறது. எனினும் மாநிலங்களுக்கு விசிட் செய்து, அங்குள்ள நிலைமைகளைக் கண்டு வருகிறோம். சொல்லவே கஷ்டமாக இருக்கிறது. பீகார், உ.பி. போன்ற மாநிலங்களில், இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், வெறுங்கைகளையே பயன்படுத்துகிறார்கள். மாநகராட்சிகளும், நகர சபைகளும், அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் கூட வாங்கித் தருவதில்லை என்ற கேவலத்தை நேரில் கண்டோம்.

"1991-92 ஆம் வருடத்தில், உலர்ந்த கழிவறைகளை அகற்ற ஐந்து கோடி ரூபாய் தமிழகத்துக்கு ஹட்கோ மூலம் கொடுக்கப்பட்டது. முற்றிலும் செலவழிக்காமல் இருந்ததால், தொடர்ந்த வருடங்களில் நிதியுதவி கொடுக்கப்படவில்லை.

"தமிழ்நாட்டில், தாம்பரம், செங்கல்பட்டு, திண்டிவனம் நகரசபை பகுதிகளைச் சுற்றிப் பார்த்தேன். தாம்பரம் நகர சபைக்குக் கொடுக்கப்பட்ட பணம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. 4428 கழிவறைகள் கட்ட ஒரு கோடியே முப்பத்தி எட்டு லட்சம் நிதியுதவி செய்யப்பட்டதில் இதுவரை 1700 கழிப்பறைகள்தான் கட்டப்பட்டுள்ளன. மாநில தலைமைச் செயலாளரிடம் கூட இதுபற்றிப் பேசியிருக்கிறேன்" என்றார் சாலப்பா.




• சாலப்பா

"எங்கள் கர்நாடக மாநிலத்தோடு ஒப்பிடும் போது தமிழகத்தில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசம். பெங்களூரில் பாதாளச் சாக்கடையைச் சுத்தம் செய்ய மிஷின்கள் உபயோகிக்கிறோம். இங்கு இன்னமும் மனிதன்தான் இறங்கிச் செய்து கொண்டிருக்கிறான். இந்தக் கொடுமையையும் ஒழிக்க, கமிஷன் நடவடிக்கை எடுக்கும்" என்றார் அவர்.

சந்திப்பு : **ஸ்ரீநிவாசன்**

படம் : **ராஜன்**


ஓடியாறாங்க!
ஓடியாறாங்க!
விடுதலைப்புலிகள்
இங்கதான் ஒளிஞ்சிட்
-டிருக்காங்க...!
பிரதமர்
அப்படி ஒண்ணும் நான் சவால் விடலையே!
என்னைக் காப்பாத்திக்க எனக்குத் தெரியாதா?
சவால்! சவால்! ஜோரா குதிப்பேன்; கும்முன்னு நீந்துவேன்...
கர்நாடகா ஆந்திரா தேர்தல்கள்
இருபது அமைச்சர்களும் இங்க என்னத்த கிழிக்கப் போறாங்க...
7 தொகுதி காங்கிரஸ் வேட்பாளர்களையும் மண்ணைக் கவ்வ வைக்க முடியுமா பாருங்க...
ஆந்திரா
ஜெ.
கர்நாடகா




# கல்கி



1994
நவம்பர் 27
பவ
கார்த்திகை 11
மலர் : 53
இதழ் : 17


தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

## கிளிண்டனுக்குத் திண்டாட்டம்!

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கிளிண்டனை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்த அதே மக்கள், தற்போது அமெரிக்க காங்கிரஸுக்கு - அதாவது நமது நாடாளுமன்றம் போன்றது - குடியரசுக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களையே பெரும்பான்மையினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். இது கிளிண்டனைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

'ஏன் இப்படி நடந்தது' என்று அலசினால், முதலாவதாக கிளிண்டன் எந்தக் கொள்கைகளை அமுல்படுத்துவதாகக் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்தாரோ, அந்தக் கொள்கைகளும் கடந்த இரண்டு ஆண்டுகளில் அவற்றின் அமுலாக்கமும் மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. கொள்கைகளிலே தவறா அல்லது அவற்றின் அமுலாக்கத்தில் குற்றமா என்பது பாடப் புத்தகச் சர்ச்சை. மக்களுக்கு அது பற்றி அக்கறை கிடையாது. அவர்களைப் பொறுத்தமட்டில் ஆட்சி திருப்தி அளிக்கவில்லை என்பதைக் காட்டி விட்டார்கள்.

இரண்டாவது காரணம், ஒயிட் வாட்டர் ஊழல் விவகாரம், ஒரு பெண்ணிடம் அவர் காமாதுரனாக நடந்து கொண்டதாகக் குற்றச்சாட்டு போன்ற பழங்கதைகள் கிளறப்பட்டன. கொள்கைகளை விடுத்து, தனிநபர் செயல்பாடு குறித்த விமர்சனம் இந்தத் தேர்தலில் போல் என்றுமே நடந்ததில்லை. மூன்றாவதாக ஜனாதிபதி தேர்தலில் ராஸ்பெரோ என்பவர் சுயேச்சை வேட்பாளராக நிற்கப் போக, அந்த ஜுரம் வேறு பலரையும் பற்றிக் கொள்ள, மூதன் முறையாக அமெரிக்க காங்கிரஸ் தேர்தலில் பல சுயேச்சை வேட்பாளர்கள் போட்டியிட்டு, வோட்டுக்களை ஓரளவு சிதற அடித்தார்கள்.

சிற்சில அம்சங்களில் அமெரிக்க ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் வானளாவியது என்பது ஒருபுறமிருந்தாலும் கிளிண்டன், காங்கிரஸை அலட்சியப்படுத்த முடியாது. இன்றைய சூழலில் தமது திட்டங்களை நிறைவேற்றப் பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருக்கும். காங்கிரஸில் உள்ள குடியரசுக் கட்சியினரின் திருத்தங்களை ஏற்று, விட்டுக் கொடுக்க நேரிடும். இதே நேரத்தில் மக்கள் ஆதரவை மறுபடி ஜனநாயகக் கட்சிப் பக்கம் திருப்ப என்ன செய்யலாம் என்றும் அவர் யோசித்து, நல்லாட்சி வழங்க வேண்டும். இல்லையெனில், மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் நின்று, இரண்டாவது முறையாக வெற்றி பெற்று பதவிக்கு வருவது பகற்கனவாகிப் போகும்.

## சந்திரிகாவின் பூரண வெற்றி!

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா மகத்தான வெற்றி பெற்றுள்ளார். இதற்கு முக்கிய காரணம் அவர் எழுப்பிய அமைதி கோஷமே. வடக்கே நடக்கும் போரினாலும் அதன் விளைவான உயிரிழப்புக்களாலும் எல்லாத் தரப்பினருமே அலுத்துச் சலித்தும் விசனித்தும் போயிருந்த சூழலில், பிரதமர் என்ற முறையில் சந்திரிகா புலிகளுடன் தொடங்கிய பேச்சு வார்த்தை, ராணுவத்தினருக்குக் கசப்பாக இருந்தாலும் மக்கள் வயிற்றில் பாலை வார்த்தது. அது தேர்தல் முடிவுகளில் பிரதிபலித்தது.

இலங்கைத் தேர்தலில் மற்றொரு முக்கிய விஷயம், 'அனுதாப அலை எங்கள் நாட்டில் இல்லை' என்று வாக்காளர்கள் நிரூபித்திருப்பதாகும். கொடுமையான முறையில் திஸ்ஸநாயக கொலை செய்யப்பட்டிருந்த போதிலும் அவருக்குப் பதிலாக வேட்பாளராக நின்ற அவரது மனைவிக்கு மிகக் குறைந்த வாக்குகளே கிடைத்தன. இது வாக்காளரின் ஆரோக்கியமான மனநிலையை - அரசியல் அறிவு முதிர்ச்சியை - உணர்த்தும்.

ஜனாதிபதியாகி விட்ட சந்திரிகா, பிரதமர் பதவிக்கு கட்சிக்குள் போட்டியைத் தவிர்க்க, தமது தாயார் சிரிமாவோ பண்டார நாயகாவையே பிரதமராக்கியுள்ளார். வாரிசு அரசியல் ரிவர்ஸ் கியரில் அங்கு நடப்பது ஒரு வேடிக்கைதான்!

சந்திரிகா மக்களுக்கு வாக்களித்துள்ள அமைதித் திட்டம் நிறைவேற, பிரபாகரன் மனம் வைக்க வேண்டும். புலி, புல்லைத் தின்னுமா, பார்க்க வேண்டும்!

# டாலர், டாலர்! டாலர் மீது காதல், காதல்!

"அமெரிக்காவில் (அல்லது துபாயில்) என் மகன் இருக்கான்; அப்பப்ப பணம் அனுப்பறான்" என்று சொல்லக் கேட்பது சகஜம். ஆனால் "அமெரிக்கால இருக்கிற என் பிள்ளைக்கு தீபாவளிக்காக என் ஆசிகளோடு பத்து டாலர் அனுப்பினேன்" என்று யாரும் கூறிக் கேட்கவே முடியாது. ஏன்? நமது அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள்தாம் காரணம். இந்தக் கட்டுப்பாடுகள், நமது ஏற்றுமதி குறைவாகவும் இறக்குமதி அதிகமாகவும் இருந்து, அந்நியச் செலாவணி கையிருப்பு அதள பாதாளத்துக்குப் போன போது ஏற்பட்டவை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கூட சில முக்கியமான பொருள்களை மட்டுமே இறக்குமதி செய்ய அரசு அனுமதித்து வந்தது. இவற்றை இறக்குமதி செய்த வர்த்தகர்கள், அரசிடம் இதற்கான லைசென்ஸ் பெற்று, நிருபண தஸ்தாவேஜுகளை ரிஸர்வ் வங்கிக்கு சமர்ப்பித்து, அந்நியச் செலாவணி பெற்றனர். அதாவது, இங்கே ரூபாய்களைக் கொடுத்து அங்கே டாலர்களை ஏற்றுமதியாளர் அடைய அனுமதி பெற்றனர். அயல் நாடு சென்று படிக்க விரும்பும் மாணவர்கள், மருத்துவ சிகிச்சை பெற விரும்பிய நோயாளிகள் போன்றோரும் இதே போல் நிருபண தஸ்தாவேஜுகளை சமர்ப்பித்து, டாலர்கள் பெற்றனர். கெடுபிடி ரொம்ப அதிகம். "அதிகபட்சம் இத்தனை டாலர்கள்தான்" என்று உச்ச வரம்பும் உண்டு. உதாரணமாக டூரிஸ்டுகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஐந்நூறு டாலர்கள் மட்டுமே வழங்கப்பட்டது.

இரு ஆண்டுகளுக்கு முன்தான் ரிஸர்வ் வங்கி, ஏற்றுமதி-இறக்குமதியாளருக்கு அந்நியச் செலாவணி கட்டுப்பாடுகளை ஓரளவு தளர்த்தியது. இறக்குமதி லைசென்ஸ் முற்றிலும் நீக்கப்பட்டது. ஆனால் இன்னின்ன பொருள்களைத்தான் இறக்குமதி செய்யலாம் என்ற கட்டுப்பாடு உண்டு. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு இறக்குமதியாளர் நாணய மாற்று மார்கெட் நிலவரப்படி ரூபாய்களைத் தர வேண்டும். இது அதிகமாகவே இருக்கும். அதாவது, ரிஸர்வ் வங்கியின் அதிகாரபூர்வ நாணயமாற்று விகிதம் டாலருக்கு ரூ. 24 எனில், மார்கெட் நிலவரப்படி ரூ. 30 தர வேண்டும். இவ்வாறு கூடுதல் விலை தர வேண்டியிருப்பது இறக்குமதியில் கணக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்பட்டது.

ஆனால் ஏற்றுமதியாளருக்குச் சலுகை தரப்பட்டது. அவர்கள் சம்பாதிக்கும் டாலர்களில் அறுபது சதத்தை மார்கெட் நிலவரப்படி ரூபாயாக மாற்றிக் கொள்ளலாம். நாற்பது சதத்தைத்தான் ரிஸர்வ் வங்கி விகிதப்படி ரூபாயாக மாற்ற வேண்டும். இதனால் அந்நியச் செலாவணி சம்பாதிக்கும் ஏற்றுமதியாளருக்கு கூடுதல் ரூபாய்கள் இடைத்தன. ஏற்றுமதிக்கு ஊக்கமளித்ததாயிற்று.

சென்ற ஆண்டு இந்த இரட்டை மதிப்பீடு முறை கைவிடப்பட்டது. ரிஸர்வ் வங்கி நாணயமாற்று விகிதம், மார்க்கெட் விகிதம் என்றில்லாமல், ஏற்றுமதி, இறக்குமதி இரண்டுமே முழுமையாக மார்க்கெட் நிலவரப்படி நடக்க அனுமதிக்கப்பட்டது. இன்று மார்க்கெட் நிலவரப்படி ஒரு டாலருக்கு ரூ. 31 தர வேண்டும்.

வேறு சில விதங்களிலும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. உதாரணமாக இன்று ஒரு டூரிஸ்ட் அயல்நாடு சென்றால் ஆண்டு ஒன்றுக்கு 2000 டாலர் செலவிடலாம். ஆயினும் யாருமே ஒரு வங்கிக்குப் போய், 'இத்தனை ரூபாய்களை அமெரிக்காவில் உள்ள இன்னாருக்கு டாலர்களாக மாற்றி அனுப்ப விரும்புகிறேன்' என்று கூறி விட முடியாது. அதற்குத் தகுந்த காரணம் இருக்க வேண்டும்; அது அரசினால் அனுமதிக்கப்பட்ட இனமாகவும் இருக்க வேண்டும்.

எனவேதான் இன்றைய நடைமுறையை 'கரண்ட் அகௌண்டில்' முழுமையான நாணயமாற்று என்று குறிப்பிடுகின்றனர். இது, கள்ள மார்க்கெட்டில் டாலர்களை வாங்குவதையும் கள்ளக் கடத்தலில் தங்கம் கொண்டு வருவதையும் தடுத்து நிறுத்தியுள்ளது. இதே போல் 'காபிடல் அகௌண்டி'லும் முழு சுதந்திரமும் முழுமையான நாணயமாற்றும் வருமானால்தான், யார் வேணுமானாலும் எந்த நாட்டில் உள்ள எவருக்கும் பணம் அனுப்பலாம். அந்த நிலையில் ஜப்பான், அமெரிக்கா போல இங்கும் சொத்துப் பரிமாற்றம் கூட நடக்கும். அந்த நாள் இன்னும் வெகு தொலைவில் உள்ளது.

— வி. கோபாலன்.

# Kalki Shopping Page


## இயற்கை மூலிகைப் பொடிகள் சிகிச்சை

சர்க்கரை, ஆஸ்த்மா, மூட்டுவலி, நரம்புத் தளர்ச்சி, ஞாபக சக்தி, அல்சர், காஸ்டிரிக், மூலம், B.P., இருதயக் கோளாறு, தோல் வியாதிகள், உடல் இளைக்க, கிட்னி, விஷக்கடிகள், முடி கறுத்து நீண்டு வளர, கர்ப்பப்பை கோளாறுகள், கண் தொல்லைகள் முதலியவற்றிலிருந்து பூரண குணம் பெற நம் மூன்னோர்கள் சித்தர்கள் கூறியபடி நோய் வென்று வாழலாம். பரம்பரை சித்த வைத்தியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை அபூர்வ மூலிகைப் பொடிகள் அனைத்தும் கிடைக்கும்.

மருத்துவரை நேரில் சந்திக்க மாலை 5 to 8.

**SAKTHI NATURE CURE RESEARCH AND SERVICE CENTRE**
1, YMCA BUILDING, ROYAPETTAH,
MADRAS -600 014. Ph: 831141
(Opp. Govt. Royapettah Hospital)

மன அமைதிக்கும்
மன மகிழ்ச்சிக்கும்
படியுங்கள்



## கோபுர தரிசனம்

ஆன்மிக மாத இதழ்
விலை ரூ. 6.00
ஒவ்வொரு இதழிலும் உங்கள் நலம் பேணும்

**ஆரோக்யமே நல வாழ்வு**

பயனுள்ள மருத்துவ குறிப்புகள்.
விற்பனையாளர்கள் இல்லாத பகுதிகளில் ஏஜென்டுகள் விண்ணப்பிக்கலாம்.
நிர்வாகி,
**கோபுர தரிசனம்**
ஆன்மிக மாத இதழ்
M-138, ஏழாவது குறுக்குத் தெரு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை - 41. போன் : 419330

கேட்டறியுங்கள் உங்கள் புதிய


## ஜாதகபலன் ஜோதிட போன்

இந்த வாரபலன்கள்

**0011 222 222 0+☐☐**

மேலே கொடுத்துள்ள பதினொரு எண்களையும் டயல் செய்வதுடன் உங்கள் ராசிக்கு கொடுத்துள்ள இரண்டு எண்களையும் டயல் செய்யவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |
| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி |
| 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |



மன ஜோதிடம்
உங்கள் வருங்கால ரகசியங்களை அறிந்திருங்கள்
☎ 0011 222 222 030

## பொருத்தம்



உங்கள் திருமணம் நிச்சயமும் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்களா? என்று தெரிந்து கொள்ளுங்கள்
**0011 222 222 043**

## பட்சி சாஸ்திரம்



ஒரு பண்டைய ஆரூட முறை. உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில் சொல்கிறது.
☎ 0011 222 222 025

இது சர்வதேச போன் கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள். எம் & ஏ. யு.எஸ்.ஏ.

# நினைவலைகள்

"HOLLYWOOD BUYS A GOOD STORY ABOUT A BAD GIRL AND CHANGES IT TO A BAD STORY OF A GOOD GIRL"

ஹாலிவுட் திரையுலகம் பற்றி சொல்லப்படுகின்ற ஒரு வேடிக்கையான விமர்சனம் இது. இந்தியத் திரையுலகத்திற்கும் பொருத்தமான ஒரு விமர்சனம்தான் இது.

ஆனால் ;

ஒரு வலுவான பெண்ணைப் பற்றிய நல்ல கதை வாங்கப்பட்டு, அது ஒரு அசம்பாவத் தோற்றமளிக்கிற ஒரு மிருதுவான பெண்ணைப் பற்றிய வலுவான கதையாக ஆக்கப்பட்டதுதான் 'அவள் ஒரு தொடர்கதை.'

எம். எஸ். பெருமாள் அவர்கள் கலைமகளில் எழுதியிருந்த ஒரு கதையைப் படித்திருந்த அரங்கண்ணல் அவர்கள் அதை ஒரு திரைப்படமாக ஆக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்க்கும்படி என்னிடம் அனுப்பி வைத்தார்.

அந்தக் கதாநாயகியின் மாறுபட்ட குணசித்திரம் என்னை மிக மிகக் கவர்ந்தது. வெறும் சம்பவங்களின் தொடர்பாக அமைக்கப்படுகின்ற கதைகளை விட தனித் தன்மையோடு செயல்படுகின்ற சில வலுவுள்ள கதாபாத்திரங்களின் வாயிலாக அமையப் பெறும் கதைகள், என்னை வெகுவாக ஈர்க்கின்றன. பெரும்பாலும் நான் திரையிலே கையாண்டிருக்கின்ற கதைகள் இதன் அடிப்படையில்தான் அமைந்தவை. அப்படிப்பட்ட கதைகளை வெண்திரையிலே உருமாற்றம் செய்வதில் உள்ள சிரமங்களும் ஒருசில அனுகூலங்களும் எனக்குப் பெரும் சவால் களை அளிப்பதுண்டு.

அப்படி எனக்குச் சவால் விட்டவள் தான் இந்த 'அவள் ஒரு தொடர்கதை' கவிதா.

எம். எஸ். பெருமாள் அவர்கள் பின்னால் என்னைச் சந்திக்கும்போதெல்லாம் "உங்கள் அடுத்தது என்ன?" என்பார்.

"அடுத்த கவிதா எங்கே?" என்பேன் நான்.

இது ஒரு 'கறுப்பு - வெள்ளை'ப் படம் என்பது நினைவிருக்கலாம்.

சத்தியஜித்ரே அவர்கள் சொன்னார்கள்:

"உயிர்த் துடிப்போடு உலா வந்து கொண்டிருந்த 'கறுப்பு-வெள்ளை'ப் படங்களின் வியாபார உலகத்து மரணமும், அதீதமான வண்ணப்படங்களின் ஆக்கிரமிப்பும், திரையுலகைப் பொறுத்தவரை ஓர் எதிர்மறையான விஞ்ஞான முன்னேற்றம்" என்று.

இப்பொழுது எனது அவள் ஒரு தொடர்கதையையும், அபூர்வ ராகங்களையும் பார்க்கும் போது, சத்தியஜித்ரே அவர்கள் சொன்ன இந்தக் கருத்து எவ்வளவு உண்மையானது என்று ஒரு சினிமா மாணவனான எனக்குத் தோன்றுகிறது.

ஒரு நடிகருக்கும் அவர் ஏற்று நடிக்கும் குணசித்திரத்திற்குமிடையே உள்ள Intimacy, இயக்குநருக்கும் அந்த நடிகருக்குமிடையே உள்ள Intimacy - இவையனைத்தும் இந்த வண்ணச் சாதனத்தில் சிதறிப் போகிறதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

"The persons and objects in the film should not make people think at once of the cinematographer" என்று Robert Bresson சொன்னார். ஆனால் இன்றைக்கு அது தான் நடக்கிறது.

ஒரு திரைப்படம் தயாரிக்க எனது மூலதனமாக நான் நினைப்பதெல்லாம் இவைதான் : ஒரு பெருமூச்சு, ஒரு மௌனம், ஒரு வார்த்தை, ஒரு வரி, அதில் கையாளப்படுகிற ஏற்ற இறக்கம், ஒரு சிணுங்கல், முகத்தில் ஒரு சாந்தம், நெற்றிக் கண்களைக் காட்டும் முகம், புன்னகை, முகத்தின் பக்கத்தோற்றம், நேர் முகம், முழு வடிவம் இவை ஒவ்வொன்றும் மிகப் பொருத்தமான இடங்களிலே அமைக்கப்படுவது.

இவையனைத்தும் கவிதா பாத்திரத்திற்குத் தேவைப்பட்டன. இந்தக் கவிதாவுக்காக ஒரு புதுமுகத் தேர்வில் இறங்கினேன். ஆண்டாள் பிலிம்ஸ் அலுவலகத்தில் மாதக் கணக்காக புதுமுகத் தேர்வு நடைபெற்றது.

புதுமுகத் தேர்வுக்காக நான் நீண்ட நாட்கள் எடுத்துக் கொண்டது 'அவள் ஒரு தொடர்கதை' கவிதாவிற்கும் 'மரோசரித்ரா' ஸ்வப்னாவுக்காகவும்தான். சரியான நடிகைத் தேர்வு என்பது திருமணப் பொருத்தம்

பார்க்கிற மாதிரிதான். இந்தப் பொருத்தம் சரியாக அமைந்து விட்டாலே பாதிப் படம் எடுத்து முடித்து விட்ட உணர்வு தோன்றும். ஆகவே இதற்காகக் காத்திருப்பதில் தவறில்லை. 'காத்திருப்பது' என்பது சினிமாவில் மிகவும் பழக்கப்பட்ட ஒரு அம்சம்.


• அரங்கண்ணல்

Waiting; waiting; what a waiting! சரியான கதைக்குக் காத்திருப்போம்; படப்பிடிப்பின் போது ஆயிரமாயிரம் விஷயங்களுக்குக் காத்திருக்க வேண்டியிருக்கும். சூரியனுக்காக waiting; விநியோகஸ்தருக்காக waiting; சில நேரங்களில் நாயகி தலையில் அணிய வேண்டிய மல்லிகைச் சரத்திற்காகக் காத்திருக்க வேண்டிய கட்டாயம்.

Billy Wilder ஒருமுறை சொன்னார் : "எனது 50 வருட திரைத்துறை வாழ்க்கையில் எனது காமிரா மொத்தமாக இரண்டு வாரங்கள்தான் இயக்கப்பட்டிருக்கும். எஞ்சியுள்ளவை நான் காத்திருந்த நேரங்கள்" என்று.

கவிதாவிற்காக சுஜாதா அழைத்து வரப்பட்டார். மலையாளப் படங்களில் சின்னச் சின்ன வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தார்.

உயரமாக, மெலிதாக, சாது போன்ற தோற்றமுடைய, எந்த ஓர் உணர்ச்சியையும் 'பளிச்'சென்று வெளிப்படுத்தாத ஒரு முகத்துடன் என் முன் நின்றார். ஆனால் கண்கள் மட்டும் வெளியில் வந்து எந்த நேரத்திலும் விழுந்து விடுமோ என்பதைப் போன்ற அகலமான கண்கள்.

ஓர் இயக்குநரை, அதிலும் கதாநாயகித் தேர்வுக்காகப் பார்க்கப் போகிறோமே என்கிற எண்ணமே இல்லாமல், படாடோபமாக உடைகள் எதுவும் அணியாமல், எளிமையாக அள்ளி முடிந்த கூந்தலோடு என் எதிரே நின்ற சுஜாதாவைப் பார்த்ததுமே சற்று நம்பிக்கை பிறந்தது. உள்ளத்தில் தோன்றியதை அப்படியே வெளிப்படுத்தும் பாங்கும், எதையும் மிகைப்படுத்திக் கூறி, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்கிற எண்ணம் துளிக் கூட இல்லாமல் அவர் பதில் அளித்ததும் எனக்குப் பிடித்திருந்தது என்றாலும், அவர் தமிழைத்தான் மலையாளத்தில் பேசுகிறாரா அல்லது மலையாளத்தைத் தமிழில் பேசுகிறாரா என்று சந்தேகம் எழும்புகின்ற மாதிரி பேசியது எனக்கு சற்று ஏமாற்றத்தை அளித்தது.


• அவள் ஒரு தொடர்கதை - சுஜாதா.

"எந்த மாதிரி கதாபாத்திரங்களில் நடிக்க ஆசைப்படுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"எந்த கேரக்டரிலும் நான் நடிப்பேன்." அவர் கூறிய 'எந்த' என்ற வார்த்தையில் அடக்கம்தான் இருந்ததே தவிர அகங்காரம் கலந்த அழுத்தம் எதுவுமில்லை.

"கவிதா என்கிற கதாநாயகி வேடம் ஒரு சிரமமான complex கேரக்டர். நீங்கள் அதில்

## கே. பாலசந்தர்

நடிப்பதென்பது குருவி தலையில் பனங்காயை வைத்த மாதிரி ஆகி விடக் கூடாதென்றுதான் பயப்படுகிறேன்."

அவருக்கு இந்தப் பழமொழி புரிந்ததோ இல்லையோ, அவரது முகத்தில்தான் எத்தனை விதமான மாற்றங்கள்! அதை நான் கவனிக்கிறேன் என்று தெரிந்தும், சட்டென்று மாற்றிக் கொள்ள வேண்டுமென்கிற எண்ணமே இல்லாமல் தனது மனஉணர்வுகளை அப்படியே பிரதிபலித்திட்ட சுஜாதா, "கொடுத்துப் பாருங்கள். செய்கிறேன்" என்றார்.

"மலையாளத் தமிழை மாற்றி சரியான தமிழ் உச்சரிப்போடு எப்படி பேசப் போகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"சொல்லிக் கொடுங்க சார்; சரியாப் பேச கத்துக்கிறேன்" என்று மலையாள தொனியில் தமிழில் சொன்னார்.

சுஜாதா கவிதாவாக மாறி விட்ட முதல் நாள். குன்றத்தூர் கோயில் படிக்கட்டுகளில் இரவு நேரப் படப்பிடிப்பு. "கண்ணிலே என்ன உண்டு" என்ற பாட்டோடு படப்பிடிப்பைத் தொடங்கினேன். புதுமுகங்களுடன் படப்பிடிப்பைத் தொடங்கும் போது பாடல் காட்சிகளுடன் ஆரம்பிப்பது எனது வழக்கம். பேசி நடிக்கும் காட்சிகளாக இல்லாமல், பாடல் காட்சிகள் புதுமுக நடிக நடிகையருக்கு ஆரம்ப பயத்தைச் சற்று போக்கி சிறிது தன்னம்பிக்கையை உண்டாக்கும்.

முதல் ஷாட் Long Shot.

இரண்டு மணி நேர 'லைட்டிங்' நடந்த

பிறகு ஒத்திகைக்குத் தயாரானேன்.

கதாநாயகனாக அமர்த்தப்பட்ட ஒரு புதுமுகம் பெருத்த ஏமாற்றத்தை அளித்தான். எத்தனையோ பயிற்சிகள் கொடுத்தும் ஒரு சின்ன நடை நடந்து கதாநாயகியின் கைகளைப் பிடிக்கின்ற அந்த 'மூவ்மெண்ட்' அவனுக்கு வரவில்லை.

ஒத்திகை! மீண்டும் மீண்டும் ஒத்திகை... இரவு பன்னிரெண்டு மணியாகிக் கொண்டிருந்தது. எனது சிரமங்களைப் பார்த்து நின்ற அரங்கண்ணல் என்னைத் தனியாக அழைத்துச் சென்றார்.

"இந்த ஒரு ஷாட்டுக்கே இப்படியென்றால் படம் முழுவதும் எடுத்து முடிவதற்குள் உங்களுக்கு வயதாகி விடும். வேறு பையனைப் போட்டுக் கொள்ளலாம்; படப்பிடிப்பை ரத்து செய்து விட்டு நீங்கள் புறப்படுங்கள்" என்று கூறினார் அரங்கண்ணல்.

அன்றைய படப்பிடிப்பு ரத்து செய்யப் பட்டது.

ஆரம்பமே இப்படியாகி விட்டதே யென்று நான் சற்று கலங்கி விட்டேன்; சுஜாதாவிற்கு எப்படி இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

**பி**ன்பு அதே கதாநாயகன் வேடத்திற்கு விஜயகுமார் ஒப்பந்தம் செய்யப்பட்டார். நியூடோன் ஸ்டுடியோவில் full floor set போடப்பட்டது. ஒரு மத்தியதர வகுப்பு வீடு. தொடர்ந்து படப்பிடிப்பு நடந்தது. அநேகமாக எல்லோரும் புதுமுகங்கள்; படப்பிடிப்பு நடத்துகிற மாதிரியே தோன்றாது. பள்ளிக்கூடம்தான்.

அதில் ஒரு காட்சி; தனது பாங்க் பாஸ் புக்குகளைத் தூக்கி எறிந்து, ஒவ்வொரு குடும்பத்து அங்கத்தினர்கள் பேரிலும் தான் பணம் சேர்த்து வைத்திருப்பதாக உணர்ச்சி பூர்வமாகப் பேசும் அந்தக் காட்சி!

கஷ்டமான 'ஷாட்'தான்; எத்தனையோ ஒத்திகைகள் ஆகியும் சுஜாதாவினால் அந்த 'ஷாட்'டின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவர் மிகவும் திணற, நான் பொறுமை இழந்து கடிந்து கொண்டேன். சுஜாதா அழத்தொடங்கி விட்டார். விக்கி விக்கி அழுது கொண்டிருந்தார். அரை மணி நேரம் படப்பிடிப்பை நிறுத்தி விட்டு நான் படப்பிடிப்பு தளத்தை விட்டு வெளியேறினேன்.

'சுஜாதா எப்பொழுது ரெடி என்று சொல்கிறார்களோ அப்பொழுது என்னிடம் வந்து சொல்லுங்கள்' என்று என் உதவியாளர்களிடம் சொல்லி வெளியே வந்து உட்கார்ந்து விட்டேன். அரை மணி கழித்து படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியது.

இப்பொழுது அந்தக் காட்சியை clipping பார்ப்பது போல் உங்கள் அகக் கண்களில் கொண்டு வாருங்கள்.

**மொ**த்தப் படப்பிடிப்பும் முடிந்தது.

தமிழ் சரியாக உச்சரிக்கப்படாத இடங்களில், சுஜாதாவே தனது குரலில் மீண்டும் 'டப்பிங்' செய்தார்.

படத்தின் முதல் காப்பி ரெடியானது.

எனது உதவியாளர்களோடும், தயாரிப்பாளர் அரங்கண்ணல் அவர்களோடும் படத்தைப் போட்டுப் பார்த்தேன். சுஜாதாவையும் அன்று படம் பார்க்க வரச் சொல்லியிருந்தேன். படம் முடிந்து விளக்குகள் எரிந்தன.

சுஜாதா விக்கி விக்கி அழுது கொண்டிருந்தார். காரணம் புரியவில்லை. நாங்கள் எல்லோரும் கவலையுடன் அவரைத் தேற்ற முயற்சி செய்தோம்.

"எதற்காக இப்படி அழுகிறாய்?" என்று கேட்டேன்.

"இந்தக் கவிதாப் பொண்ணு இன்னும் எவ்வளவு நாளைக்குத்தான் இப்படிக் கஷ்டப்படும்" என்று அழுது கொண்டே சொன்னார்.

தான் ஏற்று நடித்த கதாபாத்திரம் என்கிற எண்ணமேயில்லாமல், தனக்கும் அந்தக் கவிதாவிற்கும் எந்த சம்பந்தமுமில்லாத ஒரு நினைப்பில் அவர் குலுங்கிக் குலுங்கி அழுததும், அந்தக் கதாபாத்திரத்தின் மீது அவர் பரிதாபப்பட்டதும் எங்களுக்குப் பெரும் ஆச்சர்யத்தை அளித்தது.

இதிலிருந்து ஒன்று மட்டும் புரிந்தது. பல இடங்களில் சுஜாதாவுக்கே தெரியாத சில spontaneous உணர்வுகளையும் reaction களையும் நான் அவரிடமிருந்தே பெற்று இந்தத் திரைப்படத்தில் உபயோகப்படுத்தியிருக்கிறேன் என்பதுதான் அது.

"நான் எப்படி இப்படியெல்லாம் நடித்திருக்கிறேன்" என்று என்னிடம் பேசும் போது சுஜாதா மிகவும் ஆச்சர்யப்பட்டார்.

'Catch instants, spontaneity and freshness' என்று Robert Bresson சொன்னார்.

அவன் ஒரு தொடர்கதை படம் முழுவதும் இது காணப்பட்டதுதான் அந்தப் படத்தின் மிகப் பெரிய வெற்றிக்கு ஆதாரமாக அமைந்தது.

The director should stimulate in the actor certain of his innate qualities of whose existence he is himself not aware.

இப்படிச் சொன்னவர் Michelangelo Antonioni.

(தொடரும்)

படங்கள் உதவி : **பிலிம் நியூஸ் ஆனந்தன்**

# T.S.S. NIDHI LTD.

ESTD 1973

**THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED**

Regd. Off.: 230, R.K. Mutt Road, Mylapore, Madras 600 004 ☎ 4942303 / 4943365

**BRANCHES :**
- **THIRUVANMIYUR** : 112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras - 41. ☎ 410058
- **TONDIARPET** : 667, T.H. Road, Madras - 81. ☎ 5950472
- **SAIDAPET** : 11, Jones Road, Madras - 15. ☎ 4851468

## FIXED DEPOSIT SCHEME

| Period (Months) | 12 | 24 | 36 | 60 |
|---|---|---|---|---|
| Rate of Int. P.A. | 17% | 18% | 19% | 20% |

## KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of Rs.1,000/-

| Period (Months) | 12 | 24 | 36 | 45 | 67 |
|---|---|---|---|---|---|
| Maturity Value | 1190 | 1425 | 1760 | 2025 | 3025 |

## SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Minimum Deposit Rs.10,000/- Period - 12 months

Interest payable monthly **19.5%** p.a. Interest payable annually **21%**

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

## T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

For Deposit of Rs.10,000/-

| Period (Months) | Maturity Value |
|---|---|
| 120 | Rs.66,000 |
| 180 | Rs.1,82,000 |

## RECURRING DEPOSIT SCHEME

MONTHLY DEPOSIT Rs. 100/-

| Period in Months | 12 | 24 | 36 | 48 | 60 | 72 |
|---|---|---|---|---|---|---|
| Maturity Value | 1310 | 2850 | 4650 | 6710 | 9050 | 11,580 |

## SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

## BUSINESS HOURS

| | Week Days | | Sunday | Holiday |
|---|---|---|---|---|
| Regd. Office Mylapore | 9.00 to 12.30 | 2.00 to 4.30 | 9.00 to 12.30 | Friday |
| Branch Offices | 9.00 to 12.30 | 2.00 to 4.30 | 9.00 to 12.30 | Tuesday |

## HIGHLIGHTS

- ★ Recognised as a NIDHI COMPANY by Central Government of India.
- ★ Company is in 21st year of service.
- ★ Transaction with members only (Rupees two only for membership)
- ★ Premature repayment facility as per terms and conditions.
- ★ Monthly Interest Warrants would be despatched in advance for the year of Deposits.

## LOANS

★ A) Jewel loans granted on Gold ornaments at Rs.300/- per gms. (Rs.2400/- per 8 gms.)
- ★ No Ceiling
- ★ No Charges
- ★ No Interest Tax
- ★ Recurring Deposit not required
- ★ Your Jewels are insured at our cost.

B) Property Mortgage Loans granted on RD basis within Madras city limits.

**P.S. SAMBASIVAM**
Secretary

**G. KUMARAVELU**
Vice-President

**K.R.V. RAMANI**
President

## எல்லப்பா - ரங்கம்மாள் அறக்கட்டளை வழங்கும் சிறந்த குறுநாவலுக்கான பரிசு ரூ. 6,000.

கல்விப் பணியில் பெரும் ஈடுபாடு கொண்ட கோவை அன்பர் திரு.மிகு. இ. வெங்கடேசலு, தம் பெற்றோர் எல்லப்பா - ரங்கம்மாள் ஆகியோரின் பெயரிலான அறக்கட்டளை மூலமாக, இலக்கிய வளர்ச்சிக்கும், கல்விப் பணிகளுக்கும் பேருதவிகள் செய்து வருகிறார். தற்கால இலக்கியத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுவரும் குறுநாவல் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 'அமுதசுரபி'யுடன் இணைந்து குறுநாவல் போட்டியை அறிவித்துப் பரிசுகள் வழங்க அவர் முன்வந்துள்ளார்.

○ போட்டிக்குரிய குறுநாவல் 'அமுதசுரபி'யில் 32 பக்க அளவில் இருத்தல் வேண்டும். ○ தமிழ்நாட்டின் கலை, பண்பாடுகளை உயர்த்தும் வகையில் குறுநாவல் அமைதல் வேண்டும். ○ வரலாற்று நாவலாகவும் இருக்கலாம். ○ அனுப்பப்படும் குறுநாவல் எவ்வகையிலேனும் முன்னரே வெளிவந்ததாகவோ, பிறமொழித் தழுவலாகவோ, மொழிபெயர்ப்பாகவோ இருக்கக் கூடாது. ○ போட்டியில் சிறந்ததென நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு குறுநாவலுக்கு ரூபாய் 5,000 பரிசளிக்கப்படும். அடுத்துத் தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு குறுநாவல்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 500 வீதம் ஆறுதல் பரிசாக வழங்கப்படும்.

○ பரிசு பெறும் குறுநாவல்கள் 'அமுதசுரபி' இதழில் வெளியிடப்படும். ○ போட்டிக்கு அனுப்பும் குறுநாவல்களை, முடிவு தெரிவதற்கு முன்னர், வேறெந்த வகையிலும் பயன்படுத்துதல் கூடாது. போட்டி தொடர்பாகத் தேர்ந்தெடுக்கப்படாத குறுநாவல்களைத் திரும்பப் பெறப் போதிய தபால்தலை இணைத்தல் அவசியம்.

மேல் உறையின் மீது,

'குறுநாவல் போட்டி' என்று குறிப்பிடவும்.

குறுநாவல்கள் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி : 31.12.94

குறுநாவல் அனுப்ப வேண்டிய முகவரி :

'அமுதசுரபி'

*த. பை. எண். 5043, 145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 001.*


# சூர்யா எஸ்டேட் பைனான்ஸ்

டெப்பாசிட்தாரர்களுக்கு வருடத்திற்கு

**24%** வட்டி + **3%** பரிசு

வழங்குகிறது.

**பென்சன்தாரர்களுக்கு 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.**

SEF

மேலும் கவர்ச்சிகரமான டெபாசிட் திட்டங்கள் உண்டு

விவரங்களுக்கு அணுகவும்:

சூர்யா எஸ்டேட் பைனான்ஸ்

12, வெங்கடேசன் தெரு, தி.நகர், சென்னை-600 017. போன்: 4342405

*(G.R. தங்க மாளிகைக்கு எதிரில்) ஞாயிறு வார விடுமுறை.*

# ரூபிணிக்கும் வைஷ்ணவிக்கும் என்ன ஒற்றுமை?



• வைஷ்ணவி

●● டாக்டர் ராமதாஸ், முன்னாள் மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான், கவிஞர் வைரமுத்து, எழுத்தாளர் பிரபஞ்சன்... இவர்களுக்கெல்லாம் என்ன என்கிறீர்களா? இவர்களெல்லாம் ஒரு சினிமாவில் தலை காட்டப் போகிறார்கள். படம் : தொண்டன். கார்வண்ணனின் கைவண்ணத்தில் உருவாகும் இந்தப் படத்தில் நடிக்கும் முரளி தம் பங்குக்கு 'நட்ட நடு சென்டரு..' என்று தொடங்கும் ஒரு பாடலைச் சொந்தக் குரலில் பாடியிருக்கிறாராம்.

●● 'நவராத்திரி'யில் சிவாஜி ஒன்பது கேரக்டர்களில் நடித்த மாதிரி, 'ராணி மகாராணி' படத்தில் ராதிகாவும் ஒன்பது விதமான வேடங்களில் நடிக்கிறாராம். "என்னைச் சந்திக்கும் சிலர், நான் ஏன் முன்னணி நடிகர்களுடன் நடிப்பதில்லை என்று கேட்கிறார்கள். எனக்கு யார் ஜோடியாக நடிக்கிறார்கள் என்பது முக்கியமில்லை. எனது ஒரே குறிக்கோள் எனது கேரக்டர் எப்படி, அதில் எந்த அளவுக்கு எனது திறமையைக் காட்ட முடியும் என்பதுதான். இமேஜ் விஷயங்களில் எனக்குச் சுத்தமாகவே நம்பிக்கையில்லை. நடிப்பில் மட்டுமல்ல; என் வாழ்க்கையில் கூட" என்கிறார் ராதிகா.

●● ஆனந்த் பாபுவின் விஷயமே வேறு. "புது வசந்தம், நான் பேச நினைப்பதெல்லாம் போன்ற காதல், சென்டிமெண்ட் படங்கள் தான், எனக்குப் பெயர் வாங்கித் தந்திருக்கின்றன. ஆக்ஷன் ஹீரோவாக நான் நடித்த சில படங்கள் ஓடவில்லை. எனவே இனி காதல், சென்டிமெண்ட் படங்களில் நடிக்கவே விரும்புகிறேன்!" என்கிறார்.

●● முன்பு இளையராஜாவின் இசையில் வைரமுத்து அதிக பாடல்களை எழுதிய மாதிரி, இப்போது தேவாவின் இசையில் காளிதாஸ். சமீபத்தில் மெல்லிசைக் கச்சேரிக்காக வெளியூர் சென்றிருந்த தேவாவை, வெளியூர் ரசிகர்கள் ஒரு பிடி பிடித்து விட்டார்களாம்; அன்பாகத்தான்! 'ஆபாசமான பாடல்களுக்கெல்லாம் இசையமைத்து உங்கள் பெயரை ஏன் கெடுத்துக் கொள்கிறீர்கள்?' என்று ரசிகர்கள் கேட்க, 'இனி அம்மாதிரியான பாடல்களுக்கு இசையமைக்க மாட்டேன்' என்று தேவாவும் உத்தரவாதம் தந்து விட்டு வந்திருக்கிறாராம். காளிதாஸும் அம்மாதிரி பாடல்களை எழுதப் போவதில்லை என்று சபத மெடுத்திருக்கிறாராம். சபதம், சபலத்துக்கு உள்ளாகாமல் நிறைவேற நாமும் பிரார்த்திப்போம்!




• ரூபிணி

●● சத்யராஜ் மிக விரைவில் கதை, வசனமெழுதி, நடித்து, டைரக்ஷனும் செய்ய இருக்கிறார். படத்திற்கு 'வில்லாதி வில்லன்' என்று பெயரும் சூட்டப்பட்டு விட்டது. வில்லன் யார் தெரியுமா? மணிவண்ணன்தான்.

●● நடிகை ரூபிணிக்கும் வைஷ்ணவிக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. கண்டு பிடிக்க முடியாமல் யாரும் மண்டை பிய்த்துக் கொள்ளாதீர்கள். விசேஷ தினங்களில் இருவரும் ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வடைமாலை சாத்துவார்கள்.

- ராம்கம்பர்

# நிலத்தின் வளத்துக்கும் ஒரு நிதி நிறுவனத்துக்கும் என்ன சம்பந்தம்?



AKSHAR SF/94173

## சக்தி பைனான்ஸ் — வங்கிகளுக்கு இணையான பாதுகாப்பு



பயிர் செழிக்க நல்ல விதை இருந்தால் மட்டும் போதாது. உரிய தண்ணீர் வசதி இருந்தாலும் போதாது. அது பயிரிடப் படும் நிலம் வளம் நிறைந்ததாக இருக்க வேண்டும். அந்தப் பயிருக்கேற்ற நிலமாக, சத்து நிறைந்ததாக, சிறந்த ஊட்டம் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். நிலம் வளமாக இருந்தால் நிறைந்த அறுவடை என்பதில் விவசாயிகளுக்கு நம்பிக்கை.

சக்தி பைனான்ஸையும் மக்கள் அப்படித்தான் நம்புகிறார்கள். உங்களுடைய சேமிப்புக்கு சக்தி பைனான்ஸ் அதிக பாது காப்பு அளிக்கிறது. உங்கள் நலனில் அக்கறை கொண்டு உங்கள் சேமிப்புக்கு நீங்கள் அதிக வருமானம் பெற வகை செய்கிறது. சக்தி பைனான்ஸின் ஸ்திரத்தன்மையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

சக்தி நிறுவனங்களின் எண்ணிக்கை 20. மொத்த ஆண்டு வர்த்தகம் ரூ. 700 கோடி. 1.5 லட்சம் டெபாசிட்தாரர்கள் மிகுந்த நம்பிக்கையோடு வைத்திருக்கும் டெபாசிட் தொகை ரூ. 150 கோடி. நாடு முழுவதும் 37 கிளைகள். 25 சேமிப்பு மையங்கள். பரவலாகப் பாது காப்புப் பெட்டகங்கள்.

சக்தி பைனான்ஸ் ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவையையும் பூர்த்தி செய்வதில் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறது. அதற்காகவே அவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு பல புதுமையான திட்டங்களை முதன் முதலாக அறிமுகப்படுத்திய சிறப்பையும் பெற்றுள்ளது.



அது மட்டுமல்ல, இத்தகைய திட்டங்களைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அறிமுகப்படுத்தி விரைவாகச் செயல்படுத்துவதிலும் முன்னோடியாகத் திகழ்கிறது.

உங்கள் சேமிப்புகளை சக்தி பைனான்ஸில் டெபாசிட் செய்யுங்கள். நிம்மதி பெறுங்கள்.

**சக்தி**
**பைனான்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்:
475, டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோயம்புத்தூர்-641 018.
தொலைபேசி எண்கள்:
231471/231472/231473/231474

'அதிகாரத்திலிருப்பவரைப் பற்றி புதிய புதிய கட்டுக் கதைகள் உருவாக்கினால், அவற்றை வரலாறாக ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான் அறிஞர் கடமை'. (புனை கதையும் வரலாறும் – -பேராசிரியர் நவமணி... பக்.213-14)

# வேதபுரத்து வியாபாரிகள் 22

அபூர்வா டீவியில் ஆற்றிய சொற்பொழிவு, வேதபுரத்தில் ஒரு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது உண்மைதான். ஆனால் அவள் நினைத்ததற்கு மாறாக வேறுவிதமான பாதிப்பு.

அவள் ஊழலைப் பற்றிச் சாடியதோ, தனிமனித வழிபாட்டுக் கலாசாரத்தைத் தாக்கியதோ, தன்மானமுள்ள, சிந்திக்கும் திறனுடைய தனி நபர்களுடன் கூடிய ஒரு புதிய சமுதாயம் உருவாக வேண்டுமென்பதோ எந்த விதமான சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. அவளுடைய விதம் விதமான புகைப் படங்கள், அழகும் அறிவும் கூடிய இன்னொரு புதிய தலைவர் வேதபுரத்துக்குக் கிடைத்திருப்பது பற்றிய விமர்சனக் கட்டுரைகள், பத்து நூற்றாண்டுகளுக்கு முன் ஆண்ட ஒரு வேதபுரத்து மாமன்னரின் வம்சத்தை அவள் சார்ந்தவள் என்பதான ஒரு 'வரலாற்று'க் குறிப்பு... ஆகியவைதான் பக்கம் பக்கமாக வெளி வந்தன.

அவளுக்கு எரிச்சலாக வந்தது.

படித்துக் கொண்டிருந்த செய்தித்தாளை வீசி எறிந்தாள்.

"என்ன மேடம், இப்படிக் கோவப்படறீங்க?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் வனிதா.

" 'மேடம்'னு மறுபடி கூப்பிட்டே, உன்னையும் மந்திரிகளைச் செஞ்ச மாதிரி சீட்டு கிழிச்சு அனுப்பிச்சுடுவேன்... 'அம்மா'ன்னே கூப்பிடு... புரியுதா?"

வனிதா புன்முறுவலுடன் கேட்டாள்: "என்ன கோபம்?"

"உங்க நாட்டுப் பத்திரிகைகளைப் பாரு, நான் அறிவிச்ச திட்டங்களைப் பத்தி ஒண்ணும் காணலே, என்னைப் பத்தி, பக்கம் பக்கமாக எழுதறாங்க..."

"நம்ம நாடு..." என்றாள் வனிதா.

"என்ன?" என்று சீறினாள் அபூர்வா.

" 'உங்க நாடு'ன்னு சொன்னீங்க, 'நம்ம நாடு'ன்னேன், அவ்வளவுதான்..."

அபூர்வா அவளைச் சுட்டெரிப்பவள்போல் பார்த்தாள்.

"கவியனும் தம்புசாமியும் காத்துக்கிட்டிருக்காங்க..." என்றாள் வனிதா, கீழே கிடந்த செய்தித் தாளை எடுத்து மடித்து மேஜையின் மீது வைத்தவாறு.

"நான் வரச் சொல்லலியே..."

"நீங்க வரச். சொல்லலே, நாலு நாளா பழியா காத்துக்கிட்டிருக்காங்க, உங்களைப் பாக்க."

"எதுக்கு? எனக்குக் கோயில் கட்டவா?"

"தெரியலே... உங்களை நேரே சந்திச்சுப் பேசணுங்கிறாங்க... பத்து நிமிஷம் பேசணுங்கிறாங்க...பத்து நிமிஷம் போதுமாம்."

"நாம கடைசியா பாக்கிறப்போ அவங்க ஒத்தரோட ஒத்தர் சண்டை போட்டுக்கிட்டுப் போனாங்கல்லே?"

"இது எங்க, மன்னிக்கவும் நம்ம நாட்டிலே சகஜம்... யார் யாரு எதிரி, யார் யாரு நண்பர்கன்னு சுலபமா சொல்ல முடியாது. நிரந்தர நட்பும் கிடையாது, நிரந்தர பகைமையும் கிடையாது. அதுவும் அரசியல்லே, இதை எப்படி நீங்க எதிர்பார்க்க முடியும்...?"

"அந்தப் பேப்பர்லே என்ன எழுதியிருக்கான் தெரியுமா, 'அன்னை இரைப் படம் தந்த இரவியமல்ல, அந்நிய நாடு தந்த ஆணிப் பொன்- இருப்பினும், அழகால், அறிவால், அரசியல் அனுபவத்தால், நம்மை ஆண்டிடும் அருட் பெருஞ் சுடர்...' மை காட், ஆல் கிராப் (crap) எவ்வளவு சுலபமா என்னை 'அம்மா'வா ஆக்கிட்டாங்க... அன்னையாம் அன்னை."

வனிதா புன்னகை செய்தாள்.

"எதுக்குச் சிரிக்கறே?" என்று கோபத்துடன் கேட்டாள் அபூர்வா.

"இது உண்மைதானே? உங்களுக்கு ஏன் கோபம் வருது? எங்க... மன்னிக்கவும் நம்ம நாட்டை ஆண்டவங்க இதுவரைக்கும் சினிமாவிலிருந்து வந்தவங்கதான். ராமரா அரிதாரம் பூசியவரு அரசியல்ல குதிச்சா, அவரால்தான் ராமராஜ்யம் நடத்த முடியும்னு நம்ம ஜனங்க எதிர் பார்ப்பாங்க... ஆனா, நீங்க அரிதாரம்

பூசாமயே ஆட்சிக்கு வந்துட்டாங்க... அவங்க இதைப் பத்தி ஆச்சரியப்படறாங்கங்கிறதைப் பத்தி ஆச்சர்யப்பட என்ன இருக்கு?''

''நீயே ஆச்சர்யப் படற மாதிரில்லே பேசறே?''

''ஆமாம்... நானும், வேத புரத்து வாசிதானே? சரி... அவங்களை வரச் சொல்லவா?''

''எவங்களை?''

''கலியன்...''

''ப்ளீஸ்...எனக்கு 'ஜோக்' கர்ஸெல்லாம் பாக்க நேரமில்லே.''

''அப்படிச் சொல்லாதீங்கம்மா... நீங்க இந்த நாட்டுக்கு வந்த புதிசலே... உங்களுக்கு இடம் கொடுத்தவரு கலியன்...''

''உனக்கென்ன அவர் பேர்லே இவ்வளவு அக்கறை? ஏதாவது, 'டீல்'...?''

வனிதா பேசாமலிருந்தாள்.

# இந்திரா பார்த்தசாரதி

''சொல்லு.''

''ஏற்கெனவே உங்களுக்குத் தெரிஞ்ச 'டீல்'தான்.''

''புரியலே.''


''கலியன், தம்புசாமி இரண்டு பேருமே அவங்கவங்க வீட்டை என்பேரிலே மாத்திப் பத்திரம் பண்ணி கொடுத்துட்டாங்க... உங்களுக்குத் தெரிஞ்ச...''

அபூர்வா இடைமறித்தாள். ''எனக்குத் தெரிஞ்ச 'டீலா' இது?... ரொம்ப 'க்ளவரா' பேசறியே... நான் ஊராருக்கு ஊழலை ஒழிக்கணும்னு உபதேசம் செய்யறேன். என் வீட்டிலேயே ஊழல்...''

''அரசியல்னு வந்துட்டா எதுவும் ஆச்சர்யப்படுவதற்கில்லே... ஆனா, பாக்கப் போனா, இது ஊழலுமில்லே... ஏற்கெனவே தரேன்னு சொன்னதை இப்போ வாங்கிட்டோம், அவ்வளவுதான்.''

''வாங்கிட்டோமா?' நீ வாங்கிக்கிட்டே. அதனால்தான் நான் அவங்களைப் பாக்கணும்னு சிபாரிசு செய்யறியா? நான் பாக்க முடியாதுன்னு சொன்னா என்ன செய்யப் போறே?''

''அது உங்க இஷ்டம். நான் என்ன சொல்ல முடியும்? பாக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்கன்னு அவங்க கிட்டே நிச்சயம் சொல்ல மாட்டேன். அப்புறம் பாக்கிறதா சொல்லியிருக்காங்கன்னு சொல்லுவேன்... பாக்க





## சிவாஜி திருமணத்தில் வாழ்த்தியவர் யார்?

சிவாஜி கணேசன் மே தினத்தன்று கமலாவைக் கரம் பற்றினார். இவர்கள் திருமணம் 1952-ம் ஆண்டு சுவாமி மலையில் பொன்னையா உயர் நிலைப் பள்ளி தமிழ் ஆசிரியர் ரத்தினம் பிள்ளை தலைமையில் நடந்தது. திருமண வாழ்த்துக் கூறியவர் கலைஞர் கருணாநிதி!

தகவல்: மஞ்சுதேவன்

---

முடியாதுன்னு சொல்லிட்டாங்கன்னு நான் சொல்லிட்டா எனக்குக் கொஞ்சம் செல்வாக்கு இருக்கிறதா அவங்க நினைச்சுக்கிட்டிருக்கிறது தப்புன்னு ஆயிரும். நான் அவ்வளவு முட்டாளில்லே."

"தோ பாரு வனிதா... நான் 'ஸீரியஸா' சொல்றேன்... நான் இந்த லிஸ்டத்தை மாத்தப் போறேன்...நான் டீ.வி.யிலே பேசினதெல்லாம் ஒப்புக்கில்லே, நெஜமாகவேதான், புரிஞ்சுதா?"

வனிதா பேசாமலிருந்தாள்.

"இனிமே இந்த மாதிரி காரியமெல்லாம் செய்யாதே... சரி, அவங்களைக் கூப்பிடு... கையிலே மாலை கிலை வச்சுக்கிட்டிருந்தா, 'செக்யூரிட்டி' கிட்டே சொல்லி பறி முதல் பண்ணிடு..."

கலியனும், தம்புசாமியும் முகம் சந்தோஷமாக மலர உள்ளே வந்தார்கள். சோபாவில் உட்கார்ந்திருந்த அபூர்வா அவர்கள் பேசுவதற்குள் முந்திக் கொண்டு விட்டாள். "இங்கே பாருங்க... கால்லே விழறது இந்த விவகாரமெல்லாம் வேணாம். என்ன வேணும் உங்களுக்கு?"

"நாங்க, சிறு துரும்புங்க... இந்த நாட்டுக்கு உதவியிருக்கோம்...."

"சரி, உதவியிருக்கீங்க... என்ன வேணும், சொல்லுங்க?"

"தம்புசாமி எத்தனை வருஷமா நம்ம கட்சிக்காக உழைக்கிறார்ன்னு பாக்கிறப்போ..." என்று கலியன் கூறி முடிப்பதற்குள், அபூர்வா குறுக்கிட்டாள்.

"அவரை மந்திரியாக்கணுமா?"

"ஐயோ மந்திரிங்களா? அதுக்கெல்லாம் எனக்குத் தகுதி கிடையாதுங்களே!..." என்று அழுதே விட்டார் தம்புசாமி.

"யாருக்குத்தான் தகுதி இருக்கு. உங்க ரெண்டு பேரையுமே மந்திரியாக்கறேன் போங்க..."

கலியன் திடுக்கிட்டு ஒன்றும் புரியாமல் தம்புசாமியைப் பார்த்தார். பின்னவர் கண் ஜாடை காட்ட இருவரும் அபூர்வாவின் பாதங்களை நோக்கி முன்னேறினர்.

அபூர்வா எழுந்து கண்டிப்பான குரலில் சொன்னாள். "கால்லே விழப் பாத்தீங்க நான் கழுதையாயிடுவேன், ஜாக்கிரதை... நீங்க போகலாம், உங்களுக்குத் தகவல் வரும்."

பெரிய கும்பிடு போட்டு விட்டு இருவரும் அகன்றனர்.

அவர்கள் போன பிறகு, வனிதா கேட்டாள்?

"என்னம்மா, இப்படி அவசரப்பட்டுச் சொல்லிட்டீங்க... கலியன் மந்திரியா? என்னாலே நினைச்சுக் கூட பாக்க முடியலே..."

"முன்னாலேருந்தவங்களுக்கு இவர் என்ன குறைஞ்சுட்டாரு? ஒரு சின்ன பலகீனம்... அவ்வளவுதானே?"

"நஞ்சுண்டன் கொடுத்த 'லிஸ்ட்'லே எத்தனை பேரு இருக்காங்க!"

"முப்பத்திரண்டு. இன்னும் ரெண்டு பேரை கூட சேர்த்துக்கப் போறோம்... மந்திரிக எல்லாரும் ஒப்புக்குத்தான். பணம் பண்ண முடியாதுன்னு தெரிஞ்சு போச்சுன்னா யாருமே மந்திரியா வர முன்வர மாட்டாங்க..."

"எனக்கு என்னமோ நீங்க போற வேகத்தைப் பாத்தா கொஞ்சம் பயமாகவே இருக்கு... எதுக்கும் நஞ்சுண்டனை ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டு செய்திருக்கலாம்னு படுது..."

"யாரையும் நான் எதுவும் கேக்கணும்னு அவசியமில்லே, சரி... நான் ஆபீஸ் புறப்படணும், ஏற்பாடு செய்..."

அபூர்வா அலுவலகம் சென்றடைந்ததும், அலுவலகச் செயலர் அவளுக்காக நஞ்சுண்டன் காத்திருப்பதாகச் சொன்னார்.

"வரச் சொல்லுங்க."

நஞ்சுண்டன் வந்தான்.

"நீங்க கொடுத்த 'லிஸ்ட்'லே இன்னும் ரெண்டு பேர் கூட சேர்த்திருக்கேன்," என்றாள் அபூர்வா.

"அப்படியா? சரி... எத்தனை பேர் வேணுமானாலும் சேர்த்துக்கங்க... ஒரு முக்கியமான விஷயம் பத்திப் பேச வந்தேன்."

"என்ன?"

"நீங்க டீ.வி.யிலே பேசினதை தலைவர் பாராட்டிச் செய்தி அனுப்பியிருக்கார்."

"எங்கே?"

"எங்கேன்னா?"

"செய்தி...?"

"தலைவரும் நானும் எப்படித் தொடர்பு கொள்ளுகிறோங்கிறதைப் பத்தி பின்னாலே உங்களுக்குச் சொல்லக் கூடிய வாய்ப்பு

# அபிராமியின் தேக்கு மரத்திட்டம்

எங்களுடைய தேக்கு மரத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெற அன்புடன் அழைக்கிறோம்
ரூ. 150/- வீதம் 8 மாதங்கள் ரூ. 1,200/- மட்டும் செலுத்தி
ரூ. 1,50,000/- பெறுவீர் 20 - ஆண்டுகளில்

| | | | |
|---|---|---|---|
| ரூ. 600/- | = ரூ. 75,000/- | ரூ. 12,000/- | = ரூ. 18 லட்சம் |
| ரூ. 6000/- | = ரூ. 7,50,000/- | ரூ. 24,000/- | = ரூ. 36 லட்சம் |

★ செலுத்தும் பணத்திற்கு உத்தரவாதமாக இலவச நிலம் / தேக்கு சர்டிபிகேட்
★ இலவச விபத்துக்காப்பீடு 20 ஆண்டுகளுக்கும்
★ மூன்று மாதங்களுக்கு ஒரு பரிசு குலுக்கல் மூலம் தொடர்பு
★ மொத்தமாக செலுத்தினால் 10% தள்ளுபடி

# அபிராமி தேக்கு யூனிட்ஸ்

சித்ரா காம்ளக்ஸ், சத்திரம் பேருந்து நிலையம் அருகில்,
திருச்சி - 620 002 போன் : 48508 PP

**உங்கள் டெபாசிட்டுக்கு கவர்ச்சிகரமான வட்டி வழங்குகிறோம்**

24% PA மாதவட்டி

## அபிராமி HIGH இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

சித்ரா காம்ப்ளக்ஸ், சிந்தாமணி,
திருச்சி - 620 002. போன் - 48508 PP

27% PA வருடவட்டி

# அபிராமியின் அக்வா யூனிட்ஸ் திட்டம்

64% P.A

**உங்கள் முதலீட்டிற்கு அதிக வருமானம்**
ரூ.5,000/-=ரூ. **37,000/-**(பத்து ஆண்டுகளில்)

100% EOU

★ செலுத்தும் பணத்திற்கு உத்திரவாதமாக முன் தேதியிட்ட காசோலை வழங்கப்படும்
★ முதலாம் ஆண்டு முதல் ரூ. 1,200/- வீதம் 10 வருடங்களுக்கு ஊக்க தொகை வழங்கப்படும்.
★ 10வது வருட முடிவில் ரூ. 25,000/- க்கான முன் தேதியிட்ட காசோலை வழங்கப்படும்.
★ ரூ. 500/- வீதம் 10 மாதங்கள் தவணை முறையிலும் செலுத்தலாம்.
★ தமிழ்நாட்டில் மீன் பண்ணைக்கு புகழ்பெற்ற தேனீர்பட்டி கிராமத்தில் எங்களுடைய நன்னீர் இறால் பண்ணை புதிய தொழில் நுட்பத்துடன், தொழில் நுட்ப வல்லுநர்களின் மேற்பார்வையில் வளர்க்கப்படுகின்றன.
★ உற்பத்தி முழுவதும் சென்னை Rajan Impex நிறுவனம் 10 வருடங்களுக்கும் எடுத்து கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது.

பணத்தை D.D.ஆக "ABBIRAMI AQUA ANNEXA" TRICHY என்று எடுத்து அனுப்பவும்.

# ABBIRAMI AQUA ANNEXA

**H.O** Chitra Complex,
Near Chatram Bus Stand,
**Trichy** - 620 002.
**Ph : 31971, 48508**

**B.O.** 55/B, Chinniah Complex,
Five Road,
**Salem - 4.**



காதலன்: ''சாரி டியர் என்னை மறந்திடு...''

காதலி: ''இதை போன வாரம் என்னிடம் நூறு ரூபாய் கடன் வாங்கறதற்கு முன்பே சொல்லியிருக்கணும். முதல்ல பணத்தை எடு!''

– சீர்காழி ஜே.பலராமன்

---

வரும். அப்போ சொல்றேன். தலைவரோட கட்டளைகளுக்கோ, அனுப்பற செய்திகளுக்கோ காகிதம் ஒரு 'மீடியம்' இல்லே..."

"அப்படின்னா, நீங்க தலைவர் சொன்னார்னு சொல்லறதை நாங்க நம்பணும்... அப்படித்தானே?"

"இப்படித்தான் இதுவரை நிர்வாகம் நடந்து வந்துக் கிட்டிருக்குது. இதை நம்பறதைத் தவிர உங்களுக்கு வேற வழி இருக்கிறதா எனக்குத் தெரியலே."

அபூர்வா அவனை உற்றுப் பார்த்தாள். அவன் முகத்தில், இதைச் சொல்லும்போது, லேசான முறுவல் நிழலிட்டது.

"என்னைப் பத்தி ஒரு 'மித்' உருவாக்கறது யாரு, தலைவரா? இல்லாட்டா, தலைவரோட அனுமதியோட நீங்களா?"

"என்ன 'மித்'...?"

"நான் ராஜ வம்சம்னு..."

நஞ்சுண்டன் சிரித்தான். "ஒத்தரைப் பாராட்டலாம்னு பச்சைக் கொடி காட்டிட்டா, எங்க நாட்டு மக்கள் ஒண்ணு என்ன, நூறு கட்டுக் கதைகளை உருவாக்கிடுவாங்க. தலைவரோ நானோ இதை உருவாக்கணும்னு அவசியமில்லே. அப்படி நூறு கதைகள் வந்தப்புறம், அவற்றை ஆராய்ச்சி செய்யறது என் வேலை. நான் ஒரு ஆராய்ச்சி மாணவன்."

"உங்களுக்கு எத்தனை முக மூடி இருக்குது!"

நஞ்சுண்டன் புன்னகை செய்தான். பதில் சொல்லவில்லை.

அவள் டீ.வி.யில் பேசியதைத் தலைவர் பாராட்டினார் என்றால், அவள் அறிவித்த புதுத் திட்டங்களை அவர் ஏற்றுக் கொள்கின்றார் என்று அர்த்தமா? ஊழலை எதிர்த்துப் போராட ஆதரவு தருகிறாரா? தனிமனித வழிபாட்டுக்குத் தடை வேண்டுமென்பதையும் அவர் ஒப்புக் கொள்கின்றாரா? நாடு முழுவதும் தெரு ஓரங்களிலிருக்கும் சிலைகளையும் படங்களையும் அகற்ற வேண்டுமென்பது சரி என்கிறாரா?

"தலைவர் நான் பேசியதைப் பாராட்டினார் என்றால் என் திட்டங்களைச் செயல்படுத்தியாக வேண்டும். இந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன்."

"பாராட்டினார் என்றால் ஒப்புதல் அளித்தார் என்று அர்த்தமில்லே."

"புரியலே..."

"நல்ல திட்டங்கள்தான். ஆனா நடைமுறையிலே இது சாத்தியப்படுமா என்று பாக்கணும்! ஒரு குறிப்பிட்ட கலாசாரத்திலே 'கண்டிஷன்' ஆகியிருக்கு வேதபுரம். அதைத் திடீர்னு மாத்த முடியுமான்னு பாக்கணும். மாத்தினா, இது ஒரு கலாசார அதிர்ச்சி. இந்த அதிர்ச்சியினாலே ஏற்படக் கூடிய விளைவுகளையும் யோசிக்கணும்..."

"அதனாலே...?"

"நிதானமா செயல் படணும். தலைவரோட அபிப்பிராயமும் இதுவாகத்தானிருக்க முடியும்."

"டெலிபதியா?"

நஞ்சுண்டன் புன்னகை செய்தான். அப்பொழுது டெலிஃபோன் ஒலித்தது. அபூர்வா எடுத்தாள்.

"இந்திரபிரஸ்தத்துத் தலைவர் அலுவலகத்திலிருந்து, மேடம்," என்றார் செயலர்.

"சரி... கொடுங்க..."

அபூர்வா நஞ்சுண்டனைப் பார்த்தாள். அவன் தன் கை விரல் நகங்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்தான்.

"மேடம்... எங்கள் தலைவர் பாராட்டுக்களைத் தெரிவிக்கச் சொன்னார்."

"நன்றி."

"உங்களுடைய புதுத் திட்டங்கள் வெற்றி அடைய வேண்டுமென்று அவர் வாழ்த்துகிறார்..."

"நன்றி."

"வேதபுரத்து ஆட்சி முறையில் மாறுதல் தேவை என்று அவர் கருதுகிறார். வேதபுரத்துக்கும் இந்திர பிரஸ்தத்துக்கும் இது நல்லது என்பது அவர் கருத்து."

"புரியவில்லை."

"நாளை இரவு உங்களுக்கு எங்கள் தலைவர் வீட்டில் 'டின்னர்'. இதைப் பற்றி நீங்கள் உங்கள் தலைவரிடம் விவாதிக்க வேண்டுமென்ற அவசியமில்லே."

அவர் ஃபோனைக் கீழே வைத்து விட்டார். அபூர்வா சிறிது திடுக்கிட்ட நிலையில், நஞ்சுண்டனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அக்கறை தொடர்ந்து அவன் நகத்தின் மேலிருந்தது.

(தொடரும்)



# கடவுளின் கவலை!

‘கிராமப்புற மக்களாவது தேவலாம்; இறையுணர்வு, பிறரிடம் பரிவு முதலிய பல நற்குணங்களை விடாமலிருக்கிறார்கள். ஆனால் நகர்ப்புறத்தின் வேகமான வாழ்க்கையில்தான் தீமைகளும் துர்க்குணங்களும் மலிந்து விட்டன. எனவே சாயி பக்தர்கள் நகர்ப்புறங்களில் பணியாற்ற நிறைய வாய்ப்பு உள்ளது.

“ ‘பணத்துக்கு எங்கே போவது?’ என்று யோசிக்க வேண்டாம். பகவானுக்கு உங்கள் பணம் பற்றி அக்கறை இல்லை; குணம் பற்றிய கவலைதான். ஒரு பஜனை மண்டலியை உங்கள் வட்டாரத்தில் உருவாக்கவோ, நாலு பேர் சேர்ந்து நல்ல புத்தகங்களைப் படித்து விவாதிப்பதற்கோ, ரிடையர் ஆன சிலர் சேர்ந்து ஒரு குழந்தைகள் காப்பகம் நடத்திக் கதை கூறி மகிழ்விக்கவோ பணம் தேவையில்லை.

“சேவை புரிவதைக் காட்டிலும் சிறந்த செல்வம் வேறில்லை.”

— பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா

*(நவம்பர் 23 பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 70வது பிறந்த நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.)*

# இதோ ஒரு சர்வாதிகாரி

செல்வ மகள். அன்பின் துணை கொண்டு எங்களை அடிமைப்படுத்தியவள். அவள் விரலசைவே போதும். வானத்து நிலவா? பறித்து வர நாங்கள் தயார். அப்படியிருக்கும் போது, அவள் எதிர்காலமும் அவள் விரும்பும் விதத்தில் அமையவேண்டாமா? அவள் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக மலர வேண்டாமா? அதற்கும் வழி செய்திருக்கிறோம். ஒரு கணிசமான முதலீடு. நம்பகமான நிறுவனமான ஸ்ரீராமில். அவள் எதிர்கால மகிழ்ச்சிக்கு உத்திரவாதம் அது.

ஸ்ரீராம் – லாரிகளுக்கு நிதியுதவி அளிப்பதில் முன்னணி நிறுவனம். அளிக்கும் கடனுதவியை 100 சதவிகிதம் திரும்பப் பெற்று விடுவதால் பணத்துக்கு மிகுந்த பாதுகாப்பு. ரூ.190 கோடிக்கும் கூடுதலான டெபாசிட் ஆதாரம். பின்பலமாக ரூ.700 கோடி சொத்து மதிப்புள்ள ஸ்ரீராம் நிறுவனங்கள். சிறந்த முறையில் உங்களுக்குச் சேவையளிக்க நாடு முழுவதும் 65-க்கும் மேற்பட்ட அலுவலகங்கள்.

For statutory details please refer to our advt in The Hindu dated 9/7/93

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
ஸ்ரீராம் சிட்டியூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட்

...டேகோ, அசோக்லேலண்ட், சிட்டியூனியன் வங்கி ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன்.
...அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளெக்ஸ், 4 லேடி தேசிகா ரோடு, ...ப்பூர், சென்னை 600 004. போன்: 4990960, 4991363, 4993968.

டெபாசிட்டுகள் திரட்டும்
கேம்பெய்ன் இப்போது



பணத்தின் அருமை தெரிந்தவர்கள் நாங்கள்.



அதைவிட உங்கள் அக்கறைகளையும் உணர்ந்தவர்கள்

## 2001 :

♦ நகர்ப்புறத்தில் சேரும் குப்பை, கூளங்களிலிருந்து மதிப்பு வாய்ந்த பொருள்களைப் பிரித்தெடுத்து மீண்டும் உபயோகத்துக்குக் கொண்டு வர ஒரு மலிவான நடைமுறை இருக்கும்.

## 2002 :


♦ கம்ப்யூட்டர் சாதனங்களில் 'Ultra LSI giga-bit' என்ற சில்லைப் பயன்படுத்தி அவற்றின் நினைவாற்றலைப் பெருக்கி விடுவோம்.

♦ பூமியைச் சுற்றி உள்ள ஓஜோன் படிவு எப்படி உருவாயிற்று, எப்படி அதை மாற்றவோ, நீக்கவோ முடியும் என்ற செயல்முறை கண்டு பிடிக்கப்பட்டிருக்கும்.

♦ அதிக விளைச்சலுடன் கடுமையான சீதோஷ்ண வேறுபாடுகளிலும் தாக்குப் பிடிக்கக் கூடிய பயிர் வகைகளை gene (மரபுக் கூறு) மாற்றங்கள் செய்து உருவாக்கி விடுவோம்.

## 2003 :

♦ நகர்ப்புற கழிவுகளிலிருந்து, எரியக் கூடிய பொருள்





களையும் கண்ணாடி, உலோகம் ஆகியவைகளையும் தானியங்கு முறையில் தனித் தனியே பிரிக்கவல்ல தொழில்நுட்பம் ஜப்பான் நாட்டில் வசமாகியிருக்கும்.

♦ வீட்டிலிருந்தபடியே மருத்துவ பரிசோதனைகள் செய்து கொண்டு சிகிச்சை பெறும் தொலைத் தொடர்பு அமைப்பு புழக்கத்தில் இருக்கும்.

♦ தொடர்பு சாதனங்கள் முன்னேற்றத்தினால் சராசரி அலுவலக வேலைகளை வீட்டிலிருந்தபடியே செய்யக் கூடிய நிலைமை வந்து விடும்.

♦ உடல் ஊனமுற்றோர் மற்றும் படுத்த படுக்கையாக உள்ளவர்களைக்



# அடுத்த நூற்றாண்டு எப்படி இருக்கும்..?

கவனித்துக் கொள்ள நர்ஸ் ரோபோ இருக்கும்.

## 2004 :

- கரியமில வாயுவை உற்பத்தி செய்யும் கச்சிதமான முறையை அறிவதுடன் சுற்றுச் சூழலிலிருந்து அதை நீக்கும் வழியையும் கண்டுபிடித்திருப்போம்.
- கழிவுப் பொருள்களை மீண்டும் பயன் படுத்துவதால் நகரங்களிலிருந்து வெளியேறும் கழிவின் அளவு பாதியாகக் குறையும்.
- பாட்டரி மின்சாரத்தில் ஓடும் வாகனங்கள் அதிக அளவில் உபயோகத்துக்கு வந்து விடும்.

## 2006 :

- எரிமலைகள் வெடிக்கப் போகும் தருணத்தை முன்கூட்டியே அறியும் முறை ஒன்று இருக்கும்.
- எயிட்ஸுக்குச் சிகிச்சை முறை இருக்கும்.

## 2007 :

- குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்க சோலார் செல்கள் (சூரியசக்தி) பயன்படுத்தப்படும்.

♦ மணிக்கு 1500 கி.மீ. வேகத்தில் செல்லும் கார்கள் புழக்கத்தில் இருக்கும்.

## 2008 :

♦ ஓஜோன் திரையின் ஓட்டைகளைத் 'தைக்க' ஒரு கருவி உருவாக்கப்பட்டு, அதை விமானங்களில் ஏற்றிச் சென்று உபயோகிப்பார்கள்.

♦ ஜப்பானிய மொழியில் ஒருவர் போனில் பேசினால் அதை கணத்துக்குக் கணம் மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் தரும் கருவி போனுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

## 2009 :

♦ சூரிய சக்தியை பயோகெமிகல் முறையில் உருமாற்றி சேமித்து வைக்கும் தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்.

♦ வறண்ட, மணற்பாங்கான பகுதிகளிலும் உவர் நிலங்களிலும் வளரக்கூடிய செடி வகைகள் உருவாக்கப்பட்டு, பாலைவனங்களைச் சோலைவனங்களாக்கும் முயற்சி தொடங்கியிருக்கும்.

♦ மனநோய்கள் குறித்த அறிவும் பிரக்ஞையும் அதிகரித்து, மன இறுக்கம், அழுத்தம் காரணமாகத் தோன்றும் மன நோய்களைத் தவிர்க்கும் அணுகுமுறை பெருகியிருக்கும்.

## 2011 :

♦ பசிஃபிக் கடலை இரண்டே மணி நேரங்களில் கடக்கும் விமானம் முந்நூறு பயணிகளைச் சுமந்து பறக்கும்.

## 2012 :

♦ மின் காந்த உந்து விசையால் பயணிக்கும் கப்பல் உபயோகத்தில் இருக்கும்.

## 2013 :

♦ கான்ஸர் செல்கள் வளர்வதைத் தடுக்கும் முறையைக் கண்டுபிடித்து விடுவோம்.

♦ மூப்பு எப்படி உண்டாகிறது என்பதைத் துல்லியமாகக் கண்டறிந்திருப்போம்.

♦ விண்வெளியில் பயன்படுத்தும் செமி கண்டக்டர்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை விண்வெளியிலேயே நிறுவி விடுவோம்.

♦ விண்வெளிக்கும் பூமிக்குமிடையே போக்குவரத்துத் தொடர்பு இருந்து கொண்டேயிருக்கும் - ஸ்பேஸ் விமானம் மூலம்.

## 2014 :

♦ மூளை எப்படி உருவாகிறது எப்படி வளர்கிறது என்பதைக் கண்டுபிடித்து விடுவோம்.

## 2015 :

♦ நிலாவில் இருந்தபடி விண்வெளியைக் கவனிக்க ஒரு விண் ஆராய்ச்சி நிலையம் சந்திர மண்டலத்தில் கட்டப்படும்.

♦ உலகம் வெளிப்படுத்தும் கரியமில வாயுவின் அளவு கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும். 1991இல் வெளியானதில் இருபது சதவிகிதமே வெளியேறும்.

♦ ஆயிரம் மீட்டர் உயர குடியிருப்புகளில் சௌகரியமாய் வாழ்வோம்.

## 2016 :

♦ மரபுக்கூறு அமைப்பு காரணமாக (ஜீன்) ஏற்படும் நோய்களை மரபுக் கூறு சிகிச்சை முறைகளைக் கொண்டே குணப்படுத்துவோம்.

## 2018 :

♦ அடுத்த பத்து முதல் இருபது ஆண்டுகளில் கிடைக்கக்கூடிய மீன்வளம் பற்றிய தகவல் விஞ்ஞான பூர்வமாய் அறியப்பட்டு, அதற்கேற்ப மீன் உற்பத்தியைக் கூட்டி அல்லது குறைத்துக் கொள்வோம்.

## 2020 :

♦ மனித உடலை ஆழ்ந்த தூக்கத்துக்கு உட்படுத்தி, அப்படியே மூப்பின்றிப் பாதுகாத்து வைக்கும் முறை உருவாக்கப்பட்டிருக்கும்.

ஆதாரம் : **ஜப்பானிய ஆய்வுகள்.**
வெளியிட்டது : **NISSAT NEWSLETTER.**



"உங்க வீட்டுக்கு டாக்டர் வந்துட்டுப் போறாரே: யாருக்கு என்ன உடம்பு?"

"டாக்டருக்குத்தான்! இருமலுக்குப் பாட்டி கிட்ட கை வைத்தியம் கேட்டுக்கிட்டுப் போறார்!"

— கே. வி.

# பார்த்திபன் கனவு

## 9. விக்கிரமன் சபதம்

சித்திரங்கள் எல்லாம் பார்த்து முடிந்ததும் விக்கிரமன் தயங்கிய குரலில், "அப்பா!" என்றான். மகாராஜா அவனை அன்பு கனியப் பார்த்து, "என்ன கேட்க வேண்டுமோ கேள், குழந்தாய்! சொல்ல வேண்டியதையெல்லாம் தயங்காமல் சொல்லி விடு; இனிமேல் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது" என்றார்.

"ஒன்றுமில்லை, அப்பா! இந்தச் சித்திரங்கள் எல்லாம் எவ்வளவு நன்றாயிருக்கின்றன என்று சொல்ல ஆரம்பித்தேன். இவ்வளவு அற்புதமாய்ச் சித்திரம் எழுத எப்போது கற்றுக் கொண்டீர்கள்? நமது சித்திர மண்டபத்தில் கூட இவ்வளவு அழகான சித்திரங்கள் இல்லையே!" என்றான் விக்கிரமன்.

மகாராஜா மைந்தனைக் கட்டி அணைத்துக் கொண்டார். "என் கண்ணே! என்னுடைய சித்திரத் திறமையை நீ ஒருவன் வியந்து பாராட்டியதே எனக்குப் போதும். வேறு யாரும் பார்த்துப் பாராட்ட வேண்டியதில்லை. என் மனத்திலிருந்த ஏக்கம் இன்று தீர்ந்தது" என்றார்.


"ஆனால் அப்பா! எதற்காக உங்கள் வித்தையை நீங்கள் இவ்விதம் ஒளித்து வைத்திருக்க வேண்டும்? இந்த ஆச்சரியமான சித்திரங்களைப் பற்றி நீங்கள் வெட்கப்பட வேண்டிய அவசியம் என்ன? ஆகா! இந்த உருவங்கள் எல்லாம் எவ்வளவு தத்ரூபமாய், உணர்ச்சி பெற்று விளங்குகின்றன? முகங்களிலேதான் எத்தனை ஜீவகளை! இவ்வளவு ஆச்சரியமான சித்திரங்களை வேறு யார் எழுத முடியும்? ஏன் இந்த இருட்டு மண்டபத்தில் இவற்றைப் பூட்டி வைத்திருக்க வேண்டும்? எல்லாரும் பார்த்து சந்தோஷப் பட்டாலென்ன?" என்று விக்கிரமன் ஆத்திரமாய்ப் பேசினான்.

அப்போது பார்த்திப மகாராஜா சொல்லுகிறார் :-

"கேள், விக்கிரமா! இந்த உலகத்தில் எவன் அதிகாரமும் சக்தியும் பெற்றிருக்கிறானோ, அவனிடம் உள்ள வித்தையைத்தான் உலகம் ஒப்புக் கொண்டு பாராட்டும். காஞ்சியில் மகேந்திர சக்கரவர்த்தி இருந்தாரல்லவா? ஒரு தடவை பெரிய வித்வத் சபை கூடி அவருக்குச் 'சித்திரக்காரப் புலி' என்ற பட்டம் அளித்தார்கள். மகேந்திரவர்மருடைய சித்திரங்கள் மிகவும் சாமானியமானவை; ஆனாலும் அவற்றைப் புகழாதவர் கிடையாது. இப்போதுள்ள நரசிம்ம சக்கரவர்த்திக்கு இது மாதிரி எத்தனையோ பட்டப் பெயர்கள் உண்டு. சித்திரக் கலையில் சிங்கம்! கான வித்தையில் நாரதர்! சிற்பத்தில் விசுவகர்மா! - உலகம் இப்படியெல்லாம் அவரைப் போற்றுகிறது. ஏன்? அவரிடம் பெரிய சைன்யம் இருப்பதினாலேதான்; அவருடைய சாம்ராஜ்யம் பெரியதாயிருப்பதனால்தான். குழந்தாய்! தெய்வத்துக்கு ஏழை, செல்வன் என்ற வித்தியாசம் இல்லை. இறைவனுக்குச் சக்கரவர்த்தியும் ஒன்றுதான்! செருப்பு தைக்கும் சக்கிலியனும் ஒன்றுதான். ஆனாலும், இந்த உலகத்தில் தெய்வத்தின் பிரதிநிதிகளாயிருப்பவர்கள் கூட, பெரிய படைபலம் உள்ளவன் பக்கமே தெய்வமும் இருப்பதாய்க் கருதுகிறார்கள். மகேந்திரன் வெகுகாலம் ஜைன மதத்தில் இருந்தான்! சிவனடியார்களை எவ்வளவோ துன்பங்களுக்கு உள்ளாக்கினான். பிறகு, அவனுக்குத் திடீரென்று ஞானோதயம் உண்டாயிற்று. சிவபக்தன் என்று வேஷம் போட்டு நடித்தான். விக்கிரமா! மகேந்திரனும் சரி, அவன் மகன் நரசிம்மனும் சரி, நடிப்புக் கலையில் தேர்ந்தவர்கள்; விதவிதமான வேஷங்கள் போட்டுக் கொள்வார்கள்; நம்பினவர்களை ஏமாற்றுவார்கள். இவர்களுடைய சிவபக்தி நடிப்பு உலகத்தை ஏமாற்றி விட்டது. புராதன காலத்திலிருந்து சோழ வம்சத்தினர்தான் சைவத்தையும், வைஷ்ணவத்தையும் வளர்த்து வந்தார்கள். சிராப்பள்ளிப் பெருமானையும், ஸ்ரீரங்கநாதனையும் குலதெய்வங்களாகப் போற்றி

அமரர் கல்கி

வந்தார்கள். ஆனால், இன்றைய தினம் சிவனடியார்களும், வைஷ்ணவப் பெரியார்களும் யாருடைய சபா மண்டபத்திற்குப் போகிறார்கள்? திரிலோகாதிபதியான காஞ்சி



நரசிம்ம சக்கரவர்த்தியின் ஆஸ்தான மண்டபத்துக்குத்தான்! என்னுடைய சித்திரங்களைப் பிறர் பார்ப்பதை நான் ஏன் விரும்பவில்லை என்று இப்போது தெரிகிறதா? சோழ நாடு சிற்றரசாயிருக்கும் வரையில், 'பார்த்திபன் சித்திரம் வேறு எழுத ஆரம்பித்து விட்டானா' என்று உலகம் பரிசிக்கும். விக்கிரமா! இன்னொரு விஷயம் நீ மறந்து விட்டாய்...'' என்று நிறுத்தினார் மகாராஜா.

"என்ன அப்பா?" என்று விக்கிரமன் கேட்டான்.

"இவை, கேவலம் சித்திரத் திறமையைக் காட்டுவதற்காக மட்டும் எழுதிய சித்திரங்கள் அல்லவே, குழந்தாய்! என்னுடைய மனோரதங்களை; என் இருதய அந்தரங்கத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் ஆசைகளையல்லவா இப்படிச் சித்திரித்திருக்கிறேன்? இந்தச் சித்திரங்களை இப்போது பார்க்கிறவர்கள் சிரிக்க மாட்டார்களா? 'வீணாசை கொண்டவன்' 'எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடுகிறவன்' என்றெல்லாம் பரிகசிக்க மாட்டார்களா? ஆகையினாலேயே, இந்த மண்டபத்தை இப்படி இருள் சூழ்ந்ததாய் இப்போது வைத்திருக்கிறேன். இந்தச் சித்திரக் காட்சிகள் எப்போது உண்மைச் சம்பவங்களாகத் தொடங்குமோ, அப்போது தான் மண்டபத்தில் வெளிச்சம் வரச் செய்ய வேண்டும். அப்போதுதான் எல்லா ஜனங்களும் வந்து பார்க்கும்படி மண்டபத்தைத் திறந்து விட வேண்டும். அந்தப் பாக்கியம், விக்கிரமா, என் காலத்தில் எனக்குக் கிடைக்கப் போவதில்லை. உன்னுடைய காலத்திலாவது நிறைவேற வேண்டுமென்பது என் ஆசை. என்னுடன் நீயும் போர்க்களத்துக்கு வருவதாகச் சொல்வதை நான் ஏன் மறுக்கிறேன் என்று இப்போது தெரிகிறதல்லவா?"

"தெரிகிறது, அப்பா!"

"என் கனவை நிறைவேற்றுவதற்காக நீ உயிர் வாழ வேண்டும். சோழ நாட்டின் உன்னதமே உன் வாழ்க்கையின் நோக்கமாயிருக்க வேண்டும். சோழர் குலம் பெருமையடைவதே அல்லும் பகலும் உன்னுடைய நினைவாயிருக்க வேண்டும். சோழரின் புலிக்கொடி வேறு எந்த நாட்டின் கொடிக்கும் தாழாமல் வானளாவிப் பறக்க வேண்டுமென்று சதா காலமும் நீ சிந்திக்க வேண்டும். நாளை மறுதினம் நான் போருக்குக் கிளம்புகிறேன். யுத்த களத்திலிருந்து திரும்பி வருவேனென்பது

நிச்சயமில்லை. விக்கிரமா! போர்க்களத்தில் மடிகிறவர்கள் வீர சொர்க்கம் அடைகிறார்களென்று புராணங்கள் சொல்லுகின்றன. ஆனால், நான்



வீர சொர்க்கம் போக மாட்டேன். திரும்பி இந்தச் சோழ நாட்டுக்குத்தான் வருவேன். காவேரி நதி பாயும் இந்தச் சோழ வளநாடு தான் எனக்குச் சொர்க்கம். நான் இறந்த பிற்பாடு என்னுடைய ஆன்மா இந்தச் சோழ நாட்டு வயல்வெளிகளிலும், கோயில் குளங்களிலும், நதிக் கரைகளிலும், தென்னந்தோப்புகளிலும்தான் உலாவிக் கொண்டிருக்கும். அப்போது, 'பார்த்திபன் மகனால் சோழர் குலம் பெருமையடைந்தது' என்று ஜனங்கள் பேசும் வார்த்தை என் காதில் விழுமானால், அதைவிட எனக்கு ஆனந்தமளிப்பது வேறொன்றுமிராது. எனக்கு நீ செய்ய வேண்டிய ஈமக்கடன் இதுதான். செய்வாயா, விக்கிரமா?"

இளவரசன் விக்கிரமன், "செய்வேன், அப்பா! சத்தியமாய்ச் செய்வேன்!" என்று தழுதழுத்த குரலில் சொன்னான். அவன் கண்களில் நீர் துளித்து, முத்து முத்தாகக் கீழே சிந்திற்று.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டும்

கேட்டுக் கொண்டும் இருந்த பொன்னனுடைய கண்களிலிருந்தும் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

மகாராஜா அவனைப் பார்த்து, "பொன்னா! எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா? இளவரசரிடம் உண்மையான அன்புள்ள சிலராவது அவருக்குத் துணையாக இருக்க வேண்டாமா? அதற்காகத்தான் உன்னை இருக்கச் சொல்லுகிறேன். என்னுடன் நீ யுத்தத்துக்கு வருவதைக் காட்டிலும் இளவரசருக்குத் துணையாக இருந்தாயானால், அது தான் எனக்குத் திருப்தியளிக்கும். இருக்கிறாயல்லவா?" என்று கேட்டார்.

பொன்னன் விம்மலுடன் "இருக்கிறேன், மகாராஜா!" என்றான்.

## 10. படை கிளம்பல்

உறையூரில் அன்று அதிகாலையிலிருந்து அல்லோலகல்லோலமாயிருந்தது. பார்த்திப மகாராஜாவின் பட்டாபிஷேகத்தின் போதும் மகேந்திர வர்ம சக்கரவர்த்தியின் விஜயத்தின் போதும் கூட, உறையூர் வீதிகள் இவ்வளவு அழகாக அலங்கரிக்கப்படவில்லையென்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். வீட்டுக்கு வீடு தென்னங் குருத்துக்களினாலும் மாவிலைகளினாலும் செய்த தோரணங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. வீடுகளின் திண்ணைப் புறங்களிலெல்லாம், புதிய சுண்ணாம்பும் சிவப்புக் காவியும் மாறி மாறி அடித்திருந்தது. ஸ்திரீகள் அதிகாலையிலேயே எழுந்திருந்து, தெரு வாசலைச் சுத்தம் செய்து, அழகான கோலங்கள் போட்டு, வாசலில் குத்து விளக்கு ஏற்றி வைத்தார்கள். பிறகு, ஆடை ஆபரணங்களினால் நன்கு அலங்கரித்துக் கொண்டு, போருக்குப் படை கிளம்பும் வேடிக்கை பார்ப்பதற்காக வாசல் திண்ணைகளிலோ மேல் மாடிகளின் சாளரங்களின் அருகிலோ வந்து நின்று கொண்டார்கள்.

விடிய ஒரு சாமம் இருக்கும்போதே, அரண்மனையிலுள்ள பெரிய ரண பேரிகை முழங்கத் தொடங்கியது. அதனுடன் வேறு சில சப்தங்களும் கலந்து கேட்கத் தொடங்கின. குதிரைகள் கனைக்கும் சப்தம், யுத்த வீரர்கள் ஒருவரையொருவர் கூவி அழைக்கும் குரல், அவர்கள் இடையிடையே எழுப்பிய வீர முழக்கங்களின் ஒலி, வேல்களும் வாள்களும் ஒன்றோடொன்று உராயும் போது உண்டான கண கண ஒலி, போருக்குப் புறப்படும் வீரர்களை அவர்களுடைய தாய்மார்கள் வாழ்த்தி அனுப்பும் குரல், காதலிகள் காதலர்களுக்கு விடைகொடுக்கும் குரல் - இவ்வளவுடன், வழக்கத்துக்கு முன்னதாகவே துயில் நீங்கி எழுந்த பறவைகளின் கலகல சப்தமும் சேர்ந்து ஒலித்தது.

சூரிய உதயத்துக்கு முன்னாலிருந்தே அரண்மனை வாசலில் போர் வீரர்கள் வந்து குவியத் தொடங்கினார்கள். படைத் தலைவர்கள் அவர்களை அணிவகுத்து நிற்கச் செய்தார்கள். வரிசை வரிசையாகக் குதிரைப் படைகளும், யானைப் படைகளும், காலாட் படைகளும் அணிவகுத்து நிறுத்தப்பட்டன. எல்லாப் படைகளுக்கும் முன்னால் சோழர்களின் புலிக்கொடி வானளாவிப் பறந்தது. சங்கு, கொம்பு, தாரை, தப்பட்டை முதலிய வாத்தியங்களை முழக்குகிறவர்கள் படைகளுக்கு இடையிடையே நிறுத்தப்பட்டார்கள். பெரிய பேரிகைகளைச் சுமந்த ரிஷபங்களும் ஆங்காங்கு நின்றன. பட்டத்துப் போர் யானை அழகாக அலங்கரிக்கப்பட்டு அரண்மனை வாசலில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது.

இந்த மாதிரி அணிவகுப்பு நடந்து கொண்டிருக்கையில் அடிக்கடி போர் வீரர்கள் "வீர வேல்" "வெற்றி வேல்" என்று முழங்கிக் கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அரண்மனை முன் வாசலில் கலகலப்பு ஏற்பட்டது. "மகாராஜா வருகிறார்!" "மகாராஜா வருகிறார்!" என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அரண்மனைக்குள்ளேயிருந்து கட்டியக்காரர்கள் இருவர், "சோழ மண்டலாதிபதி பார்த்திப மகாராஜா வருகிறார்! பராக் பராக்" என்று கூவிக் கொண்டு வெளியே வந்தார்கள். வீதியில் கூடியிருந்த அந்தணர்களும் முதியோர்களும் "ஜய விஜயீ பவா!"

அருள்வாக்கு

### விநாயகரும் தமிழும்!

சைவ க்ஷேத்ரங்கள் அளவுக்குக் காவேரிக் கரையில் வைஷ்ணவ க்ஷேத்ரங்கள் இல்லாவிட்டாலும் சைவத்துக்கும் இல்லாத ஒரு சிகரமான பெருமையை வைஷ்ணவ ஸம்பந்தப்படுத்தியே பிள்ளையார் காவேரிக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். என்னவென்றால்: சைவர்கள் 'கோயில்' என்றே முதலிடம் கொடுத்துக் குறிப்பிடும் சிதம்பரம் காவேரிக் கரையில் இல்லை. வைஷ்ணவர்கள் 'கோயில்' என்று முதல் ஸ்தானம் தந்து சொல்கிற ஸ்ரீரங்கம் தான் தமிழ் தேசக் காவேரிக்கே ஜீவ மத்யமான ஸ்தானத்தில் இருக்கிறது. 'உபய காவேரி' என்பதாக இரண்டு பக்கமும் நதி சூழ, 'காவேரி ரங்கன்' என்றே கியாதி பெற்ற



பெருமாள் அங்கே பள்ளி கொண்டிருக்கிறார். அந்த ரங்கராஜா எப்படி அங்கே வந்தார்? விக்நேச்வரர் பண்ணிய லீலையால்தான்! இக்ஷ்வாகு வம்சத்தினர் வழிவழியாகப் பூஜித்து வந்த ஸ்ரீரங்கநாத விக்ரஹத்தை ராமசந்திரமூர்த்தி விபீஷணருக்குக் கொடுத்தனுப்பி விட்டார். விக்ரஹத்தோடு லங்கைக்குப் புறப்பட்ட விபீஷணர் இந்த உபய காவேரித் தீவுக்கு வருகிற வரை சும்மா பார்த்துக் கொண்டிருந்த விக்நேச்வரர்தான் சட்டென்று அப்போது, 'இந்த பாரத தேசத்தை, தமிழ் தேசத்தை, ரமணீயமான இந்தக் காவேரித் தீவை விட்டுப் பெருமாள் போகவாவது?' என்று நினைத்தார். மாய விளையாட்டெல்லாம் பண்ணி, ரங்கநாதர் அந்த இடத்திலேயே அசைத்தெடுக்க முடியாதபடி ப்ரதிஷ்டை ஆகும்படி செய்து விடார்! அவர் பிரஸாதித்த அந்த க்ஷேத்ரமே விஷ்ணு ஸ்தலங்களில் பிரதானமாகவும், காவேரி தீரத்திலுள்ள அத்தனை சோணாட்டு சிவ-விஷ்ணு ஆலயங்களுக்கும் மத்யமணி மாதிரியும் சிறப்புப் பெற்று விட்டது.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.**

என்று கோஷித்தார்கள்.

**ம**காராஜா அரையில் மஞ்சள் ஆடையும் மார்பில் போர்க் கவசமும், இடையில் உடைவாளும் தரித்தவராய் வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து ராணியும் இளவரசரும் வந்தார்கள். அரண்மனை வாசலில் மகாராணி தன் கையில் ஏந்தி வந்த ஆத்திமாலையை அவர் கழுத்தில் சூட்டினாள். அருகில் சேடி ஏந்திக் கொண்டு நின்ற மஞ்சள் நீரும் தீபமும் உள்ள தட்டை வாங்கி, மகாராஜாவுக்கு முன்னால் மூன்று சுற்றுச் சுற்றி விட்டு, கையில் ஒரு துளி மஞ்சள் நீர் எடுத்து மகாராஜாவின் நெற்றியில் இலகுமிட்டாள். அப்போது மீண்டும் மீண்டும் "ஜய விஜயீ பவா" "வெற்றி வேல்" "வீர வேல்" என்னும் முழக்கங்கள் ஆகாயத்தை அளாவி எழுந்து, கொண்டிருந்தன. சங்கு, கொம்பு, தாரை, தப்பட்டை முதலிய வாத்தியங்கள் காது செவிடுபடும்படி அதிர்ந்தன.

மகாராஜா வீதியில் நின்ற கூட்டத்தை ஒரு தடவை தம் கண்களால் அளந்தார். அப்போது ஒரு ஏவலாளன் விரைந்து வந்து, மகாராஜாவின் காலில் விழுந்து எழுந்து கைகட்டி வாய் பொத்தி நின்றான். "என்ன சேதி?" என்று மகாராஜா கேட்கவும், "மாரப்ப பூபதி இன்று காலை கிளம்பும் போது, குதிரை மீதிருந்து தவறிக் கீழே விழுந்து மூர்ச்சையானார். மாளிகைக்குள்ளே கொண்டு போய்ப் படுக்க வைத்தோம். இன்னும் மூர்ச்சை தெளியவில்லை" என்றான்.

இதைக் கேட்ட மகாராஜாவின் முகத்தில் லேசாகப் புன்னகை பரவிற்று. அந்த ஏவலாளனைப் பார்த்து, "நல்லது, நீ திரும்பிப் போ! பூபதிக்கு மூர்ச்சை தெளிந்ததும், உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னேன் என்று தெரிவி!" என்றார்.

மேற்கண்ட சம்பாஷணை மகாராஜாவுக்கு அருகிலிருந்த ஒரு சிலருடைய காதிலே தான் விழுந்தது; ஆனாலும், வெகு சீக்கிரத்தில், "மாரப்ப பூபதிக்கு ஏதோ விபத்தாம்! அவர் போருக்கு வரவில்லையாம்" என்ற செய்தி பரவி விட்டது.

பிறகு, மகாராஜா அருகில் நின்ற விக்கிரமனை வாரி எடுத்து மார்போடணைத்துக் கொண்டு உச்சிமுகர்ந்தார். "குழந்தாய்! நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கிறதா? மறவாமலிருப்பாயா?" என்றார். "நினைவில் இருக்கிறது, அப்பா! ஒருநாளும் மறக்க மாட்டேன்" என்றான் விக்கிரமன். பிறகு மகாராஜா மைந்தனின் கையைப் பிடித்து அருள்மொழியினிடம் கொடுத்து, "தேவி! நீ தைரியமாயிருக்க வேண்டும். சோழர் குலச் செல்வத்தையும் புகழையும் உன்னிடம் ஒப்புவிக்கிறேன். வீர பத்தினியாயிருந்து என் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். முகமலர்ச்சியுடன் இப்போது விடை கொடுக்க வேண்டும்" என்றார்.

அருள்மொழி, கண்ணில் நீர் பெருக, நெஞ்சை அடைக்க, "இறைவனுடைய அருளால் தங்கள் மனோரதம் நிறைவேறும்; போய் வாருங்கள்" என்றாள்.

மகாராஜா போர் யானை மீது ஏறிக் கொண்டார். மறுபடியும் போர் முரசுகளும், தாரை தப்பட்டை எக்காளங்களும் ஏககாலத்தில் காது செவிடுபடும்படி முழங்கின. உடனே அந்தச் சோழ நாட்டு வீரர்களின் படை அங்கிருந்து பிரயாணம் தொடங்கிற்று.

(தொடரும்)

நண்பன் பார்த்திபன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தேன். 'சில்'லென்ற சிவப்புக் கவர் சிமெண்டுத் திண்ணை. செங்கல் சுவர் மேல் ஓலை வேய்ந்த வீடு. சுவரில் அவர்கள் குடும்பப் புகைப்படங்கள். வரிசையாக... கண்களை ஓடவிட்டேன்.

'அட, இது நம்ம காலேஜ் 'பேர்வெல்' பார்ட்டி போட்டோவாச்சே!'

எழுந்து நின்று உற்றுப் பார்த்தேன். நானும் பார்த்திபனும் அடுத்தடுத்து நின்றிருந்தோம். எப்பொழுதும் மடிப்புக் கலையாத பேண்ட் சட்டைதான் போடுவான். சிவப்பாய்... உயரமாய்... என் ஆருயிர் கல்லூரித் தோழன். கனவில் மிதந்தேன் ஒரு நிமிடம்.

"தம்பி நிக்குறீங்களே, உக்காருங்க. இதோ காப்பி போட்டாந்துடுறேன்..." பார்த்திபன் அம்மாதான். மீண்டும் திண்ணையில் அமர்ந்து கொண்டேன். வாசலில் பார்வையை ஓட விட்டேன்.

நெற்குதிர்... அடேயப்பா! எவ்வளவு பெரிசு? அதைத்தாண்டித் தொழுவம். வெள்ளை, பழுப்பு நிறங்களில் மாடுகளும் கன்றுக் குட்டிகளும் அடைத்துக் கொண்டு... வெய்யில் பொசுக்கி எடுத்தது.

ஹூம்... கிராமம். சரியான கிராமம். 'பார்த்தி எப்படி இங்க 'மேனேஜ்' பண்ணிக் கொண்டிருக்கிறான்!'

பி.காம். இறுதியாண்டு படிக்கின்ற பொழுது எங்களுக்குள் பல தீர்மானங்கள் போட்டுக் கொண்டது நினைவிற்கு வந்தது. 'மெட்ராசிலேயே பெரிய கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து விட வேண்டும். நல்ல லாட்ஜில் ரூம் எடுத்துக் கொண்டு, 'நைன் டு பை' ஆபீசராக அலுவலகம் சென்று வர வேண்டும்; வாழ்க்கையை 'ஜாலி'யாக அனுபவிக்க வேண்டும்.' இப்படி இன்னும் என்னென்னவோ.

**சோம. வள்ளியப்பன்**

"வாங்க தம்பி வாங்க" வாசலில் பார்த்திபன் அப்பா முகம் முழுதும் மகிழ்ச்சி பொங்க அழைத்தபடி நின்றிருந்தார். மெட்ராசில் ஒருமுறை காலேஜ் ஹாஸ்டலில் வைத்துப் பார்த்திருக்கிறேன்...வரட்டும்... இவரிடமும் கேட்டுவிட வேண்டியதுதான். 'எதுக்கு உங்க பிள்ளையைப் பணம் செலவழித்து, கஷ்டப்பட்டு மெட்ராசில் படிக்க வைத்தீர்கள். இங்கே கிராமத்திலேயே கிடக்கவா?' வரட்டும் கேட்கிறேன்.

"அப்புறம்... பத்துமணி மூட்டுவாஞ்சேரி வண்டியில வந்தீங்களா?..."

"ஆமாங்க..."

'பேரைப்பார் மூட்டுவாஞ்சேரி...ஹூம்' மனத்துக்குள் நினைத்துக் கொண்டேன்.

"தம்பி சித்த நாழியில வந்துடும். நீங்க...வெங்கடேசன் தானுங்களே? பாண்டிச்சேரி முதலியார் வூட்டு..."

"ஆமாம்..சார், கரெக்டா சொல்லிட்டீங்களே!"

"ம்... இப்ப என்ன பண்ணுறீங்க...?" எதிர்த் திண்ணையில் துண்டால் தட்டிவிட்டு அமர்ந்தார்.

"நானா?... இப்ப 'மெக்மிலன் கம்பெனில' ஒர்க் பண்றேங்க."

"என்னதுங்க?..."

எனக்குள் லேசாக சிரிப்பு. சே! இவரிடம் போய்... இங்கிலீஷில்.

" 'மெக்மிலன்'னு ஒரு பெரிய ஆபீசுங்க... ஏற்றுமதி...இறக்குமதி வியாபாரம். அங்க வேலை செய்யுறேன்."

"ஓகோ!..." அவர் முகத்தில் ஆச்சரிய ரேகைகள். இருக்காதா பின்னே?...

"ஆபீஸ் கட்டடமே ஆறுமாடி..."

"ஹ..ஹாங்.." சிறிது மவுனத்திற்குப் பிறகு, "உங்களுக்கு என்ன வருமுங்க?" என்றார்.

"எல்லாஞ்சேத்து... தவுசண்ட் எய்ட் அன்ரட். ஆயிரத்து எண்ணூறு. அதுபோக பி.எப்., கிராசுவுடி....அது இதுன்னு..."

பெரியவர் முகத்தில் முன்னிலும் ஆழமாய் யோசனை. இருக்காதா பின்னே? பெருமையாய்த் தொடர்ந்தேன்...

"அப்புறம் வருஷத்திற்கு இருபத்தி இரண்டுநாள் சம்பளத்தோட லீவு..."

''பரவாயில்லேயே...! வேலை ரொம்பக் கஷ்டமா!''

''சேச்சே!... காலையில ஒன்பதுக்குப் போனா...சாயங்காலம் அஞ்சு மணிக்கெல்லாம் வந்திடலாம். டேபிள், சேர், ஆபீஸ் பூரா ஏசி.''

**பா**ர்த்திபன் அம்மா காப்பி கொண்டு வந்தார். வாயில் ஒட்டியது பால். அடேயப்பா எவ்வளவு 'திக்'கா இருக்கு!... ''கறந்தபாலு தம்பி. கண்டக் காச்சியிருக்கேன். ஓங்க பட்டணத்து காப்பி இதுக்கிட்ட நிக்க முடியாது...'' நிஜமான பெருமை முகத்தில் தெரிந்தது.

என்னால் முழுதும் சாப்பிட முடியவில்லை. கிட்டத்தட்ட இரண்டு தம்ளர். அப்பாடா என்றிருந்தது. லேசாக வியர்வை அரும்பியது.

''பார்த்திபன் என்ன சார் பண்றான்? இங்க உட்கார்ந்துக் கிட்டு!'' என்னால் அடக்க முடியவில்லை. கேட்டுவிட்டேன். இதற்காகத் தானே கிளம்பி வந்திருக்கிறேன் இவ்வளவு தூரம்! என் கேள்வி அவரை யோசிக்க வைத்திருக்க வேண்டும். உற்றுப் பார்த்தவர்.

''அதோ அவனே வந்திட்டான் பாருங்க... அவனையே கேளுங்களேன்...''

திரும்பிப் பார்த்தேன்.

பார்த்திபனா இவன்?.. என்னால் நம்பவே முடியவில்லை. கறுத்து-முரட்டுத்தனமாய்... ஒரு நிமிடம் அதிர்ந்து போனேன்.

இடுப்பில் லுங்கி... மேலே சட்டை. 'எங்கள் காலேஜ் 'பார்த்தி' எங்கே?...'

''வாடா, வெங்கி. எப்ப வந்தே?... ஒரு லெட்டர் கூடப் போடாம திடுதிடுப்புன்னு...'' அதே பழைய அன்பு. அன்யோன்யம். ரப்பர் செருப்பை உதறிவிட்டு, வெளியில் இருந்த பெரிய பித்தளை அண்டாவிலிருந்து தண்ணீரை மொண்டு மொண்டு, சேற்றுக்காலை தேய்த்துக் கழுவினான்.

வியர்வையில் நான் தெப்பலாய் நனைந்திருந்தேன். அவன் ஏதோ நிலாக் காய்வது போலல்லவா வெயிலைப் பொருட் படுத்தாமல்...

''அம்மா... சாப்பாடு தடபுடலா இருக்கட்டும். வெங்கி ஒரு வாரம் இங்கதான்... ஆமாம்...''

''டேய்...டேய்.. என்னது ஒரு வாரமா?.. எங்க எம்.டி. என்னைத் தேடிக்கிட்டு இங்கயே வந்திருவாரு...''

''யாரு எம்.டி.?'' டர்க்கி டவலால் முகம், கழுத்து, மார்பெல்லாம் அழுத்தித் துடைத்தபடி கேட்டான்.

''எங்க ஆபீஸ்



எம்.டி.டா. மெக்மிலன் எக்ஸ்போர்ட்ஸ் அண்டு இம்போர்ட்ஸ். என்ன?.. என்னைய சுத்தமா மறந்துட்ட போல..."

"எங்க...?நீ வேலைக்குச் சேர்ந்ததும் எழுதின தபால்தான். அதுக்கப்புறம் சத்தத்தையே காணோம்."

"சேர்ந்ததிலிருந்து டூர்... அது இதுன்னு... வெளியூர்டா.. அய்யாவுக்கு கீழ இப்ப மொத்தம் எட்டுப் பேர் தெரியுமா? நான் ஒரு செக்ஷன் இன்சார்ஜ்; பி.அண்ட் டி. போன், லேடி ஸ்டெனோ..."

அடுக்கிக் கொண்டே போனேன் வேண்டுமென்றே. பின் என்ன? படிச்சதையே மறந்துட்டு இங்க... மஞ்ச முள்ளுக் கூரையும் திண்ணையும், கைலியுமா...

"நாளைக்கு ஈவினிங் கிளம்புறேன்டா..." அதுக்குள்ள பேசி... இவனையும் தூண்டித் துருவி... உசுப்பி விட்டு நம்ம ஆபீசிலேயே எம்.டி.யிடம் சொல்லி.. ஒரு டீசன்ட் வேலையாக வாங்கிக் கொடுக்க வேண்டும். நாளை மாலைக்குள் விஷயத்தை முடித்து விடலாம் என்று நினைத்துக் கொண்டேன்.

**சா**ப்பிட அமர்ந்திருந்த பொழுது... வேட்டி சட்டையில் ஒருவர் வந்து பார்த்திபன் அப்பாவை அழைத்தார். அவர்கள் வெளியே போய்விட்டுத் திரும்பி வந்து, பார்த்திபனையே போய் விஷயத்தை முடிக்கச் சொல்ல, நான் புரியாமல் கவனித்துக் கொண்டிருந்தேன்.

காற்றோட்டமே இல்லாத இறுக்கமான உள் அறை. அங்கேயே ஒரு மரபீரோ. சுவரில் ஆணிகளில் பார்த்திபனின் சட்டைகள். அவன் வாழும் வாழ்க்கை எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஹாஸ்டலில் நாங்கள் இருந்த இருப்பென்ன? இப்பொழுது மெட்ராஸ் போனால்... வரட்டும், எல்லாவற்றையும் மாற்றி விட மாட்டேன்? இப்படித் தரையில் அமர்ந்து கொண்டு, கைலிகட்டிக் கொண்டு, வெயிலில் அலைந்து கொண்டு...

"என்ன முடிஞ்சிடுத்தாப்பா... பார்த்தி? என்ன சொல்றார் ரெட்டியார்?"

"முடிச்சிட்டேன்.. மூணுல ஒண்ணு தண்ணிக்குக் குடுத்திருறாராம். மூணுல ஒண்ணு பூமிக்கோசரம் அவருக்காம்... மிச்சம் நமக்காம்.. சரின்னுட்டேன்..."

"என்டா...தண்ணி நம்ம நிலத்துக்கே பத்தாதேடா... அவருது வேற பன்னென்டு ஏக்கராச்சே!"

"நான்தான் 'டிரிப் இரிகேஷன்'. அதான் சொட்டுநீர் பாசனம்பா... என்னப்பா.. அதான் சொன்னேனே...!"

"முடியுமா?... அப்பசரி... எல்லாம் உன்னைய நம்பித்தான்..."

குழப்பமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த என்னை அழைத்து, "எல்லாம் நம்ம பார்த்தி தம்பி தலையெடுத்தப்பறம்தான் வீடு நல்லாயிருக்குது தம்பி. இப்ப மொத்தம் எங்களது போக... அறுபத்துநாலு ஏக்கர் விவசாயம் பார்த்தியே பாக்குது..." என்றார் பார்த்திபன் தாயார்.

'அறுபத்து நாலாவது எட்டாவது, விவசாயத்துல என்ன வந்திடப் போகிறதென்று இந்த அம்மாள் பாவம் மகன் பெருமையைப் பேசிக்கொண்டு... மெட்ராஸ் வேலை சந்தர்ப்பங்கள் பற்றித் தெரியாமல்...' எனக்குள் எண்ணங்கள்.

சாப்பிட்டதும் எனக்கு அசதியாக வர வெளியே திண்ணையில் அவர்கள் கொடுத்த ஜமுக்காளத்தை வேண்டாம் என்று சொல்லி விட்டுப் படுத்தேன். கொஞ்ச நேரம்தான் பார்த்திபன் படுத்திருப்பான். அதற்குள் 'என்ன உரம் போடலாம்' என்று கேட்டு ஒருவரும்...பாங்க் லோன் விவரம் கேட்டு ஒரு பெரியவரும் வர, பார்த்திபன் எதிர்த் திண்ணைக்குப் போய் என் தூக்கத்தைத் தொந்திரவு செய்யலாகாது என்று குரலை அடக்கி, அவர்களுக்கு விவரம் சொல்லிக் கொண்டிருந்தான். 'இவனுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?'

**மா**லை, முற்றிய பலாச்சுளைகளும், நோண்டிய பச்சை முந்திரிப் பயறும் சாப்பிட வயிறு முட்டிவிட்டது. "சரி, வா குளிக்கலாம்." பார்த்திபன் அழைத்தான். நல்ல ஷவர்பாத்தில்... இளம் வெந்நீரில்... 'ஆப்டர்ஷேவ் லோஷனை ஊற்றிக் குளிக்க எனக்குப் பிடிக்கும். இங்கு... திறந்த வெளியில்... பம்பு செட்டில்... நல்லாத்தான் மாறிட்டான் நம்ம பார்த்திபன்.

வழியில் குடையுங்கையுமாக வந்த ஒருவர், "உன்னைத்தான் தம்பி பார்க்க வந்தேன். ஒண்ணு இருபதுன்னா முடிச்சிடலாங்குறாரு கவுண்டரு... முடிவாச் சொல்லிட்டாரு... அதுவும் அவருக்கு அவசரமாம்... நாளைக்கே வேணுமாம். இல்லேன்னா கும்பகோணத்துல கொண்டுபோய் முடிச்சிடப் போறாராம்... வண்டி, நல்ல வண்டி... தம்பியே ஓட்டியிருக்கீங்க..." மரியாதை காரணமாய் தள்ளியே நின்று பேசினார்.

"சரின்னு சொல்லிடுங்க... பணந்தான்...முழுசுமா கேக்குறார்?"

"அப்பாவைக் கலந்துட்டீங்களா? சொல்லிடவா?..."

"நான் சொல்லிக்குறேன்... சரி அப்ப நீங்க உடனே கவுண்டர் வீட்டுக்குப் போங்க..."

தயங்கி நின்றவரைப் பார்த்து..., "என்ன அட்வான்ஸ் கமிஷனா?"

# UBF Ultra Benefit Fund Limited

Regd. Office: 39/1, Thirumalai Pillai Street, T. Nagar, Madras-600 017
Phone : 8284260

உண்மையான வளர்ச்சிக்கு
சரியான நிறுவனம்.

தலைவர் : பேராசிரியர் கே.ஆர். ஆறுமுகம் M.Pharm.
அல்ட்ரா குருப் நிறுவனங்கள்
நிர்வாக இயக்குநர் : திரு. ஏ.டி. சுந்தரம் B.Sc.
பாங்க் ஆஃப் மதுராவின் முன்னாள் தலைமை அதிகாரி
செயலர் : திரு. ஆர்.எம். முத்துராமன் B.Com.
தொழிலதிபர்

## 1. ஃபிக்சட் டெபாசிட் திட்டம்

| காலம் | 45 நாட்கள் | 90 நாட்கள் | 6 மாதங்கள் | 1 வருடம் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு வட்டி விகிதம் | 12% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% * |

* குறைந்த பட்சம் ரூ. 20,000/-

## 2. சூப்பர் டெபாசிட் திட்டம்

| வைப்பு நிதி | முதிர்வுகால மதிப்பு 60 மாதங்கள் | இலவசம் |
|---|---|---|
| ரூ. 1,000/-<br>ரூ. 10,000/- | ரூ. 2,400/-<br>ரூ. 24,000/- | 10 கிராம் வெள்ளிக்காசு **<br>2 கிராம் தங்கக்காசு **<br>* முதல் 1000 முதலீட்டாளர்களுக்கு மட்டும் |

## 3. நெ. 1 டெபாசிட் திட்டம்

| வைப்பு நிதி தொகை | முதிர்வு கால மதிப்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | 36 மாதங்கள் | 45 மாதங்கள் | 50 மாதங்கள் | 60 மாதங்கள் | 66 மாதங்கள் |
| ரூ. 5,000/-<br>ரூ. 7,500/- | 5,920/-<br>8,880/- | 7,150/-<br>10,725/- | 8,650/-<br>12,975/- | 10,000/-<br>15,000/- | 10,950/-<br>16,425/- | 13,450/-<br>20,175/- | 15,000/-<br>22,500/- |

## 4. சிறப்பு வைப்புத் திட்டம்

வைப்புத் தொகை ரூ. 10,000/-
2-வது ஆண்டு முடிவில் ரூ. 5,000/-மும்
4-வது ஆண்டு முடிவில் ரூ. 5,000/-மும்
6-வது ஆண்டு முடிவில் ரூ. 10,000/-மும் பெறலாம்.

## 5. டாப் டெபாசிட் திட்டம்

1. ஒரு தடவையில் ரூ. 3000/- செலுத்தி 5 ஆண்டுகள் கழித்து ஒவ்வொரு வருடமும் ரூ. 1,150/-ஐ ஆயுள் முழுவதும் பெறலாம்.
2. ஒரே தடவையில் ரூ. 30,000/- செலுத்தி 5 ஆண்டுகள் கழித்து, மாதாமாதம் ரூ.1000/-ஐ ஆயுள் முழுவதும் பெறலாம்.

## 6. அல்ட்ரா பத்திரம்

| காலம் | தொகை | முதிர்வுகால மதிப்பு |
|---|---|---|
| 36 மாதங்கள் | ரூ. 2,925/- | ரூ. 5,000/- |
| 36 மாதங்கள் | ரூ. 5,850/- | ரூ. 10,000/- |
| 36 மாதங்கள் | ரூ. 8,775/- | ரூ. 15,000/- |

## 7. ரெக்கரிங் டெபாசிட் திட்டம்

| மாத முதலீடு | முதிர்வுத் தொகை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | 36 மாதங்கள் | 48 மாதங்கள் | 60 மாதங்கள் | 72 மாதங்கள் |
| ரூ. 100/- | 1,320/- | 2,900/- | 4,340/- | 7,220/- | 10,340/- | 13,940/- |
| ரூ. 200/- | 2,640/- | 5,800/- | 9,680/- | 14,440/- | 20,680/- | 27,880/- |
| ரூ. 300/- | 3,960/- | 8,700/- | 14,520/- | 21,660/- | 31,020/- | 41,820/- |

## 8. அல்ட்ராவின் பாரடைஸ்

முதியோர்களுக்கு மட்டுமே

| குறைந்த தொகை | குறைந்த காலம் | வருட வட்டி விகிதம் |
|---|---|---|
| ரூ. 30,000/- | 3 வருடங்கள் | 21% |

## 9. அல்ட்ராவின் அற்புதத் திட்டம் :

ஒரே தடவை ரூ.2,000/- செலுத்தி 41 ஆண்டுகள் கழித்து ரூ. 20 இலட்சம் பெறுங்கள்
ஒரே தடவை ரூ. 10,000/- செலுத்தி 41 ஆண்டுகள் கழித்து ரூ. 1 கோடி பெறுங்கள்.

இன்றைய சேமிப்பு - நாளைய பாதுகாப்பு

முத்துக்கள்
ரூ. 10,000/- மற்றும் அதற்கு மேற்பட்ட டெபாசிட்டுகளுக்கு 2 கிராம தங்கக்காசு.
ரூ. 1000/- மற்றும் அதற்கு மேற்பட்ட டெபாசிட்டுகளுக்கு 10 கிராம் வெள்ளிக்காசு
பரிசுகள் : முதல் 1000 முதலீட்டாளர்களுக்கு மட்டுமே.

சேவிங்ஸ் பேங்க் கணக்கு ஆண்டுக்கு 10% வட்டி

# கிராமச் சுவைக்குக் காத்திருக்கிறது பரிசு!



கல்கி ஜனவரி 8 இதழ், பொங்கல் திருநாளையொட்டி கிராமச் சிறப்பிதழாக மலர்கிறது. நீங்களும் இந்த மலரில் பங்கேற்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். உங்கள் கிராமத்தைப் பற்றிய ஒரு சுவையான தகவலை ஒரு தபால் கார்டில் எழுதி அனுப்பலாமே?

அது விவசாய சாதனையாக இருக்கலாம்; சமுதாய மாற்றமாக இருக்கலாம்; வணக்கத்துக்குரிய ஒரு பெரியவர் பற்றியதாய் அமையலாம்; இன்னும் இயற்கை அழகு, தொழிலுக்கு உதவி, காதல் அனுபவம், விநோத பழக்க வழக்கம், அதிசய சம்பவம், சிரிக்க வைத்த நிகழ்ச்சி, தேர்த்திருவிழா, தலபுராணம் என்று எதுவாக வேணுமானாலும் இருக்கலாம். பிறர் படிக்கும்போது, ''அட அப்படியா!'' என்று ஓர் ஆச்சர்யத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதே முக்கியம்.

சுவாரஸ்யம் கூடுதலானால் சன்மானம் உயரும்!

நீங்கள் இன்று நகரத்தில் வசித்தாலும் உங்கள் பூர்வீக கிராமம் பற்றிய நினைவு இல்லாமல் போகாதே. ''கிராமச் சுவை'' என்று தலைப்புத் தந்து எழுதுங்கள்; எழுதிக் குவியுங்கள்!

**கடைசி தேதி : டிசம்பர் 15**

— ஆசிரியர்

---

''சேச்சே! அட்வான்ஸ் கமிஷன்லாம் இல்லதம்பி... என் பையனுக்கு ஆப்பரேஷன்... அதான் சொன்னேனே...'' என்றவர் ஒரு அசட்டுச் சிரிப்புடன் என்னைப் பார்த்தார்.

''நானூறுல்ல கேட்டீங்க... பார்த்திங் கல்ல... கட்ன ஓங்கியோட வந்திருக்கேன்... வீட்டுக்குத்தான் போகணும்.''

யோசனை செய்த பார்த்தி என்ன நினைத்தானோ திடீரென்று என்னைப் பார்த்தான்.

''பாக்கெட்ல எவ்வளவுடா வெச்சிருக்க?''

வெட்கமாய் இருந்தது. 'என்னிடம் ஏது நானூறும் ஐநூறும்!' மெட்ராஸ் திரும்ப நூறு ரூபாய் நோட்டைத் தனியாக எடுத்துப் பெட்டியில் வைத்திருக்கிறேன். மற்றபடி இருபது முப்பது சில்லறையாய்... மாசக் கடைசியில்.. அவனிடம் அதை வெளிக் காட்டிக் கொள்ளாது, ''சாரிடா, எல்லாம் பெட்டியில மாட்டிக்கிடுச்சு..'' என்றேன்.

''சரி சரி, வா வீட்டுக்குப் போயிட்டு வந்திடலாம். அவரு... குடுத்தாத்தான் கிளம்பு வாரு கவுண்டர் வீட்டுக்கு. இல்லிங்களா?...''

''இல்ல தம்பி...''

''சரி சரி... வாங்க.''

திண்ணையில் நான் அமர்ந்தேன். அவர் வெளியில் நின்றிருக்க, பார்த்திபன் அவன் அப்பாவிடம் உள்வீட்டில் பேசிக் கொண்டிருந்தான். நான் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன்.

''என்ன அது?... ஒன்னு இருபது... முடிச் சிட்டது!''

''டிராக்டரு தம்பி... நம்ம பார்த்தி தம்பி வாங்குது.''

''வெலைக்கா... இல்ல வாடகைக்கா?''

''சரியாப் போச்சு... வெலக்குத்தான் தம்பி... ஒரு லச்சத்து இருபதாயிரம் ரூபா...''

''லோனா?....''

''என்ன தம்பி இப்படி கேட்டுட்டீங்க?... நம்ம பார்த்தி தம்பியால முடியாததுங்களா? இரண்டு வெள்ளாமையில பார்த்திடாதுங்க!...''

எனக்குள் வியப்பு அடங்க மறுத்தது.

அவருக்கு ரூபாய் நானூறு கொடுத்து அனுப்பினான்.

''சரி, அப்ப நானும் கவுண்டர் வீட்டுக்குப் போய் விஷயத்தை முடிச்சிட்டு வர்றேன்... பணத்தை நாளைக்குக் காலைல பேங்க்ல எடுத்துக் குடுத்திடலாம்...'' என்றவன் என்னையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான். நான் ஆச்சர்யத்துடன் அவனோடு நடந்து கொண்டிருந்தேன்.

TRAVEL BACK TO

# BIBLICAL TIMES!

DECEMBER '94 ISSUE ON SALE



# GOKULAM

*The monthly magazine for children*

BUY YOUR CHILD A COPY TODAY!

**96 pages for just Rs. 5!**

**GOKULAM, Ekkaduthangal, Madras - 600 097.**



# 29

நரேந்திரநாத் பானர்ஜியின் அண்ணன் இந்திரநாத் பானர்ஜியின் மரணம் பற்றி ராஜாராமனுக்குக் கடிதம் எழுதிய - ஆனால் அக் கடிதத்தில் தனது பெயரை வெளிப்படுத்தாத - ராஜ்குமார் லண்டனில் ஆக்ஸ்ஃபோர்ட் தெருவில் விரைவாக நடந்து கொண்டிருந் தான். அவன் அதன் குறுக்குத் தெருவான பேக்கர் தெருவையடைந்ததும் அங்கே ஒரு கடையின் வாயிலில் அவனுக்காகக் காத் திருந்த சுபேந்திரநாத் தாகூர் வேகமாய் வந்து, அவனுடன் இணைந்து கொண்டான். ஒன்றும் பேசிக் கொள்ளாமலே இருவரும் நடந்தனர். பின்னர் பார்க் தெருவில் திரும்பி, குவீன்ஸ் கார்டனையடைந்து, ஓர் ஒதுக்குப் புறந்தேடி உட்கார்ந்தனர்.

சிகரெட் பற்றவைத்துக் கொண்டபின், "ராஜ்குமார் உன் கடிதம் மிஸ்டர் ராஜா ராமை சென்றடைந்திருக்குமல்லவா?" என்று கவலையுடன் சுபேந்திரநாத் தாகூர் வினவினான்.

"அநேகமாய்ப் போய்ச் சேர்ந் திருக்கும்."

"அவர் மகன் தப்பிச் செல் லும் போது சுடப்பட்டுக் கட லில் மூழ்கியதாய்க் கிடைத்த செய்தியை நாம் மறைத்தது சரிதானா என்பது இன் னும் என்னைக் குடைந்து கொண்டிருக்கிறது, ராஜ் குமார்."

"என்னைப் பொறுத்த வரையில் நாம் பொய் சொன்னது சரியே, சுபேந்தர். தம் மகன் என் றாவது ஒருநாள் திரும்பி வருவான் என்று எண் ணிக் காத்திருக்கும் அவன் பெற்றோரின் ..ம்பிக்கையைச் சிதைக்க நான் விரும்ப ..ில்லை, சுபேந்தர். எனினும் சுடப்பட் ..ிருக்கக் கூடும் என்றும் சூசகமாய் எழுதியிருந்தோமே?"

சுபேந்திரநாத் தாகூர் மவுனமாய்ப் பெருமூச்சு விட்டவாறு கூறினான். "விநாயக் தாமோதர் சாவர்க்கர் தப்பிச் செல்லுகையில் கண்டுபிடிக்கப்பட்டு ..டப்பட்ட போதிலும் ஃப்ரான்ஸ் கடற் ..ரை வரையில் நீந்திச் சென்று உயிர் ..ப்பிவிட்டார். இன்று அந்தமான் சிறை ..ில் இருந்தாலும், ஒருநாள் விடுதலை ..ாவார் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால் அருணாசலமோ கடலில் மூழ்கிச் செத்துப் போனான். என்ன துரதிருஷ் டம், சுறுசுறுப்பான - துடிப்பான - இளை ஞன். இன்னும் இது மாதிரி நம்மில் எத்தனை பேர் சாகப் போகிறோமோ தெரியவில்லை. இவ்வாறு சுடப்பட்டும், தூக்கிலிடப்பட்டும் சாவதற்கா நம் பெற் றோர் நம்மைப் பெற்றார்கள்? என்ன அநியா யம் இது?"

"என்ன செய்வது, சுபேந்தர்..? இன்னொரு சமாசாரம் தெரியுமா உனக்கு?"

"என்ன?"

"ரத்னாகர், நம்மை இந்தியா ஹவுசில் சென்ற ஆண்டு சந்தித்துச் சென்ற மோகன்தாஸ் கரம்சந்த் காந்திக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறான்."

"அட, என்னவென்று?"

"அவர் இங்கு வந்து நம்மைச் சந் தித்துப் பயங்கரவாதத்தைக் கைவிட்டு விட்டு, அகிம்சை வழியில் போராடுமாறு அறிவுரை சொன்னாரல்லவா? அதைச் சாடித் தான். வேறென்ன? எழுதிக் கொஞ்ச நாள் ஆகிறதாம்."

சற்றுத் தொலைவில் லண்டன் போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவனின் தொப்பி தெரிய இரு வரும் எழுந்து நடக்கத் தொடங்கினார்கள். இந்தியர்களைக் கண்டாலே இப்போதெல் லாம் லண்டன் போலீஸாரின் கெடுபிடி மிகுதி யாக இருந்தது. இந்தியா ஹவுஸை நோக்கி நடக்கும் போது, "காந்தி பதிலெழுதுவாரா இவனுக்கு?" என்று கேட்டான், சுபேந்தர்.

"வரும் என்று ரத்னாகர் நம்பிக் கொண் டிருக்கிறான். ஆனால் எனக்கு என்னமோ

ஜோதிர்லதா கிரிஜா

சந்தேகமாகத்தான் இருக்கிறது" என்றான் ராஜ்குமார். "காந்திக்கு எத்தனையோ காரியங்கள். ரத்னாகரின் கடிதம்தானா அவருக்கு முக்கியம்?"

ஆனால் இருவருமே அதிசயிக்குமாறு இந்தியா விடுதியை அவர்கள் அடைந்தபோது காந்தியின் பதில் வந்திருந்தது. ரத்னாகர் சிரித்தபடி அதை இருவரிடமும் கொடுத்தான்.

"அன்புமிக்க ரத்னாகர்,


உன் காரசாரமான கடிதம் கிடைத்தது. எனது அகிம்சைக் கொள்கையை நிறையவே கேலி செய்திருக்கிறாய். நீ மட்டுந்தானா? நிறைய பேர் என்னைக் கேலிதான் செய்கிறார்கள். உங்கள் தலைவர்கள் - விநாயக் தாமோதர் சாவர்க்கர் உட்பட - நான் சொன்னவற்றை ஏற்கத்தான் இல்லை. ஒன்று, எனக்குச் சரியாக விளக்கத் தெரியவில்லை. அல்லது என்னைப் புரிந்து கொள்ளும் பக்குவம் உங்களுக்கு இல்லை. எப்படியானாலும், எனது நிலையை எழுத்தில் மறுபடியும் விளக்க இதை ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் கொண்டு நன்றி கூறுகிறேன்.

பிற உயிரினங்களைக் கொன்று தின்னாமை மட்டுமே அகிம்சையன்று. என்னைப் பொறுத்த வரையில், அகிம்சை என்பது இன்னும் விரிவானது. எவ்வளவு பயங்கரமான இம்சையையும் எதிர்த்து நிற்கும் வல்லமை வாய்ந்த ஆயுதம், அகிம்சை ஒன்றைத் தவிர வேறு எதுவுமே இல்லை. இந்து மதத்தின் அடிப்படையே அகிம்சைதான். அன்பின் மறு உருவமே அகிம்சை. நான் சொல்லும் அகிம்சை பயன்தர வேண்டுமாயின். அது நமது பேச்சு, செயல், நடத்தை ஆகிய எல்லாவற்றிலுமே ஒளிவிட வேண்டும். அகிம்சையையும் சத்தியத்தையும் கடைப்பிடிக்கிற பாதை மிக நீண்ட ஒன்றாய்த் தோன்றிடினும், அதுவே உள்ளவற்றுள் குறுக்குப் பாதை என்பதே எனது கருத்தாகும். அகிம்சை என்பது முழுக்க முழுக்க ஓர் ஆக்க சக்தி. அது அழிப்பதே இல்லை. ஆயுதத்தாலன்றி அன்பாலேயே எதிரியின் நல்ல எண்ணத்தைச் சம்பாதித்துக் கொடுக்கவல்லது. நடைமுறையில் அகிம்சையைக் கடைப்பிடிக்கும்போது, இறுதியில் எதிரியும் அகிம்சையைக் கடைப்பிடித்தாக வேண்டிய நிலை உருவாகும்.

உங்கள் நாட்டுப்பற்றைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் போகிற பாதை தான் சரியில்லை. கடவுள் உங்களுக்கு நல்வழியை விரைவில் காட்டுவாராக. அன்புடன், எம்.கே. காந்தி...."

ராஜ்குமார் கடகடவென்று நகைத்தான். "மிக நல்ல மனிதர். ஆனால் அசட்டுத்தனமான கருத்துக்களைக் கொண்டுள்ளார்... அவரை நாம் நிராகரிக்கத்தான் போகிறோம். ஆனாலும் அவர் சொல்லுகிறவற்றை முழுமையாக விவாதிக்காமல் நிராகரிக்க முடியவில்லை என்பதுதான் அவருடைய தனிச் சிறப்பு எனத் தோன்றுகிறது."

"அதுவே ஒருவகையில் அவருடைய வெற்றிதானே!" என்ற ரத்னாகர் திடீரென்று தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "நண்பர்களே, இன்னொரு மிக முக்கியமான சேதி. இந்தியாவில் கூடிய விரைவில் இங்கிலாந்து இளவரசரின் முடிசூட்டு விழா நடக்க இருக்கிறதல்லவா? அப்போது இந்தியரின் மன நிலையும், வெள்ளையர் மீது அவருக்குள்ள வெறுப்பும் இளவரசருக்கு



## கல்கி தீபாவளி மலர் : விலைமதிப்பற்ற பொக்கிஷம்!

✉ கல்கி தீபாவளி மலர்தான் நம் கையில் இருக்கிறதா அல்லது மூணாறில் நாம் இருக்கிறோமா என்று மனத்தில் ஓர் எண்ணம். படிக்க, பாதுகாக்க ஒரு சிறந்த மலர் எது என்றால் அதுதான் 'கல்கி தீபாவளி மலர்'!

சாத்தூர், எம். செல்லையா.

✉ கல்கி தீபாவளி மலரையும், எங்கள் வீட்டு தீபாவளி இனிப்புகளையும் ஒரே நேரத்தில் சுவைத்தேன். ஆனால் தித்திப்பு என்னவோ தீபாவளி மலரில் தான் மிகுதியாயிருந்தது!

சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்.

✉ 'தீபாவளி மலர்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுவதற்காக, நான் முப்பதுக்கும் மேற்பட்ட கல்கி தீபாவளி மலர்களைச் சமீபத்தில் தேடிப் பிடித்துப் பார்த்தேன். கூடவே 'இந்த வருட கல்கி தீபாவளி மலரைப் பார்த்த போதும் என்னுடைய வியப்பு கொஞ்சமும் குறைய வில்லை. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கல்கி தீபாவளி மலரென்றாலே அற்புதத்திலும் அற்புதம்தான்!

மயிலாடுதுறை, 'சின்னஞ்சிறு கோபு'.

✉ ம. செயின் அசத்தலான அட்டைப் படத்தைக் காணவே ஆயிரம் கண்கள் வேண்டும்.

விசலூர் - 1, ஜி. ஜி. கிருஷ்ணன்.

✉ கல்கி தீபாவளி மலர் ஒரு பொக்கிஷம். அதற்குள், ஆசார்ய ரத்தினங்கள், கதா ரத்தினங்கள், ஹாஸ்ய முத்துக்கள் என்று பல நவரத்தினங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. அடுத்தாற்போல் அமரர் கல்கியின் 'கமலாவின் கல்யாணம்' என்ற கதை ஓர் அமர காவியம். விலை மதிப்பற்ற பொக்கிஷம்.

சென்னை - 4, வெ. முத்துகிருஷ்ணன்.

நன்றாகப் புரியும் வண்ணம் சில அடாவடிக் காரியங்களை அங்குள்ள புரட்சியாளர்கள் செய்யத் திட்டமிட்டுள்ளார்களாம். நேற்று இந்தியாவிலிருந்து வந்த ஒருவரிட மிருந்து வந்த ரகசியத் தகவல் இது'' என் றான்.

"இந்தியாவிலிருந்து வந்த தகவல் கொடுத்த அந்த இந்தியர் யார்? யாருடன் அவர் பேசினார்?"

"அவர் பெயர் தாமோதரன் நாயர் என்பது. திருவனந்தபுரத்தில் வக்கீலாக இருக்கிறவராம். நம் ஜெய்சங்கர் சுக்லாவிடம் சொல்லி இருக்கிறார்...."

அப்போது அவர்கள் இருந்த அறையின் வாயிலில் நிழலாடியது. வந்தவன் ஜெய்சங்கர் சுக்லாதான். "போலீஸ் இன்று இந்த விடுதியைச் சோதனை செய்ய இருக்கிறார்கள் என்று திடீர்த் தகவல், விடுதியின் காவலாள் மூலம் தெரியவந்தது. அவர்கள் கண்களில் சிக்கி நமக்கு ஆபத்தையும் நம்மீது சந்தேகத்தையும் ஏற்படுத்தக்கூடியவற்றை அப்புறப்படுத்துவதோ அழித்து விடுதலோ நல்லது. ஒவ்வோர் அறையாகச் சென்று சொல்லி வருகிறேன்," என்று கூறிய பின் அவசர நடையில் அடுத்த அறைக்குப் போனான்.

ஜெய்சங்கர் சுக்லா பக்கத்து அறைக்குள் நுழைந்து சேதியைச் சொல்லிவிட்டு வெளியே வருகையில் அவனை வியப்பு, வேதனை, அதிர்ச்சி, ஆத்திரம் ஆகிய உணர்ச்சிகளில் ஆழ்த்திய மோசமான ஒரு நிகழ்ச்சியை அவன் கண்டு, கேட்க நேர்ந்தது.

விடுதியில் தங்கி இருந்தவர்களின் உபயோகத்துக்காகப் பொதுக் கூடத்தில் ஒரு தொலைபேசி உண்டு. அதில் மிக மெதுவான குரலில், "எஸ் ஸார். நீங்கள் இப்போதே வரலாம். கிட்டத்தட்ட எல்லா மாணவர்களும் விடுதியில்தான் இருக்கிறார்கள். அப்புறம் இன்னொரு விஷயம், ஸார்..." என்று மேலும் சொல்லத் தொடங்கிய மாணிக்லால் திங்ராவின் வாயை இறுகப் பொத்தித் தொலைபேசித் தொடர்பை ஜெய்சங்கர் சுக்லா துண்டித்து விட்டு, அவனை ரத்னாகர், ராஜ்குமார், சுபேந்திரநாத் தாகூர் ஆகியோர் இருந்த அறைக்குத் தரதரவென்று இழுத்துப் போய், அறையின் கதவைச் சாத்தினான்.

''நண்பர்களே, சிரித்துக் கொண்டே மரண தண்டனைக்கு ஆளான - சாவதற்கு முன்னால் வெள்ளையர்களைத் திட்டி அறிக்கையும் விட்ட - மதன்லால் திங்ராவுக்கு இவன் திருஷ்டிப் பரிகாரம். இவனும் ஒரு திங்ராதான். மாணிக்லால் திங்ரா, என்ன அசிங்கம்..." என்றவாறு, மற்ற மூவரும் ஏதும் புரியாது நின்றிருக்க, ஜெய்சங்கர் சுக்லா

அறிமுகம்

# நற்செய்தி

# TIPSTAND

## மோல்டட் கிரைண்டர் ஸ்டாண்ட்


மோல்டட் கிரைண்டர் ஸ்டாண்டுகள் உங்கள் வசதியை மனதில் கொண்டே தயாரிக்கப்பட்டது. இது எல்லா வெட் கிரைண்டருக்கும் பொருந்தும். இன்ஜினியரிங் பிளாஸ்டிக் கொண்டு தயாரிக்கப்படுவதால் மிக உறுதியானது.



**இடுப்பிற்கு நல்ல செய்தி!**
உங்கள் வெட்கிரைண்டர் இதனால் 8 இன்ச் அதிக உயரமாகிறது. ஆதலால் இடுப்பு பிடிப்பு இனி இல்லை.



**காதிற்கினிய செய்தி!**
ரப்பர் புஷ் கொண்ட கால்கள் தரையில் அழுந்த பதிவதால் கிரைண்டர் வேலை செய்யும் பொழுது ஆட்டம் இல்லை.





**கண்ணிற்கு நல்ல செய்தி!**
கண்ணைக் கவரும் வண்ணங்களில் உங்கள் இல்லத்தின் வண்ணத்தோடு ஒட்டிப்போகும்.

**பணப்பைக்கு நல்ல செய்தி!**
மிகக் குறைந்த விலை. 3/4 லிட்டர் முதல் 2 1/2 லிட்டர் வரை உள்ள எல்லா கிரைண்டர்களுக்கும் உபயோகிக்கலாம்.



உற்பத்தியாளர்கள்

**தஞ்சாவூர் இண்டஸ்ட்ரியல் பிராடக்ட்ஸ்,**

43, மேடவாக்கம் மெயின்ரோடு, கீழ்க்கட்டளை,

சென்னை-600 117. Ph: 2345135,2347841 Fax: 91-044-2347841

சென்னை மற்றும் தமிழகமெங்கும் எல்லா முக்கிய கடைகளிலும் கிடைக்கும்

மாணிக்லால் இங்ராவைக் கண் மூக்குப் பாராமல் அடிக்கத் தொடங்கினான்.

## 30

**வா**சற்படியில் கால் வைத்த குஞ்சம்மாவின் முகம் வெளிறி இருந்ததைக் கவனித்து, ராமசாமி வியப்படைந்தார்.

"என்ன, குஞ்சம்மா? எங்க போயிட்டு வர்றே?"

இதற்குள் ஓரளவு சுதாரித்துக் கொண்டிருந்த அவள், "டாக்டர் வீட்டுக்குத்தான். கொஞ்சம் வலி இருந்தது. அதான்" என்றாள்.

"என்னது? வலியா? வலியோட யாரானும் தனியாப் போவாளா? இதென்ன அசட்டுத்தனம்?"

"வேற என்ன பண்றது? சாயங்காலம் நீங்க வர்ற வரைக்கும் நான் காத்துண்டா இடக்கிறது?"

"பக்கத்தாத்துல யாரையாவது துணைக்குக் கூட்டிண்டு போயிருக்கப்படாதா? வர முடியாதுன்னா சொல்லப் போறா?"

குஞ்சம்மா இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் கதவைத் திறந்து கொண்டே உள்ளே போனாள். ராமசாமி அவளைப் பின்தொடர்ந்தார்.

"ஆமா? நீங்க ஏன் சீக்கிரம் வந்துட்டேள்?"

"எங்க ஸ்கூல் பையன் ஒருத்தன் திடீர்னு டைபாய்ட்ல செத்துப் போய்ட்டான். அதனால அரை நாள் லீவ் விட்டுட்டா. இப்ப நான் குளிக்கணும்."

"சரி. நான் உங்க ட்ரெஸ்ஸை எடுத்துண்டு வரேன். நீங்க குளிக்கப் போங்கோ."

"அது இருக்கட்டும். டாக்டர் அம்மா என்ன சொன்னாள்?"

"அங்க போனதுமே நின்னு போயிடுத்து. வாயுத் தொந்தரவுன்னுட்டா. சுக்குக் கஷாயம் போட்டுக் குடிச்சாப் போறும்னுட்டா. மாத்திரை ஏதும் எழுதிக் கொடுக்கல்லே..."

"சரி, நீ போய்ப் படுத்துண்டு ரெஸ்ட் எடுத்துக்கோ."

குஞ்சம்மா ஓரளவு நிம்மதியடைந்தவளாய் மெல்ல ஒரு பாட்டை முனகியபடி அடுக்களைக்குள் நுழைந்து காப்பி போடலானாள்.

அவளைக் கவனிக்கும் பெண் மருத்துவர் அவள் திரும்பி வருவதற்கு இரண்டே நிமிடங்களுக்கு முன்னால்தான், தற்செயலாக அத் தெருவில் ஒருவரைப் பார்க்க வந்ததாகவும் அப்படியே குஞ்சம்மாவையும் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்ததாயும் ராமசாமியிடம் சொல்லிச் சென்றது தெரியாமையால், அவள் பாட்டிலே உற்சாகம் கொப்பளித்தது.

காப்பி அருந்திய பிறகு தமது அறைக்குள் நுழைந்து ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்ட ராமசாமிக்குப் படிப்பு ஓடவில்லை. 'இந்தக் குஞ்சம்மா எங்கே போயிட்டு வரா? ஏன் பொய் சொன்னா? ஒருவேளை அஞ்சனாவைப் பார்த்து, 'எங்க ஆத்துக்காரரோட இனிமே நீ பேசிப் பழகினாத் தெரியும் சேதி' அப்படின்னு சண்டை போடப் போயிட்டு வராளோ? இப்படி அசடா இருக்காளே. அட கடவுளே...'

**கொ**ஞ்ச நேரம் கழித்து மணவாளநாயுடு வந்தார். இருவரும் வழக்கம் போல் ரொம்ப நேரம் அரசியல் பேசினார்கள்.

புறப்படும் சமயம், "உங்க மிஸஸை இன்னிக்கு ஹை கோர்ட்டுகிட்ட பார்த்தேனே" என்றார் மணவாளநாயுடு.

"ஆமாமா. டாக்டரைப் பார்த்துட்டு வரப் போயிருந்தா... அது சரி, புதுசா வேற யாரானும் மெம்பர்ஸ் சேர்ந்திருக்காங்களா?"

அவர் பேச்சை மாற்றியது புரியாமல், "இல்லேங்காணும். சேர்ந்திருந்தா சொல்லி இருப்பேனே... அப்ப நான் வரட்டுமா?" என்றவாறு மணவாளநாயுடு விடைபெற்



கணவன் : நான் என்ன தப்பு செய்திருந்தாலும் மன்னிச்சுக்கோ கமலா. அதுக்காக இப்படிக் கோபமா குதிக்காதே!

மனைவி : சே! நான் கோபமா குதிக்கலீங்க. பரதநாட்டியம் ஆடிக்கிட்டிருக்கேன்!

- அரிசி ஸ்ரீராம்



# கொல்ல வல்லாயோ, கிளியே...!

திகிலூட்டும் மினி கிரைம் தொடர்

**கல்கி**

**25.12.94** இதழில் ஆரம்பம்

எழுதப் போவது யார்....?

சாதனை படைத்த அந்த எழுத்தாளரின் பெயர் அறிய அடுத்த வாரம் வரை காத்திருங்கள்!

தார்.

மணவாள நாயுடு சொன்னதும், ராமசாமி அவசரமாய்ப் பேச்சை மாற்றிக் கூறியதும் செவிகளில் விழுந்ததில், குஞ்சம்மாவுக்குள் ஒரு சங்கடமான நடுக்கம் பரவியது. 'அப்படின்னா இவருக்குத் தெரிஞ்சிருக்கு...' குஞ்சம்மாவுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. பொய்யே சொல்லியறிந்திராதவளாதலின், அவளது படபடப்பு நொடிக்கு நொடி அதிகரித்துக் கொண்டே போயிற்று. வாசற் கதவைத் தாழிட்டு விட்டு ராமசாமி திரும்பி வந்த போது, குஞ்சம்மா அடுக்களை வாயிற்படியில் படுத்துக் கிடந்தாள். அவள் மயங்கி விழுந்திருக்க வேண்டுமென்று அவள் படுத்துக் கிடந்த நிலையிலிருந்து புலப்பட, அவர் அவசரத்துடன் ஓடிப் போய்க் குளிர்ந்த நீரெடுத்து வந்து அவள் முகத்தில் தெளித்தார். காரணம் அவருக்குப் புரிந்து விட்டதில் அவருள் அவள் பால் ஓர் இரக்கம் சுரந்தது.

சற்றுப் பொறுத்து நினைவு திரும்பப் பெற்ற குஞ்சம்மா, வெட்கமும், அச்சமும், வேதனையுமாக அவரை நோக்கி, "நான் உங்ககிட்டப் பொய் சொல்லிட்டேன்னா" என்று குழந்தை போல் ஒப்புக் கொண்டு அழுதபடியே நடந்ததையெல்லாம் கூறி முடித்தாள். முடிக்கும் வரை அவரது பார்வையைச் சந்திக்காமலும், கட்டிய கழுத்தை விடாமலும் இருந்த அவளைப் பார்க்கப் பார்க்க ராமசாமிக்குப் பரிவு மிகுந்தது.

"போகட்டும், குஞ்சம்மா. நாம ரெண்டு பேருமே எல்லாத்தையும் மறந்துடலாம்... சரியா?"

"ஏன்னா, அந்த அஞ்சனாதேவி உங்களை மயக்கினாலும் நீங்க மயங்க மாட்டேள் தானே?"

"என்னை மயக்கக்கூடிய ஒரே ஆள் குஞ்சம்மாதேவிதான்! என்னோட அஞ்சு வருஷத்துக் கட்டுப்பாட்டையும் நீர்த்துளி பண்ணிட்டு இப்ப வயித்தைப் பெரிசாக்கிண்டு நிக்கற நீதான் அதுக்கு சாட்சி..." என்ற ராமசாமி ஆதரவாய் அவளது நெற்றி மயிர்கற்றையைக் கோதினார்.

"சத்தியமா?" என்ற குஞ்சம்மா தனது வலக் கையை விரித்து நீட்டினாள். ராமசாமி தன் கையால் அதை அழுத்திப் பொத்தி, "சத்தியமாடி, குஞ்சம்மா. சத்தியமா..." என்றார்.

குஞ்சம்மா உடனே எழுந்து போய் அந்த மொட்டைக் கடிதத்தை எடுத்து வந்து அவரிடம் காட்டி விட்டுப் பின்னர் அதைத் துணுக்குத் துணுக்காய்க் கிழித்துக் குப்பையாய் வெளியே வீசிப் போட்டாள்.

(தொடரும்)




# கருணாகரனைக் கலங்க அடிக்கும் புத்தகம்!

சேஷனின் புத்தகம் போலவே இப்போது ஒரு நாடக நூல், கேரளாவில் பெரும் புயலைக் கிளப்பியிருக்கிறது. "சதாபிஷேகம்" எனும் இந்நாடகம், ஒரு பெரிய குடும்பத்திலுள்ள வசதி வாய்ந்த ஒரு தகப்பனுக்கு, முட்டாள்தனமாகவும், சோம்பேறித்தனமாகவும் உள்ள ஒரு வாரிசு; இதனால் அக் குடும்பத்திற்கு நேரும் அவலம். இதையெல்லாம் கொண்டு நகைச்சுவை பாணியில் அமைந்திருக்கிறது.

இந்த நாடகம் கேரள முதல்வர் கருணாகரனையும் அவர் மகன் முரளீதரனையும் (எம்.பி.) கிண்டல் செய்து எழுதப்பட்டிருக்கிறது என்று காங்கிரஸ் கட்சியினர் பெரும் பிரச்னையைக் கிளப்பி வருகின்றனர்.

இந்த நாடகத்தை எழுதியவர், பிரபல மலையாள திரைப்படப் பாடலாசிரியரும், திருவனந்தபுரம் வானொலி நிலையத்தின் தமிழ் நிகழ்ச்சி தயாரிப்பாளருமான எஸ். ரமேசன் நாயர். மலையாளத் திரைப்படத் துறையில் பெரும் வசூல் சாதனை புரிந்த "மணிச்சித்திரத்தாழ்" எனும் சினிமாவிற்கு இசையமைத்த எம்ஜி. ராதாகிருஷ்ணன்தான் இந்த நாடகத்திற்கும் இசையமைத்தார். இந்த இரு பெரும் பிரபலங்களும் இதில் பணியாற்றியிருப்பதால் மலையாள மற்றும் கேரளத் தமிழ் மக்களும் ஆவலுடன் இந்த வானொலி நாடகத்தைக் கேட்டனர். பிரச்னையும் எழுந்தது.

இளைஞர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் திருவனந்தபுரம் வானொலி நிலையத்தின் முன்னால் கொடும்பாவி எரித்தும், மறியல் செய்தும் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.


நாடகம் இப்படியொரு புயலைக் கிளப்பியிருக்கிறது என்றால், புத்தக வெளியீட்டாளர்களும், கேசட் வெளியீட்டாளர்களும் சும்மா இருப்பார்களா? பல லட்ச ரூபாய் கொடுத்து உரிமைகளை வாங்கிப் புத்தகத்தையும் கேசட்டையும் வெளியிட்டு விட்டார்கள். புத்தகம் வெளியிடப்பட்ட இரண்டு மூன்று நாட்களிலேயே மூன்று பதிப்புகள் விற்றுப் போய், நான்காம் பதிப்பு அச்சடிக்க வேண்டிய நிலை! கேசட்டும் அமோக விற்பனை!

இத்தனை சர்ச்சைக்கிடையில், முதல்வர் கருணாகரனுடைய நிலை என்ன? கேசட்டை வாங்கிப் போட்டுக் கேட்டார். ஆயினும் கருத்தேதும் சொல்லாமல் கப்சிப் ஆகி விட்டார்.

இதோடு இன்னொரு கவலையும் சேர்ந்து கொண்டது கருணாகரனுக்கு. அது என்ன என்கிறீர்களா?

சில மாதங்களுக்கு முன், ரமேசன்நாயர் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க பிரமுகர்களுடன் சென்று, திருக்குறளை மலையாளத்தில் மொழிமாற்றம் செய்திருக்கும் தம்முடைய நூலுக்கு கேரள அரசு பணஉதவி அளிக்க வேண்டுமென்று வேண்டியிருந்தார். இத்தனை நாட்களாக அதற்குப் பண உதவி அளிக்காமல் இருந்து வந்தார் கருணாகரன். இனிமேலும் பண உதவி செய்யவில்லையெனில் நாடகப் பிரச்னைதான் அதற்குக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் புயலைக் கிளப்புமே என்கிற கவலைதான்!

திருவனந்தபுரத்திலிருந்து: ந. சுந்தர்



Bangalore's First & only

CRISIL RATED

Finance Company

**FA +**

# உங்கள் குழந்தையை 10,000 ரூபாயில் எப்படி ஒரு எஞ்சினீயர் அல்லது டாக்டர் ஆக்குவது என்பதைக் கண்டறியுங்கள்

பிரகாஷ் லீஸிங்கின் குழந்தை கல்வித் திட்டம் 'ஆன்வெஷ்' ஆகும். தொழிற்கல்வி (புரொஃபஷனல்) கல்லூரிகளில் படிக்க இன்று கணக்கின்றி அதிகரித்து வரும் செலவைச் சமானிக்க உதவும் திட்டம் இது.

இன்று ரூ. 10,000 முதலீடு செய்து 20 வருடங்களில் ரூ. 160,000* பெறலாம். ஆம், வருடத்துக்கு 20.12% வரை வருமானம்! உங்கள் குழந்தைக்கும் வளமான வருங்காலம்!

**எங்கள் பலம் :**

- FA + கிரைஸில் மதிப்பீடு
- ரூ 2,000 லட்சங்களுக்கும் மேலான நிதியிருப்பு பலம்
- ரூ 450 லட்சங்களுக்கும் அதிகமான மூலதனம் மற்றும் ரிசர்வ்கள்
- 15,000 க்கும் அதிகமான முதலீட்டாளர்

**எங்கள் செயல்பாடு :**

- கடந்த வருடத்தில் டெபாசிட்டுகள் 200% க்கும் கூடுதல் அதிகரிப்பு
- நிதித் தொகையில் 200% குமுலேடிவ் அதிகரிப்பு
- 200% க்கும் மேலாக குமுலேடிவ் டிவிடென்டுகள் வழங்கப்பட்டன.
- ரூ 8,000 லட்சங்களுக்கும் அதிகமாக குமுலேடிவ் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.
- இத்துறையில் மிக அதிக கடன் மீட்பு விகிதம்.

மிக அதிக செயல் திறனுள்ள எங்கள் முதலீட்டுத் திட்டங்கள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு இந்த கூப்பனை இன்றே அஞ்சலில் அனுப்பவும். அல்லது தொலைபேசியில் அழைக்கவும்.

---

**prakash**
**leasing limited**

2 வது மாடி
ஸ்பென்சர் டவர்ஸ்
770. A, மவுண்ட் ரோடு.
சென்னை - 600 002.
போன் : 8520286.

**வளமானது நிலையானது ஆதரவு தருவது**

* ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் புதுப்பித்தலுக்கு உட்பட்டது.
* வட்டி விகிதங்கள் ரிசர்வ் வங்கி வரைமுறைகளுக்கு உட்பட்டவை.

இங்கு கத்திரிக்கவும்

ஆம், என் குழந்தை லட்சாதிபதி ஆக வேண்டும்.

☐ 'ஆன்வெஷ்' திட்டம் பற்றி கூடுதல் விவரம் அனுப்பவும்.

☐ உங்கள் மற்ற திட்டங்கள் பற்றிய விவரங்களை அனுப்பவும்

☐ உங்கள் பிரதிநிதியை என்னைக் காண அனுப்பவும்.

(தேவையான இடத்தில் ✓ செய்யவும்)

பெயர்: ........................................................

முகவரி: ........................................................

தொலைபேசி: அலுவலகம்..............வீடு: ..........

# மண்ணில் தெரிகிற வானம்

கைத்தலம் பற்றிய கணவனுடன் குணவதி புதுக் குடித்தனம் ஆரம்பித்து ஒரு வாரம் ஆகிவிட்டது. கல்யாணமான காந்தி தன் மேனியில் பிரகாசிப்பதை இதமாக உணர்ந்தாள்.

ரகு கைதேர்ந்த மானேஜ்மென்ட் நிர்வாகி என்பது போல், இந்த மூன்று அறை பிளாக், உணவு மேஜை, குளிர்பதனப் பெட்டி, கட்டில் மெத்தை, ஆசனங்கள் என்று பார்த்துப் பார்த்து வாங்கி வைத்திருந்தான்.

ஆனாலும் அம்மாவுடன் இரண்டு அறை ஒட்டுக் குடித்தனத்தில் இரு மடக்கு நாற்காலிகளுடன் நடத்திய வாழ்க்கை பழைய அமுது போல ருசியான நினைவுகள் தந்தன. 22 வருஷம் தன்னை வளர்த்து ஆளாக்கிய அம்மாவை விட்டுப் பிரிந்து, முன்பின் பரிச்சயமில்லாத ரகுவுடன் புலம் பெயர்ந்து வந்து, இதுதான் லட்சிய வாழ்க்கை என்று தனிக்குடித்தனம் போட்டிருப்பது எப்படி சாத்தியமாயிற்று?

அம்மா என்ற சொல்லை நினைக்குமுன் நரம்புகளில் ஒரு பாச வெள்ளம் விரைந்து ஓடுகிறது. அன்று அன்னையும் அவள் கணவனுடன் குடித்தனம் நடத்த ஆயிரம் கனவுகளுடன் வந்தவள்தான். ஆனால் மாடியில் குடியிருந்த இரண்டு வயது மூத்த கைம்பெண்ணுடன் கணவன் தொடர்பு வைத்திருப்பதை உணர்ந்தபோது, அவளது இதயம் தாங்க முடியாமல் தவித்தது. அதை முறிக்கும் வலிமை அவளது இளமைக்கு இல்லை. அவர் அந்தப் பெண்ணுடன் ஓடிப் போனபோது, குழந்தை குணவதிக்கு வயது இரண்டு. அப்புறம் கணவன் சாவுச் செய்திதான் கிடைத்தது. இல்வாழ்க்கையைக் கூறுபோட இன்னொருத்தி இருந்தாலும் அவன் கடன்களைத் திருப்பும் கடமை அம்மா தலையில் விழுந்தது. வீட்டை விற்று கோர்ட்டில் கட்டி விட்டு, குழந்தையுடன் புதிய வாழ்க்கை தொடங்கினாள்.

பிறந்தகம் செல்லாமல் அம்மா வாழ்வில் எதிர் நீச்சல் போட்டாள். பயிற்சி அற்ற நிலையில் நர்ஸரிப் பள்ளியில் உத்யோகம். ஏதோ சம்பளம். பிறகு மெள்ள மெள்ளப் படித்துப் பட்டதாரியாகி, ஆசிரியப் பயிற்சி பெற்று, தனது பொருளாதாரத்தை உயர்த்திக் கொண்டவள். 17 வயது வித்யாசம் இருந்தாலும் தோழி போல தன் அன்னையிடம் உறவாடுவாள், குணா. கல்லூரியிலிருந்து திரும்பியதும் அவ்வளவு வம்புகளையும் ஒப்புவிப்பாள். காலையில் எழுந்ததும் அம்மாவிற்கு முத்தமிட்டு விட்டுத்தான் காபி. அன்னையின் உலகமும் அவளது பெண்தான்.

இப்பொழுது தனியாக அம்மா என்ன செய்வாள்? வேளா வேளைக்குச் சாப்பிடுகிறளோ இல்லையோ? தனக்காக இத்தனை தியாகம் செய்த அம்மாவைத் தன்னுடன் அழைத்து வந்து வைத்துக் கொள்ள வேண்டுமெனத் துடித்தாள் குணவதி.


இன்னும் ஒரு வாரத்தில் குணவதிக்கு இவ்வூருக்கு மாற்றல் ஆர்டர் வந்து விடும். பள்ளியிலிருந்து ஓய்வு பெற்ற அம்மாவிற்குப் பென்ஷன் வருகிறது. தன் காலில் நிற்க முடியும். ஆனாலும் அவளது பாதுகாப்பில் அன்பு வியூகத்தில் தான் குடித்தனம் போட்டால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்.

யாரோ ஒருவனை நம்பி பாசமுள்ள அம்மாவை விட்டு விட்டு வர வேண்டும் என எப்படித் தோன்றியது. அதற்கெல்லாம் தாய்தான் காரணம். ஒரு புருஷன் கையில் ஒப்படைத்து விட்டால் எனக்கு நிம்மதி என்று வாய்க்கு வாய் உச்சரித்து, ஒரு கணவன் இமேஜை உண்டாக்கியவளே அவள்தான். அப்புறம் பருவ உணர்ச்சிகள், கல்லூரித் தோழியர்களுடன் அரட்டை, சினிமா, உலகம், டீ.வி.யில் சித்திரஹார் தந்த 'அர்த்தமுள்ள' பாடல்கள், நடனங்கள், நாவல்கள்... இப்படி மனத்திலே ஒரு கணவனின் நிழல் உருவம் மெதுவாகப் பதிந்து விட்டது. கண்ணுக் கினியான் கைத்தலம் பற்றியபோது அவனே மனத்துக்கினியானாகவும் ஆகி விட்டான்.

அம்மாவை விட்டு விட்டுப் பிரிந்தாலும் பாசம் அடித்துக் கொண்டது. "என்னங்க, என் அம்மாவை இங்கு கொண்டு வைத்துக் கொண்டால் நமக்கும் உதவி. அவங்களுக்கும் ஆதரவு...." தன் ஆதுரத்தை ரகுவிடம் வெளியிட்டாள்.

"இந்த பாரு, சித்தப்பா வீட்டில் வதவதன்னு குழந்தைகளுடன் வளர்ந்தவன் நான். எனக்கு யாருமே அற்ற உலகத்தில் எனது அன்பு மனைவியுடன் தனிக்குடித்தனம் போட வேண்டுமென்ற லட்சியம்..."

"அம்மா மட்டும் ஒரு அறையில் மூலையில் இருந்து விடுகிறாள்... நமக்கு என்ன இடையூறு... உங்க அம்மாவா இருந்தால் நான் உழைத்துக் கவனிக்கமாட்டேனா? எங்கம்மாவிற்கு நமது அருகில் தங்கும் வாய்ப்புக் கொடுத்தால் என்ன?"



"இந்த பாரு, எங்க தாயாரா இருந்தாலும் கிராமத்திலே உட்கார்த்தி வைத்து பணம் அனுப்பி விடுவேன். உன் அம்மாவிற்கு நீ பணம் அனுப்புவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை... எனக்கு வேண்டுவது மனைவி மட்டும். இச்சுவை தவிர வேறு இல்லை..."

"பொல்லாத ஆசாமி..."

"இந்த வீடு முழுக்க உன்னை ஓடிப் பிடிச்சி விளையாடுவேன். டூயட் பாடுவேன். நமது எல்லையில் வேறு ஈ, காக்கை இருக்கக் கூடாது."

"கற்பனையைப் பாரு. கண்ணன்-ராதைன்னு எண்ணமோ..."

இந்த சரசப் பேச்சைக் கண்டு அவன் அவளை அணுகினான். "தூரவே இருங்க, கொஞ்சம் இடம் கொடுத்தால் போச்சு!" என்று தப்பித்துக் கொள்வாள்.

அவ்வளவு வாதம் புரிந்தும் தன்னை பாலூட்டி வளர்த்த தாயை வைத்துக் கொள்ள முடியவில்லை. தான் சம்பாதிக்கும் உரிமை பெற்றும் இந்த விஷயங்களில் முடிவு செய்யும் உரிமை ஆண் இனத்திற்கே அளிக்கப்பட்டிருக்கிறது.

அவன் மனம் அம்மாவை நினைத்து ஏங்கியது.

**சுபஸ்ரீ**

குணாவிற்கு மாற்றல் ஆர்டர் வந்து காரியாலயம் சேர்ந்துவிட்டான்!

"டூயட் பாடினீங்களே..கடைசியிலே என்ன ஆச்சு பாத்தீங்களா?"

"என்னடா கண்ணு..."

"நாம் இருவர் நமக்கு ஒருவர்..."

"ஓடி விளையாடு பாப்பாவா? அதுக்குள்ள என்ன முந்திரிக் கொட்டைக்கு அவசரம்?"

ரகு ஒரு குழந்தைக்கு உடனே தகப்பன் ஆகத் தயங்கினான்.

குணவதி உறுதியாக இருந்தாள். "இது நமது இல்லற உச்ச சந்தோஷத்தில் உருவாகிய கரு. அதனைப் போற்றி வளர்ப்போம்" என்றாள்.

பிரசவத்திற்கு குணா தாயகம் சென்றாள். சின்ன இல்லம் என்றாலும் அன்புத் தென்றல் வீசுகிற இடம்.

கண்ணன் பிறந்தான்.

"என்னவோ போ-பிள்ளையாப் பிறந்ததே...?' அம்மாவிற்கு தான் பெண்ணாய்ப் பிறந்த அவலத்தின் நிழல், உறுத்தி இருக்கும்.

"பெண்ணா இருந்தா என்னம்மா? அதுவும் படித்துப் பாஸ் செய்து பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில்..."

குணா நிறுத்திக் கொண்டாள். பாரதி கனவு முழுக்க நனவாகி விட்டதா? தனக்கு புக்ககத்தில் முழு சுதந்திரம் கிடைத்து விட்டதோ! ஆணாதிக்கம் மறையவில்லையே!

அம்மா உடம்பு நலிவு பெற்றது. இழுத்துப் பறித்துக் கொண்டுதான் காரியம் செய்தாள். ஆனால் நெஞ்சில் உரம் இருந்தது.

பிரசவ விடுமுறையை நீட்டித்துக் குழந்தையைப் பேணினாள்.

புக்ககம் புறப்பட்டாள். குழந்தைக்கு பொன் சங்கிலி, ரப்பர் ஷீட், பிளாஸ்க், பால் தரும் புட்டி, இத்யாதி...

குழந்தைப் பேறு ஆகி உத்யோகம் பார்ப்பது எளிதல்ல. ஒரு ஆயாவைத் தேடி வைத்தாள். அவளிடம் குழந்தையை ஒப்படைத்தாலும் வீட்டை ஒப்படைக்கக் கவலையாக இருந்தது. வேளா வேளைக்கு குழவி முகம் நோக்கி உதவ வேண்டுமே! ஆபிஸிலும் அவளுக்கு நிம்மதியில்லை. எட்டு மணி நேரம் காரியாலயம். மார்பில் சுரக்கும் பால் கட்டிக் கொண்டு வலித்தது. அங்கு கண்ணனுக்கு புட்டிப்பால் என்று நெஞ்சு அடித்துக் கொண்டது. இந்தத் தாய்மைப் போராட்டம் எந்தக் க வனுக்கும் புரியாது.

ஆயா தங்கவில்லை. அம்மாமி வந்தாள். சமையலுக்கும் உதவி. சம்பளம் அதிகம். ஆனால் கை சுத்தமாக இல்லை. அவளும் விட்டுச் சென்று விட்டாள.

குணா ஒரு வாரம் லீவு.

அப்புறம் குழந்தைக் காப்பக ஏற்பாடு. அவசரச் சமையல். ரகு சற்று ஆதரவுடன் உதவினான். குழந்தைக்கு வேண்டிய பவுடர் பால், உணவு, உடை சுருட்டிக் கொண்டு காப்பகத்தில் கொண்டு விட்டு, இதயம் படபடக்க ஆபீஸ் செல்ல வேண்டும். நல்ல வேளை! போகும்போது, ரகு ஸ்கூட்டரில் உதவினான். வரும்போது அவளே சிசு காப்பகம் சென்று கண்ணனை எடுத்து வரவேண்டும். அன்னை தூக்கியதும் அவன் முட்டி முட்டிப் பால் அருந்தும் பசியைக் காணும்போது தாயுள்ளம் கசிந்தது.

காப்பகத்து ஆயா சுத்தமாக இருக்க வேண்டுமே என்ற கவலை. கண்ணனுக்கு மூக்கு ஒழுகினால் மருந்து விவரம் தெரிவித்து வந்தாலும், எப்படியோ என்னவோ என்ற ஓயாத நினைப்பு.

காப்பகச் செலவு, குழந்தையை விட்டுப் பிரிவு, இடையே ஆட்டோ சத்தம் - சம்பாதித்து இப்படிச் செலவழித்து... சம்பாதிக்கிறோம் என்ற பெருமிதம் எதற்கு? குடும்ப பொருளாதாரத்தை உயர்த்த வேலை பார்க்கும் பெண் தரும் விலை தாய்மை இன்பம் தானே!

ரகு குழைந்து வந்தான்.

"குணா, உன்னுடைய கஷ்டம் பார்க்க முடியவில்லை. குழந்தையைப் பரிவுடன் சீராட்ட ஆளில்லை..."

"வேலையை விட்டு விடவா?"

"உனக்குத்தான் கை ஒடிந்தாற் போல இருக்கும். வேலை பார்த்து, ஒரு சுதந்திர அனுபவம் சுவைத்த பிறகு, விடுவதற்கு மனம் இராது. ஹவுஸ் ஒய்ப் ஆக மாறுவதற்கு மனப் பக்குவம் வேண்டும்...'

"வேறு வழி..."

"உங்கம்மா ஊரிலே தனியாகத் திண்டாடுகிறாள். அவள் இங்கு வந்து விட்டால் இரு பக்கமும் பிரச்னை தீரும். அவளுக்கும் ஒரு கூரை. நமக்கும் ஒரு ஆதரவு. குழந்தைக்குப் பாட்டி..."

"அம்மா-ஆயா, சமையற்காரியாக இந்த வீட்டிற்குள் வரவேண்டும். ஒரு பெண்ணின் பாசத்தைச் சுவைத்து, தனிமை முறித்து, சௌகரியமாக வாழ்க்கை நடத்தும் லட்சியத்தோடு அல்ல..."

"அப்படி அல்ல குணா... உன்னுடைய கஷ்டம் நீங்க, கண்ணனுக்கு ஒரு பாசக் கரம் இருக்கட்டும்னு சொல்றேன்."

"நீங்க டேப் பாட முடியாது! குழந்தையின் அழுகுரலை அடக்கித் தேற்ற அம்மா வேண்டும். இந்த வீட்டுக் கதவு சுயநலத்துடன் திறக்கும். அப்படித்தானே!"

அவள் அவனை வெறித்து நோக்கினாள்.

"நீ யோசித்து முடிவு செய்..."

"அம்மா வர மாட்டாள்!"

குணா குரலில் உறுதி தொனித்தது. ஆணின் சுயநல விசுவரூபத்தைத் தங்களை அனாதரவாக்கிய அப்பாவிடம் மட்டுமல்ல; கணவனிடமும் கண்டாள்.

கண்ணனின் பிஞ்சுக் கன்னங்களில் முத்தமிட்டு அணைத்தபோது, அம்மாவின் ஞாபகத்தில் நெஞ்சு புதைந்து கொண்டது!

"கண்ணா நீயும் நாளைக்கு இப்படித்தான் இருப்பாயாடா!"



"என் கண் முன்னாலயே என் காதலர் கடல்ல குதிச்சிட்டார்!"

"அப்புறம்?"

"எனக்காக ஒரு ராக்கெட் எடுத்திட்டு வந்தார்!"

— கொங்கணாபுரம் வே. செந்தில்

டெபாசிட்தாரர்களுக்கு 6 மாத வட்டி உடனடியாகக் கொடுக்கப்படும்.

(ரூ.5000/-முதலீடு 1 வருடத்திற்கு மேல் செய்பவர்களுக்கு மட்டும்)

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| வட்டி விகிதம் | 18% | 18.5% | 19% | 20% | 21% |

உங்கள் முதலீடு 40 மாதங்களில் இரண்டு மடங்காகும்

பென்ஷனர்ஸ் பிளஸ்டு டெபாசிட்
19.5% to 21.5%

ஸ்ரீ சக்ரா பாண்ட்
60 மாதங்கள் 21%

ரூ. 50,000 (60 மாதங்கள் முடிந்த உடன் 1,50,000 பெறுங்கள், போனஸ் தனி)

தங்க நகைகள், இந்தியாவில் எங்கும் உள்ள சொத்துக்களுக்கும் பணம் கிடைக்கும் தொடர்பு கொள்க

Saseenadh

**SASWATHA NIDHI Ltd.,**

**H.O. : 36, Ranganathan Street, Madras - 600 017. ✆ 4346786**

B.O : 35, M.C. Road, Madras - 600 021. 34C, Railway Road, Kancheepuram - 631 501.
56, Kadappa Trunk Road, Thiruthani - 631 209.

லேவாதேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் ஸ்தாபிதம் - 1978 செவ்வாய் வார விடுமுறை ADVT.

# மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டம்-12

1. திரைப்படக் கல்லூரி மாணவர், பல கஷ்டங் களுக்குப்பின் சினிமா வாய்ப்புக் கிடைத்தது. பாரதிராஜா, பாலசந்தர், கே. விஸ்வநாத் என்று பல பிரபல டைரக்டர்களின் பட ஹீரோ. வாங்கிய விருதுகளுக்கும் குறைவில்லை. நிஜப் பெயர் : சிவசங்கர வரபிரசாத். இந்த சூப்பர் ஸ்டார் யார்? கண்டு பிடிக்க முடிகிறதா?

2. சிவாஜி கணேசன், தாம் ஏற்று நடித்த இரண்டு பாத்திரங்களுக்குச் சிலை வைப்பதற்காக நிதி சேர்க்க உதவியிருக்கிறார். எந்தப் பாத்திரங்களுக்கு?

3. சென்னை மெரீனா கடற்கரையில் கம்பர் முதல் பாரதிதாசன் வரை பலருக்கும் சிலை இருக்கிறது. இந்தச் சிலைகளில் தமிழரல்லாத மூன்று தமிழறிஞர்களின் சிலைகளும் அடக்கம். யார் அந்தத் தமிழறிஞர்கள்?

4. இந்தப் படத்திலுள்ளவர் சமீபத்திய சர்ச்சை ஒன்றில் சம்பந்தப்பட்டிருக்கிறார். பெயர் என்ன என்று அடையாளம் தெரிகிறதா?



இந்த நான்கு கேள்விகளுக்கான விடைகளையும் கீழுள்ள கூப்பனில் சரியாக வரிசைப்படுத்தி எழுதுங்கள். பத்திரப்படுத்தி வையுங்கள். 26 வது வார முடிவில் அனைத்தையும் மொத்தமாகச் சேர்த்து எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அதிகப் போட்டிகளில் கலந்து கொண்டு அதிக வெற்றி பெறுபவருக்கு மோட்டார் சைக்கிள் பரிசு. ஆறுதல் பரிசுகளும் அநேகம்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

## போட்டி - 12

1.

2.

3.

4.

பெயர் :.......................................................................

முகவரி :.......................................................................

.......................................................................



• மினியேச்சர் மாடலைப் பார்வையிடும் மாணவர்கள்

# 'ஹாப்பி' மாணவர்களுக்கு 'ஹாபி சென்டர்'!

எந்தப் பல்கலைக் கழகத்திலும் இல்லாத வசதி ஒன்றை, அண்ணா பல்கலைக் கழகம் மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தியிருக்கிறது. அதுதான் ஹாபி சென்டர். அது என்ன ஹாபி சென்டர்?

"பயிலும் போதே தங்கள் சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்ளவும், அதன் பயனாக ஏதாவது ஒரு சாதனத்தை உருவாக்கவும் இப்போதைய கல்வி முறையில் மாணவர்களுக்கு வசதி இல்லை. அதைத் தீர்த்து வைக்க ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த 'ஹாபி சென்டர்!" என்கிறார் பேராசிரியர் (டாக்டர்) எஸ். நடராஜன்.

இந்தத் திட்டத்திற்காகவே திருச்சியைச் சேர்ந்த மைக்கேல் சுவாமி என்ற இளைஞர் (இவர் பொறியியல் பட்டதாரி அல்ல என்பது குறிப்பிடத்தக்கது) தமது சொந்த ஆர்வத்தின் காரணமாகத் தயாரித்திருக்கும் (கிரைண்டரிலிருந்து ஸ்டீம் எஞ்சின் வரை) மினியேச்சர் மாடல்களில் சுமார் எழுபது மாடல்களை வாங்கி வைத்திருக்கிறார்கள்.

"உதாரணத்திற்கு ஒரு கிரைண்டர் எப்படி இயங்குகிறது என்பதை ஒரு மாணவன் தெரிந்து கொள்ள விரும்பினால், அதற்காக ஒரு நிஜமான கிரைண்டரைப் போய்ப் பார்க்கத் தேவையில்லை. இந்த மினியேச்சர் கிரைண்டரை இயக்கிப் பார்த்தாலே போதும். இப்படி ஒரே இடத்தில் நூற்றுக் கணக்கான பொருள்களின் இயக்கத்தைக் காணும் வசதியிருப்பதால், இதைக் காணும் மாணவர்களுக்கு இப்போது இருக்கும் கருவிகளின் இயக்கத்தை மேம்படுத்தவோ, அல்லது புதிதாக ஏதாவது கண்டு பிடிக்கவோ ஆர்வம் பிறக்கும்!" என்கிறார் நடராஜன்.

"மேலும் எலக்ட்ரிகல் இஞ்சினியரிங் துறையில் பயிலும் மாணவனுக்கு, மெகானிகல் இஞ்சினியரிங் சம்பந்தமான ஐடியா ஒன்று உருவாகலாம். அதே போல், மெகானிகல் துறை மாணவனுக்கு எலக்ட்ரிகல் ஐடியா ஒன்று உருவாகலாம். இது போன்ற மாறுபட்ட துறைகளைச் சேர்ந்த மாணவர்களின் சிந்தனைகளுக்கு அவர்கள் செயல் வடிவம் கொடுக்க வேண்டாமா? அதற்கும் உதவும்."

"அவர்களுக்கு யார் கைடு?"

"அந்தத் துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் உதவுவார்கள். இப்போது இந்தத் திட்டம் ஆரம்ப நிலையில்தான் இருக்கிறது. தேவையான கருவிகளில் சிலவற்றை மட்டுமே வாங்கி இருக்கிறோம்."

"இந்தத் திட்டம் 'கரிகுல'த்தில் இல்லையா?"

"இல்லை! மாணவர்களின் 'கிரியேடிவிடி'யை முழுதுமாக வெளிக் கொண்டு வர உதவும் 'எக்ஸ்ட்ரா-கரிகுலர்' ஆக்டிவிடியைச் சேர்ந்த திட்டம் இது. எனவே இருபத்து நாலு மணி நேரமும் இயங்கும் மையமாக இந்த 'ஹாபி சென்டர்'ரை நடத்த எண்ணியிருக்கிறது அண்ணா பல்கலைக் கழகம்!" என்கிறார் அவர்.

— சித்தார்த்

படம் : பாலாஜி

# வட்டமேஜை

## நாங்க அது இதுன்னு பார்த்துட்டு...

♦ 'படுமோசமான கட்டடங்கள் எழும்ப, காண்டிராக்ட் எடுப்பவர்களின் பேராசையும் அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகளின் லஞ்ச லாவண்யமும்தான்' என்ற தலையங்க வரிகள் முற்றிலும் உண்மை. இது எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மாறாத பொன் வரிகள் என்கிற நிலைதான் நீடிக்கும் என்பதுதான் மகாமோசம்!
திருவெண்ணெய்நல்லூர், தி.சி.ஆனந்தகுமார்.

♦ கடந்த காலச் சம்பவங்களை நினைவு கூர்ந்து, சுதேசமித்திரனை வாழ்த்தியுள்ளது, உள்ளத்தைத் தொட்டது!
குடந்தை, கே.என்.பாலகிருஷ்ணன்.

♦ ரத்த பாசத்தின் வலுவான கயிற்றில்தான் உடன் பிறப்புக்களின் உள்ளங்கள் பிணைக்கப்பட்டிருக்கின்றன! சகோதரிச் சுவையின் தாத்பரியமே அதுதான். கவர் ஸ்டோரி புதுமுயற்சி!
மதுரை - 9, இரா.கல்யாணசுந்தரம்.

♦ 'சகோதரிச்சுவை' கவர் ஸ்டோரி படித்தேன். என் போன்ற சகோதரிகள் இல்லாத சகோதரிகளுக்கும், ஓர் ஏக்கத்தை ஏற்படுத்தி விட்ட ஸ்டோரி. சுவை குன்றாமல் மனத்திலேயே நிற்கிறது.
இலால்குடி, ஆங்கரை பைரவி.

♦ ரொம்ப நாளாகக் கல்யாணமாகாமல் இருக்கும் ஒரு பெண்ணின் ஏக்கங்களையும், அவளே இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் படப் போகும் போது அவளுக்கு உண்டாகும் மனக் கசப்புகளையும் 'கனவுகள் தள்ளுபடி.' சிறுகதையில் அழகாகச் சித்திரித்திருந்தார், எழிலரசு.
அரூர், மு.மதிவாணன்.

♦ 'லீவு வேணுமா லீவு?' யோசனைகள் எங்கள் சூப்பர்வைசரிடம் செல்லுபடியாகாது. அவரும் கல்கி படிக்கிறாரே!
சென்னை - 48, அம்பிதம்பி.

♦ பெரிய மருது படத்தின் குறை நிறைகளை நடுநிலையாக அலசிய விமர்சனம் அருமை!
ஏத்தாப்பூர், செவேகா.

♦ 'எம்.ஜி.ஆர். உயில் - கனவு நனவானது!' என்ற கட்டுரையைப் படித்ததும் மனதிற்கு சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனால் காலதாமதத்திற்கு நிதி வசதி இல்லாமை என்ற கருத்தைத்தான் எங்களால் ஜீரணிக்க முடியவில்லை. அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு வாழும் அரசியல் தலை(வி)வர்கள் இதற்கு நிதி அளித்திருக்கலாமே...?
தம்மம்பட்டி, க. கிருஷ்ணமூர்த்தி.

♦ விளம்பரத்திற்காக ஆண்டிற்கு எவ்வளவு செலவு என்பது பற்றிய புள்ளி விவரம் கண்டேன். இதில் முக்கியமான ஒன்றைக் குறிப்பிட மறந்தது ஏனோ? அதுதான் அம்மா ஆட்சியில் அவரைத் துதித்துப் பல்வேறு அரசுத் துறைகளும், அ.தி.மு.க. கட்சியும் செய்யும் விளம்பரங்கள். எண்ண முடியாது என்பதால் விட்டிருப்பீர்கள் என எண்ணுகின்றேன்.
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

♦ நாங்க அது... இது... ன்னு பார்த்துட்டு, மறுபடியும் கல்கிக்கே வந்துட்டோம். ஏன்னா... அதிலே ஆபாசமில்லாத அருமையான சிறுகதைகள் இருக்கு. அறிவு பூர்வமான கட்டுரைகள் இருக்கு. அதுமட்டுமில்லாம இப்ப 'பார்த்திபன் கனவு' தொடர்கதை வேறு வருதே!
இராசிபுரம், எஸ்.சுப்புலட்சுமி.

♦ 'அமைதியாகச் சாவதற்கு உரிமையில்லையா?' போன்ற வித்தியாசமான தொகுப்புகள் கல்கியின் மதிப்பை உயர்த்துகின்றன. இது தொடரட்டும். மொத்தத்தில் ஒரு இண்டலெக்சுவல் இஷ்யூ...
திருச்சி, ஜென்மா.

# பாலம்... ...பாலம்



●● பேராசிரியர் ரா.ஸ்ரீ. தேசிகன் எழுதி, கல்கத்தா பாரதி சங்க ஆதரவில் வெளி வந்த "கவிதைக் கலை" நூலின் பாகங்கள் தேவை.

– திருவேந்தி,
23, அயக்ரீவ நகர் ஒன்று,
சென்னை – 600 088.

●● மந்திராலய மகான் ஸ்ரீ ராகவேந்திரர், பக்தர்களின் குறை தீர்த்த சம்பவங்களைத் தொகுத்து புத்தகமாக வெளியிட எண்ணுகிறேன். அன்பர்கள் தத்தமது அனுபவங்களை எழுதி அனுப்பவும்.

– ஆர்.எஸ்.ராவ்,
2089, பாப்பண்ணா சந்து,
தஞ்சாவூர் – 9.

●● மாதம் 200டன் தேங்காய் மேல் ஓடுகள் – நொறுக்கப்பட்ட சிப்ஸ் – பாய்லருக்குத் தேவைப்படுகிறது. சப்ளை செய்யக் கூடியவர்கள் எழுதவும்.

–வி.பாலசுப்பிரமணியம்,
87/3, ராமநாயக்கன் தெரு,
சென்னை – 600 034.

●● ராஜேஷ்குமார் எழுதி அசோகன் வெளியிட்ட கிரைம் மாத நாவல் நூறும் தொகுத்துள்ளேன். மூன்று இதழ்கள் மட்டும் காணாமல் போயின. 1) திருமண அழைப்பிதழ், 2) விவேக்கின் ஆயிரம் நிமிசங்கள், 3) ரோஜாமுள் கிரீடம். இவற்றை அனுப்பினால் சன்மானம் உண்டு.

– அ.ராஜா சொர்ணசேகர்.
2-சி/8 நடராஜா காலனி,
சிவகாசி – 626 123.

●● உத்திராட்ச மணிகளைப் பற்றி விரிவாக அறிய விரும்புகிறேன். சிறப்பு பலன்கள் பற்றி அறிந்தவர்கள் எழுதவும். அல்லது புத்தகம் இருந்தால் அனுப்பவும். அதற்கான விலை தருகிறேன்.

– எஸ்.நடராஜன்,
30, மேத்யூ நகர்,
புகலூர் – 639 113.

●● உல்லன் நூலில் சால்வை போன்றவையும், குரோஷா ஒயரில் கூடை, மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட கைத் தொழில் கற்றுத் தரப்படும். வீட்டிலிருந்தே சம்பாதிக்கலாம்.

– மல்லிகா கிருஷ்ணராஜ்,
4 - B, ராஜா தெரு,
திருவாரூர் – 610 002.

●● வீட்டில் எளிய மருத்துவம் என்ற தலைப்பில் நூல் வெளியிட உள்ளேன். சித்த மருத்துவர்கள், பரம்பரை வைத்தியர்கள், பாட்டி வைத்தியம் செய்வோர் அனுபவ உண்மைகளை எழுதி அனுப்ப வேண்டுகிறேன்.

– எஸ்.நடராஜன்,
சித்த மருத்துவர்,
பி25, லாயல் மில் லைன்,
மெயின்ரோடு,
புதுக்கிராமம்,
கோவில்பட்டி – 627 701

●● சோலார் ஃபோட்டோ வோல்டிக் பானல்கள் வீட்டு உபயோகத்துக்கு அமைக்க விரும்புகிறேன். எங்கு கிடைக்கும்? எவ்வளவு செலவாகும்? ஆலோசனை கோருகிறேன்.

– தி.சி.ஆனந்தகுமார்,
2, தெற்கு தெரு,
திருவெண்ணெய்நல்லூர் – 606 203.

●● சமூக, பொருளாதார, பின்தங்கிய, திறமையான +2 மாணவ மாணவியருக்கு இலவச அஞ்சல்வழிப் பயிற்சி அளிக்கிறோம்.

– ஜி.சித்ரா,
ஸ்டார் இன்டர்நேஷனல்,
56, ராஜாஜி காலனி,
ஆத்தூர் – 636 102.

●● சுவாமி ஐயப்பனின் திருவருள் கருணையைத் தொகுத்து உலகறியச் செய்ய, ஒரு பிரார்த்தனை. நேர்முக அனுபவம் பெற்ற பக்திமான்கள் எழுதி உதவவும். பெயர் வெளியிடப் படமாட்டாது.

– யோகேஷ் மித்ரா,
133, சாயி நகர், 4-வது தெரு,
விருகம்பாக்கம்,
சென்னை – 92.

**(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது. ஆர்.)**



# ஞானம்

## சுகி சிவம்

'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்று ஒரு பழமொழி உண்டு. இது நம் கல்விக்குப் பொருந்துவது போல் வேறு எதற்கும் பொருந்துமா என்று தெரியவில்லை. பள்ளி, கல்லூரி பாடத் திட்டங்களால் உருவாக்கப்படும் நம் இளைஞர்கள், வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுகொடுக்க முடியாமல் படுகிற பாடு... அப்பப்பா...!

அதனால்தான் "நிறை ஞானத்தைப் புத்தகங்களில் தேடாதே.. ஞானியிடம் பாடம் படி; ஞானியைப் படி" என்று வழிகாட்டுகிறான் கண்ணன். சட்டம் படிக்கிறோம் என்ற ஆங்கில மேலாண்மையுடன் இருந்த நரேந்திரனுடைய கல்வி அறிவு, பள்ளிக் கூடத்தின் படி மிதிக்காத கிராமத்துக் கிழவனின் பெருஞானத்திற்கு முன்பு மண்டியிட்டது, வங்காளத்தில் நிகழ்ந்த வரலாறு...

பகவான் ராமகிருஷ்ணர் விவேகானந்தரை அழைத்து ஒரு முறை கேட்டார்...

"நரேன்... நீ ஒரு ஈயாகப் பிறந்து, ஒரு கிண்ணம் நிறைய அமிர்தம் இருந்தால் எப்படி உண்பாய்?"

"என் ஆறு கால்களாலும் கிண்ணத்தின் விளிம்பை எச்சரிக்கையாகப் பிடித்துக் கொண்டு, வயிறு முட்ட அமிர்தத்தை உண்ணுவேன்!" பதில் தந்தார் நரேந்திரர்.

"ஏன்? ஆறுகால்களாலும் எச்சரிக்கையாகப் பிடித்துக் கொண்டு என்கிறாய்?"

"உள்ளே விழுந்தால் மரணம் வந்துவிடுமே!" என்றார் விவேகானந்தர்.

கலகல என்று சிரித்த குருதேவர், "அதுதான் அமிர்தமாயிற்றே! முதல் துளி உள்ளே போனதும் மரணம் வராதே.. விழுந்து புரண்டாலும் ஆபத்தில்லையே..." என்று விளக்கம் கூறினார்.

அறிவு வேறு; அனுபவம் வேறு. ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி. தோட்டக் கலை இயலில் முதுகலைப் பட்டம் பெற்றவர் பண்ணை ஒன்றின் இயக்குனராகப் பதவி ஏற்றார். கம்பீரமாகக் கை வீசியபடி தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தார். ஐம்பதாண்டு கால அனுபவம் மிக்க தோட்டப் பணியாளர் கைகளைக் கட்டியபடி பின்னால் வந்தார். அடர்ந்து கிடந்த குட்டை மரத்தைச் சுட்டிக்காட்டி, "இதில் இலைகளை எல்லாம் தரிக்க

விடணும்" என்று உத்தரவு போட்டார்.

"சரிங்க..." என்றார் பண்ணை ஊழியர்.

"நல்லா இலை எல்லாம் வெட்டி விட்டாத்தான் மாங்காய் நிறைய காய்க்கும் தெரியுமா?" என்றார் அதிகாரி.

"எவ்வளவு வெட்டினாலும் மாங்காய் காய்க்காதுங்கோ."

பண்ணை ஊழியர் பணிவாகப் பதில் சொன்னார்.

"ஏன்யா காய்க்காது... ஏன்யா மாங்காய் காய்க்காது?" சீறி விழுந்தார் முதுகலைப் பட்டதாரி.

"அது இலுப்பை மரங்க. அதில மாங் காய் காய்க்காது" என்றார் அனுபவஸ்தர். அறிவு வேறு... அனுபவம்வேறு.

# கிடைக்கும் நல்ல இடம்

சின்ன விஷயம் முதல் பெரிய விஷயம் வரை குரு என்கிற அங்கீகாரம் அவசியம். ஒரு குருவுக்குத் தேவையான சகல தகுதிகளும் நிரம்பப் பெற்ற ராமானுஜர் பக்குவம் பெறும் பொருட்டு பல்வேறு குருமார்களிடம் படியேறிப் பாடம் கேட்டார். விஷயங் களும் விவரங்களும் புத்தகத்தில் இருக் கும். விவேகமும், வைராக்யமும் ஞானிகள் பழக்கத்தில்தான் வரும்.

'சுகர்' என்ற திருநாமம் உடைய சுகதேவர் வியாச மகரிஷியின் திருப் புதல்வர். பிறப்பிலேயே சகல ஞானமும் பெற்றவர். அவரது பெருமைக்கு ஒரு நிகழ்ச்சி சொல்கிறேன்.

நீர்நிலையில் நீராடிக் கொண்டிருந்த பெண்கள் வியாசமகரிஷி வருவதைக் கண்டு நாணினார்கள். ஆனால் அவரைக் காட்டிலும் இளைய, வாலிப ரான சுகதேவர் வந்தபோது வெட்கப்பட வில்லை. அதிர்ந்து போனார் வியாசர். "பெண்களே... வயதான என்னைக் கண்டதும் நாணம் கொள்கிறீர்கள். வாலிபனான என் மகனைக் கண்டு நீங்கள் நாணப் படவில்லையே... ஏன்?" என்றார்.

"பெண்களே என்று எம்மை அழைத்தீர்கள் அல்லவா அதுவே காரணம்!" என்றார்கள் பெண்கள். "ஆம்... நாங்கள் பெண்கள் என்ற பேத உணர்வு உம்மிடம் உள்ளது. ஆனால் சுகதேவர் இந்தப் பேத உணர்வு அற்றவர்" என்றார்கள்.

அப்படிப்பட்ட மகான் சுகர். அவரை அழைத்து வியாசர் ஜனகரிடம் சீடனாகப் போகும்படி கட்டளை இட்டார்... ஏன்? ஒரு குருவின் முத்திரை, அங்கீகாரம் சுகருக்குத் தேவை என்று தீர்மானித்து, சுகதேவரை ஜனகரிடம் அனுப்பினார்.

ஒரு நகரத்தின் ஆடம்பரத்தால் கிராம வாசிக்கு ஏற்பட வேண்டிய பிரமிப்பு சுகரிடம் தோன்றவில்லை. விசாலமான மாளிகையின் உப்பரிகையில், ராஜ அலங்காரத்துடன் இருந்த ஜன கரைத் தயக்கமின்றி நோக்கினார் சுகர். இருவருக்கும் நடந்த உரையாடலே ஒரு உபநிடதம் போல...

"குழந்தாய் எதற்கு வந்தாய்?"

"ஞானம் பெற!"

"உன்னை அனுப்பியவர் யார்?"

"வியாச முனிவர்."

"வரும் பொழுது கடைத் தெருவில் என்ன என்ன பார்த்தாய்?"

"சர்க்கரைப் பண்டங்கள்."

"வேறு ஏதும் பார்த்தாயா?"

"பேசிக் கொண்டே சுற்றிவரும் சர்க்கரை பொம்மைகள்?"

"இன்னும் என்ன பார்த்தாய்?"

"இங்கே ஏறிவரும் உறுதியான சர்க்கரை மெத்தைப் படிகள்."

"இங்கே என்ன நடக்கிறது?"

"ஒரு சர்க்கரை பொம்மை இன்னொரு சர்க்கரை பொம்மையுடன் உரையாடுகிறது!"

"நீ போகலாம். உனக்கு எல்லா ஞானமும் வந்து விட்டது"... என்றார் ஜனகர்.

பாம்பின் கால் பாம்பறியும். ஞானியை ஞானியே அறிவான். நண்பர்களே... ஞானத்தைத் தேடுபவர்கள், ஞானியைத் தேடுவதே முதல் வேலை.

டிரஸ்ட் ப்ளஸ்

எனில்

உங்கள் வீட்டிலேயே எங்கள் சேவை



## INVITES DEPOSITS

Fixed Deposits will be accepted at the following rates of interest and subject to the terms and conditions as indicated in the form of application of deposit available at the administrative Office and other branch offices of the Company.

**DEPOSIT SCHEMES**

| CUMULATIVE DEPOSIT SCHEME | | | FIXED DEPOSIT SCHEME | |
|---|---|---|---|---|
| Period in Months | For Rs. 1000 Deposit Amount Payable on Maturity | Effective Annual Yield | Period in Months | Rate of Interest per annum Monthly Quarterly |
| 12 Months & 1 Day | Rs. 1150/- | 15.00% | 12 Months & 1 Day | |
| 24 Months & 1 Day | Rs. 1321/- | 16.05% | 24Months & 1 Day | |
| 36 Months | Rs. 1518/- | 17.27% | 36 Months | |
| 48 Months | Rs. 1745/- | 18.63% | 48 Months | 14% 14.16% |
| 60 Months | Rs. 2006/- | 20.12% | 60 Months | |

| RECURRING DEPOSIT SCHEME (Minimum Rs. 500/-) | | | |
|---|---|---|---|
| Period in Months | Rate of Interest Per Annum | Maturity Value (for Rs. 500) | For Every Additional Rs. 100/- |
| 12 Months & 1 Day | 14% | Rs. 6480/- | Rs. 1296/- |
| 24 Months & 1 Day | | Rs. 13915/- | Rs. 2783/- |
| 36 Months | | Rs. 22470/- | Rs. 4494/- |

1. Interest warrants payable at par at all branches of SBI

Information required to be specified as per Non-Banking Financial Companies (Reserve Bank) Direction, 1977 and Non-Banking Financial Companies and Miscellaneous Non-Banking Financial Companies (Advertisement) Rules, 1977, are given below.

A. Name of the Company : The Investment Trust of India Ltd.

B. Date of Incorporation : 2nd August 1946

C. Business carried on by the Company and its subsidiaries with details of branches or units, if any :
Business : Hire Purchase Financing, Investments, Leasing, Industrial Financing, Mortgage Financing etc.
Subsidiary : I.T.I. Pioneer AMC Ltd. And I.T.I. Capital Markets Ltd.
Branches : Refer to Head Office.

D. Brief Particulars of the Management of the Company.
The Company is managed by the Managing Director under the supervision, direction and control of the Board of Directors.

E. Name, address & occupation of the Directors.
Mr. B.H. KOTHARI, Chairman & Managing Director, "Kothari Bagh", 11, Nungambakkam High Road, Madras 600034, Industrialist. Mr. A.L. MUDALIAR, "Anand", 358, Poonamallee High Road, Kilpauk, Madras 600010, Business Executive & Management Consultant. Mr. G.K. SUNDARAM, "Ranakondalu" Circuit House Road, Coimbatore 641018, Industrialist. Mr. G. CHIDAMBAR, 101-A, Janakpuri, 2nd St. Off. Velachery Road, Madras 600032, Former Managing Director LIC. Mr. N. SRINIVASAN, T-18, Sixth Avenue, Besant Nagar, Madras 600090, Chartered Accountant. Mr. RAM GANAPATHI, No. 27, "Ashok Crescent", D.L.F. Kudip Enclave, Phase-1, Gurgaon, Haryana - 122 001. Former Chairman of BIFR. Mr. C.R. RAMAKRISHNAN, "Meenakshi", No. 4, Sir P.S. Sivasamy Road, Mylapore, Madras 600 004. Former Joint Managing Director of Larsen & Toubro Ltd. Mr. M.R. SHAH, A-23/24, Woodlands Apartments, Peddar Road, Bombay 400026, Business.

**ICRA RATING**
**MAA+**
**HIGH SAFETY**

# எங்களை வீட்டுக்கு அழைத்து முதலீடு செய்யும் அளவுக்கு எங்கள் பிக்செட் டெபாசிட்டுகளில் மக்கள் தீவிர ஆர்வம் காட்டுகின்றனர்.

➢ இத்தகைய சேவையை வழங்குவதாக எல்லா நிதி நிறுவனங்களுமே பெருமை கொள்ள முடியாது. உங்கள் ஊரில் எங்கள் கிளை இருந்தால், தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள். ITI-யில் முதலீடு செய்வது பற்றிய முழு விவரங்களுடன் நாங்களே உங்கள் வீட்டுக்கு வருவோம். அதோடு எங்கள் சேவை முடிந்து விடாது. அத்துடன் வரும் மற்ற சிறப்புகளையும் சற்றே பாருங்கள். ➢ இலவச வரி ஆலோசனை *. எங்களது 35 கிளை அலுவலகங்களின் மூலம் எங்களுடன் நீங்கள் எளிதில் தொடர்புகொள்ளும் வசதி, ➢ இவை அனைத்துமே ITI-யின் டிரஸ்ட் ப்ளஸ் தரும் கூடுதல் நன்மைகளாகும். இந்தக் காரணங்களால்தான் தென்னிந்தியாவிலுள்ள பெரும்பாலான குடும்பங்கள் ITI-யில் முதலீடு செய்வதில் முனைந்துள்ளன. ➢ இது நம்பிக்கையின் அடிப்படையில் உருவான மரபு. இப்படி இன்னும் எத்தனையோ. இவற்றை எல்லாம் நீங்கள் வரவேற்பீர்கள் என்பதில் சந்தேகம் என்ன? ITI எனில் கூடுதல் நன்மைகள் பல.

A TRADITION OF TRUST
SINCE 1946

**தி இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிமிடெட்**
ஒரு H. C. கோத்தாரி குருப் கம்பெனி

மஷ்கூர் பில்டிங்ஸ், 1, கிருஷ்ணமாசாரி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
தொ.பே: 8276297, 8274871, 8274885, 8271691

★ இந்த சேவை சென்னைக்கு மட்டுமே விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
இந்த சேவையால் ஏற்படும் பொறுப்புகளுக்கு ITI பொறுப்பாளி அல்ல.

(F) Profits of the Company before and after making provisions for tax for the three financial years immediately preceding the date of advertisement

(G) Dividend declared by the Company in respect of the said year. (Rupees in lakhs percentage).

| | Profit before Depreciation & taxation | Profit before taxation | Profit after taxation | Amount (Rs. in lakhs) | Percentage |
|---|---|---|---|---|---|
| | (Rupees. in lakhs) | | | | |
| 31-3-94 | 752.74 | 434.91 | 411.91 | 76.27 | 35 |
| 31-3-93 | 474.37 | 307.08 | 291.08 | 76.27 | 35 |
| 31-3-92 | 312.81 | 187.44 | 183.19 | 56.10 | 28 |

(H) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets.

| LIABILITIES | 31-3-94 (Rs. in lakhs) | 31-3-93 | ASSETS | 31-3-94 (Rs. in lakhs) | 31-3-93 |
|---|---|---|---|---|---|
| Share Capital | 217.88 | 217.67 | Fixed Assets | 3239.01 | 2438.88 |
| Reserves & Surplus | 1233.31 | 897.35 | Investments | 741.13 | 215.66 |
| Secured Loans | 3229.69 | 2766.40 | Current Assets, Loans & Advances | 8671.19 | 6066.06 |
| Unsecured Loans | 5290.77 | 2802.41 | Miscellaneous Expenditure | 14.79 | 16.22 |
| Current Liabilities | 2535.08 | 1916.60 | | | |
| Provisions | 159.39 | 136.39 | | | |
| | 12666.12 | 8736.82 | | 12666.12 | 8736.82 |

Note : Contingent Liabilities not provided for

(i) On partly paid Shares and Debentures — Rs. 5.08 lakhs

(ii) Sales tax on lease contracts under writ petitions — Rs. 22.35 lakhs

I. The amount which the company can raise by way of deposit under Reserve Bank of India directions — Rs. 143.64 crores.
Aggregate of deposits actually held on the last day of the immediately preceding financial year, viz 31-3-94 — Rs. 37.88 crores

J. The Company has no over due deposits other than unclaimed deposits.

K. It is hereby declared that :

(i) The company has complied with the applicable provisions of the directions.

(ii) The compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India.

(iii) The deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities.

The above text of this advertisement has been approved by the Board of Directors on 27-5-94

(By order of the Board)
For The Investment Trust of India Limited

**P.S. Balasubramanian**
Chief Executive and Secretary.

Note : A copy of this text duly signed by a majority of the Directors of the Company has been filed with the Reserve Bank of India, Bangalore.

# 'என் பெயரை எதற்கும் வைக்க வேண்டாம்' என்கிறாரே ஜெ?

● சுப அண்ணாமலை, நாகணம்பட்டி.

*? கல்கியை இன்னும் ஜன ரஞ்சகமாக ஆக்க உத்தேசம் உண்டா?*

! ஜனரஞ்சகம் என்றால் ஆபாசம், வன்முறை, வதந்தி பரப்புதல், கத்திரிக்கோல் வேலை இவைதாம் என்றால் ஸாரி, கல்கி ஜனரஞ்சக



• உறுதியா? பிடிவாதமா?

• தமிழகமே மொட்டை!



மில்லைதான். நமது குறிக்கோள் ஆரோக்கியமான ஜன ரஞ்சகம்.

● ஆர். அப்துல்சலாம், திருச்சி.

*? "உத்தரப்பிரதேசத்தில் 425 சட்டமன்ற உறுப்பினரில் 180 பேர் தண்டனை அடைந்த கிரிமினல்கள்'' என்று சேஷன் தெரிவித்துள்ளாரே?*

! "ஹய்யா! பாக்கி 245 பேர் கிரிமினல்கள் இல்லையே!" என்று உ.பி. தலைவர்கள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

● மா. பழனிசாமி, கோவை.

*? சேஷனின் நடவடிக்கைகளால் ஆந்திரா, கர்நாடகா தேர்தல்களில் ரூ. 100 கோடிக்கு மேல் செலவுகள் மிச்சப்பட்டிருப்பது...?*

! நல்ல ஆரம்பம். தொய்வின்நித் தொடரட்டும்.

● ச. ஜான் ரவி, கோவில்பட்டி.

*? "அ.தி.மு.க. ஆட்சி இன்னும் 25 ஆண்டுகள் இருக்கும்; நான் இன்னும் பத்து ஆண்டுகள் நிதி அமைச்சராக இருப்பேன்'' என்கிறாரே, நெடுஞ்செழியன்?*

! அரசின் வரி வருவாய் கணிசமாகப் பெருகியுள்ள போதிலும் அரசின் சொத்துக்கள் ரொம்பவும் குறைந்து போய், கடன் சுமையே மிக அதிகமாக உயர்ந்துள்ளதாகப் பிரதம கணக்காயர் சுட்டிக் காட்டியிருக்கிற நிலையில், நெடுஞ்செழியன் இன்னும் பத்தாண்டு காலம் நிதி அமைச்சராக நீடித்தால் தமிழகமே மொட்டைதான்!

● ஏ. ஜஹுபர்காதர், அரியநாயகிபுரம்.

*? அமைச்சர் இந்திரகுமாரி 'ஜெ'யிடம் ரூ. 90 லட்சம் நிதி கொடுத்துள்ளது பற்றி...?*

! இன்னொரு பத்து ரூபா சேர்த்துத் தந்திருந்தால் "கோடி கொடுத்த குமாரி" என்று கவித்துவமாக வாழ்த்தப்பட்டிருக்கலாம்; ஹூம்...

● என். பாலன், திருச்சி.

*? மீண்டும் மேல் சபை சாத்தியமா?*

! மூத்தோர் சொல் கேட்கும் பக்குவம் இருந்தால் சாத்தியமே. இடையூறாக நினைக்கும் சர்வாதிகாரப் போக்குக்கு சாத்தியமில்லை.

● ஜி. செல்வராஜன், வெங்கலம்.

*? தமிழ் மாநாடு - விளம்பரப் பிரியத்தால் நடத்தும் கட்சி மாநாடு போல்தான் இருக்குமா?*

! இப்போது பார்க்க, அப்படித்தான் இருக்குமென்று தோன்றுகிறது. நமது கணிப்பு தவறானால் ரொம்ப மகிழ்ச்சி.

● எஸ். கே. மூர்த்தி, கும்பகோணம்.

*? சேஷனிடம் இருப்பது உறுதியா? பிடிவாதமா? அதிகாரமா?*

! மூன்றும் இருக்கிறது. அத்துடன் கொஞ்சம் அசட்டுத்தனமும் சேர்ந்திருப்பதுதான் கஷ்டப்படுத்துகிறது. உதாரணமாக தமது வாழ்க்கை வரலாறு நூலில் எழுந்துள்ள சர்ச்சைகளை ரொம்பச் சுலபமாக சமாளித்திருக்கலாம். அசட்டுப் பிடிவாதம் குறுக்கே நிற்கிறது. வாக்காளர் அடையாள அட்டை எக்கச்சக்க பிரச்னைகளைத்



• தமது சொற்களை நாமே...

• கோடி கொடுத்த குமாரி!





• பகுதி நம்பியது!

* உளவா கட்டிக்கு...



தோற்றுவித்துள்ளது. லேட்ட்ஸ்ட்டாக முஸ்லிம்கள், 'குடியுரிமை இழப்போம்' என்ற அச்சத்தில் கிளர்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள். தவிர உயர்நீதி, உச்சநீதி மன்றங்களில் சேஷனின் பல உத்தரவுகள் தொடர்பாக ஏரான வழக்குகள். உறுதி, பிடிவாதம், அதிகாரம் எல்லாம் சட்டத்துக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டும். வரம்பு மீறி அல்ல. சட்டம் சரியில்லை எனில் திருத்த முயற்சி செய்ய வேண்டுமே தவிர, 'நான் விதிப்பதே சட்டம்' என்று செயல்படக் கூடாது - நோக்கம் நல்லதாய் இருந்தாலும் கூட.

● ஈ. ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.

*? பரிதி இளம்வழுதியை பேரவைத் தலைவர், "......", "......", "......", என்றெல்லாம் வர்ணித்ததாகக் கூறப்படுகிறதே?*

! என்ன ஸார் இது? அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதையெல்லாம் எழுதி ஆபத்தை விலைக்கு வாங்க நீங்க! தமது சொற்களை சபாநாயகர் தாமே நீக்குவது என்பது சட்டமன்றத்தின் தரம் எந்த அளவில் இருக்கிறது என்பதை உணர்த்தும்.

● ஈ. ஆர். குணநாதன், கோவை. ■

*? எஸ்.டி.எஸ். பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி பேரவைத் தலைவர் ஆணை பிறப்பித்திருக்கிறாரே?*

! இல்லாது போனால் எஸ்.டி.எஸ்ஸின் ஒப்புதல் வாக்கு மூலம் அவரை அமைச்சரவையிலிருந்தே நீக்க வேண்டிய நிர்பந்தத்தை உருவாக்கியிருக்குமே!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

*? 'இனிமேல் என் பெயரை எதற்கும் வைக்க வேண்டாம்' என்று 'ஜெ' கூறியிருக்கிறாரே?*



* அபூர்வ மனிதர்



* கண்ணியம்

! சும்மா, உளவாக்கட்டிக்கு என்பது ஜால்ராக்களுக்குத் தெரியும்.

● வி. பரமசிவம், மதுரை.

*? அடுத்த ஆண்டிலாவது தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்குமா?*

! தட்டிக் கேட்டால், 'உங்கள் கட்சியில் உட்கட்சி தேர்தல் நடந்ததா?' என்று திருப்பிக் கேட்கிறார் முதல்வர், 'கோகுலாஷ்டமி' என்றால் 'குலாம் காதர்' என்பது போல! பிரதம கணக்காயர் அறிக்கையை விவாதிப்பது எனில், 'மத்திய மந்திரி மீது உள்ள ஸி.பி.ஐ. அறிக்கையை முதலில் விவாதிப்போம்' என்கிறார், அதைத் துருவி ஆராயத்தான் அ.தி.மு.க. எம்.பிக்கள் உள்ளனர் என்பதை மறந்து. என்ன செய்வது, அரசியல் இன்று இவ்வளவு அசட்டுத்தனமாகி விட்டது.

● பி. சாரதா, நெய்வேலி.

*? அமரர் சங்கு கணேசன் பற்றி...?*

! காந்தியத்தை ஏற்று, காந்தியத்துக்காகவே உழைத்து, இறுதி மூச்சு வரை காந்தியவாதியாகவே வாழ்ந்த அபூர்வ மனிதர். அதெல்லாம் கனவாய்த் தேய்ந்து மறைந்த ஒரு பொற்காலம் தாயே!

● புளியரை கணேசன், சென்னை.

*? காஷ்மீர் விஷயத்தை ஐ.நாவில் கொணர்ந்து, சர்வதேசப் பிரச்னையாக்கும் முயற்சியில் பாகிஸ்தான் தோல்வியுற்றிருக்கிறதே?*

! அதைச் சுட்டிக்காட்டி ஏளனம் செய்யாமல், 'பாகிஸ்தானைத் திரும்பவும் இருதரப்புப் பேச்சு வார்த்தைக்கு இணங்கச் செய்ய வேண்டும்' என்று நட்பு நாடுகளுக்குப் பிரதமர் விடுத்துள்ள கோரிக்கை கண்ணியம்.

**■ ரூ 25 பரிசு பெறுபவர் :**
**ஈ. ஆர். குணநாதன்,**
**553, என்.வி.என். லே-அவுட்,**
**கிராஸ்கட் சாலை,**
**கோவை - 641 012.**

# நாட்டாமை

எங்கள் சரத்குமார், உங்கள் சரத்குமார் என்று இரண்டு வேடங்கள். மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று யானை கட்டி 'போர்' அடிக்கும் பரம்பரை. வீரம் காட்ட, இரண்டு சீனுக்கு ஒருதரம் ஸ்லோமோஷன் நடை. அப்புறம் யூஷுவலான - மிகைப் படுத்தப்பட்ட அண்ணன் - தம்பி உறவு; பெற்றோர் பெருமை டயலாக், வில்லன் பொருமல், இன்னபிற கோலிவுட்டின் பிரதாபங்கள். இறுதியில் நீதிவழுவிய பாண்டியன் கணக்கில் அண்ணன் நாட்டாமை சர்வேஸ்வரனிடம் சரணடைய, தம்பி நாட்டாமையாகிறார்.

குஷ்பூ, மீனா நாட்டாமை வீட்டு அம்மணிகள். குஷ்பூ சில தமிழ்ப் பண்பாட்டு டயலாக் பொழிகிறார் பாருங்கள், சீட்டை பிறாண்டாத குறை. செண்டிமெண்டுக்கு மனோரமா, விනு சக்கரவர்த்தி. மேனி எழிலைக் காட்டுவதற்கென்றே சங்கவி; அழுவதற்கு வைஷ்ணவி; அடிபட்டுச் சாகவே பொன்னம்பலம். வழக்கம் போலவே சிற்பியின் இசை. எங்கெங்கோ கேட்ட ஞாபகம் வந்தாலும் மீண்டுமொரு முறை திகட்டாமல் கேட்க வைக்கிறார். காமெடியும் வழக்கம் போலவே. தமிழ் சினிமா ஹீரோ என்றாலே



கிராமத்தானாக இருந்தாலும் மண்ணை மறந்து விண்ணைச் சாடும் சூப்பர் மேனாகத்தான் இருக்க வேண்டும் என்பது அப்படி என்னதான் கட்டாயமோ தெரியவில்லை!

\- துளசி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்; வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

# TREASURE HUNT!
# புதையல் வேட்டை!

மதுரைக்கு மிக அருகில்!!

ஆம்!
மிகச்சிறிய
முதலீட்டில்



ரூ.25,000/-
அல்லது
ரூ.250 X 100
மாதங்கள்
முதலீட்டில்

20 ஆண்டுகளில் ரூ.40,00,000/- மதிப்புள்ள சொத்துக்கள்! புதையல்தானே?

25 சென்ட் நிலம் (10,000 ச.அ.) 25 தேக்கு மரம் 5 புளிய மரம் (உயர் ரகம்)

மிகச்சிறந்த நீர், மண் வளம் மிக முன்னேறிய வேளாண் தொழில் நுட்பம்.

25 சென்ட் நிலம் (10,000 ச.அ.) 20 ஆண்டுகளுக்குள் சங்கம் வளர்த்த மதுரை மாநகருடன் இது சங்கமமாகிவிடும்.

மேலும் ரூ.50/- வீதம் 30 மாதங்கள் செலுத்தி, லட்சாதிபதி ஆகும் பிற திட்டங்களும் உள்ளன.

Shree

GIL

## ESWAR GROW-TEK LTD

AGRI

H.O., 287, West Masi Street, MADURAI - 625 001. Ph:35843, FAX: 0452-34654 TELEX:0445-478 AGRI-IN

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

